விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள நாடுங்கள்
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA,
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com

சங்கு 19 வள்ளுவர் ஆண்டு 2049 ஆடி 25 வெள்ளிக்கிழமை (10.08.2018) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 234

## சிறுபான்மையினருக்கும் சகல உரிமைகளும் வழங்க வேண்டும்

### லண்டன் ஹரோவ் கவுன்சிலின் மேயர் கரீமா மரிக்கார் தெரிவிப்பு



(கொழும்பு) இலங்கையில் வாழும் சிறுபான்மையின மக்கள் அனைவருக்கும் சகல உரிமைகளும் வழங்கப்பட வேண்டியது கட்டாயம் என லண்டன் ஹரோவ் கவுன்சிலின் மேயர் கரீமா மரிக்கார் தெரிவித்துள்ளார்.(23-ம் பக்.)

## வெள்ளை வானில் கடத்தி கொலை செய்யமாட்டோம்

### நாடாளுமன்றத்தில் பிரதமர் ரணில்



(கொழும்பு)
எந்தவோரு நபரும் எந்தவொரு நேரத்திலும் போராட்டங்களை நடத்த முடியும் எனவும் அவர்களை 23

### வடக்கு அரச மருத்துவ அதிகாரிகளின்

## வேலைநிறுத்த போராட்டம் தற்காலிகமாக நிறுத்தம்

(யாழ்ப்பாணம்)
வடக்கு மாகாண அரச மருத்துவ அதிகாரிகள் இன்று முன்னெடுக்கவிருந்த வேலை நிறுத்தப்போராட்டம் தற்காலிகமாக கைவிடப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.
இது குறித்து அவர்கள் அனுப்பியுள்ள செய்திக் குறிப்பில் இலங்கை 23

## பெறுமதிசேர் வரி திருத்தம் நாடாளுமன்றில் நிறைவேற்றம்

(கொழும்பு)
பெறுமதிசேர் வரி தொடர்பான திருத்த சட்டமூலம் நாடாளுமன்றில் நேற்று வியாழக்கிழமை சில திருத்தங்களுடன் நிறைவேற்றப்பட்டுள்ளது.
குறித்த சட்டமூலம் தொடர்பிலான விவாதம் நேற்று முன்தினம் இடம்பெற்ற போதும், எதிரணியில் பெயர் குறிப்பிட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் எவரும் சபையில் இருக்காத 23

### குற்றவியல் சட்டமூலம்

## நாடாளுமன்றில் நிறைவேற்றம்

(கொழும்பு)
குற்றவியல் கருமங்களில் பரஸ்பர உதவியளித்தல் தொடர்பான திருத்தச் சட்டமூலம் பெரும்பன்மை வாக்குகளுடன் நிறைவேற்றப்பட்டுள்ளது.
சட்டமூலத்திற்கு ஆதரவாக 95 வாக்குகளும் எதிராக 31 வாக்குகளும் பதிவாகியுள்ளன இதனடி 23

### வித்தியா கொலை வழக்கு

## மேன்முறையீடு மீள்பரிசீலனை

(கொழும்பு)
யாழ்ப்பாணம் - புங்குடுதீவு மாணவி சிவலோகநாதன் வித்தியா, கூட்டு பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்பட்டு கொலை செய்யப்பட்ட வழக்கில் மரணதண்டனை விதிக்கப்பட்டுள்ள ஏழு குற்றவாளிகளினால் தாக்கல் செய்யப்பட்டுள்ள மேன்முறையீட்டு 23

## நாடாளுமன்றில் கருணாநிதிக்கு நேற்று அஞ்சலி

(கொழும்பு)
மறைந்த தி.மு.க தலைவரும் தமிழகத்தின் முன்னாள் முதல்வருமான மு. கருணாநிதிக்கு நாடாளுமன்றில் நேற்று அஞ்சலி செலுத்தப்பட்டுள்ளது.
நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற அமர் 23

### மாகாணசபையிலிருந்து

## எதிர்க்கட்சியினர் வெளிநடப்பு

(யாழ்ப்பாணம்)
ஆளுங்கட்சிக்கு உள்ளேயே எதிர்கட்சி உருவாகியுள்ளதால் எதிர்கட்சிக்கு வேலை இல்லை என தெரிவித்து வடமாகாணசபை எதிர்கட்சி உறுப்பினர்கள் சபையிலிருந்து வெளிநடப்பு செய்திருந்தார்கள்.
வடக்கு மாகாணசபையின் 129 ஆவது 23

## வவுனியாவிலிருந்து யாழ் வரை ஏ9 வீதியில் விபத்துகளை தடுக்க

### மாகாணசபையில் தீர்மானம் நிறைவேற்றம்

(யாழ்ப்பாணம்)
வவுனியாவில் இருந்து யாழ்ப்பாணம் வரையிலான ஏ9 வீதியில் ஏற்படும் வீதி விபத்துக்களை தடுப்பதற்கான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டும் என கோரி வடக்கு மாகாணசபையில் தீமானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.
வடக்கு மாகாண சபையின் 129-வது அமர்வு நேற்று மாகாணசபை சபா மண்டபத்தில் நடைபெற்றது. குறித்த அமர்வில் அவைத்தலைவர் அவசர பிரேரணையாக மேற்குறித்த விடயத்தை முன்மொழிந்திருந்தார். குறித்த பிரேரணையில் மேலும் தெரிவிக்கையில்,
வவுனியாவிலிருந்து யாழ்ப்பாணம் வரையான ஏ9 வீதியில் கடந்த காலங்களில் இடம்பெற்ற 23

## திலீபனின் நினைவிடத்தை சூழ பாதுகாப்பு வேலிகள்

### யாழ். மாநகரசபையால் அமைப்பு



23

## காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)
காணாமல் ஆக்கப்பட்டோரின் விடயங்கள் தொடர்பில் உண்மை மற்றும் சமூக நல்லிணக்க மன்றம் வடக்கு மாகாண அமைச்சர் அனந்தி சசிதரனுடன் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொண்டனர். இச்சந்திப்பு யாழ்ப்பாணத்தில் உள்ள 23

## மாகாணசபை தேர்தலை விரைவாக நடத்துக

### மகிந்த அணியினர் கோரிக்கை

(கொழும்பு)
மாகாண சபை தேர்தலை விரைவில் நடத்துமாறு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.
நாடாளுமன்றத்தில்நேற்று வியாழக்கிழமை சுயாதீன ஆணைக்குழுக்களின் தலைவர்களுக்கான சம்பள அதிகரிப்பு தொடர்பான பிரேரணையை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சபையில் சமர்ப்பித்து உரையாற்றினார்.
சுயாதீன ஆணைக்குழுக்கள் இருப்பதாலேயே நாட்டில் சுதந்திரம் 23

### விஜயகலா அறிக்கை

## சட்டமா அதிபரிடம் நேற்று கையளிப்பு

(கொழும்பு)
முன்னாள் இராஜாங்க அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான விஜயகலா மகேஸ்வரன் வெளியிட்ட சர்ச்சைக்குரிய கருத்துக்கள் குறித்த விசாரணை அறிக்கை மொழிபெயர்க்கப்பட்டு சட்டமா அதிபரிடம் நேற்று கையளிக்கப்பட்டு 23

## அரசும் பாதுகாப்பு படையும் தமிழரை கடனாளியாக்கிறது

### பாராளுமன்றில் சிறீதரன் எம்.பி

(கொழும்பு)
அரசாங்கமும் பாதுகாப்புப்படைகளும் எமது மக்களின் வாழ்வாதாரத்தை பறித்து எமது மக்களை கடனாளிகளாக மாற்றி வருகின்றது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளு 23

### காணாமல் போனோர் அலுவலகம்

## கடமைகளை நிறைவேற்றுவதை சுவிஸ்லாந்து உறுதி செய்யும்!

(கொழும்பு)
இலங்கையில் நிறுவப்பட்டுள்ள காணாமல் போனோர் தொடர்பான அலுவலகம் தமது கடமைகளை நிறைவேற்றுவதை சுவிஸ்லாந்து உறுதி செய்யும் என்று இலங்கைக்கு வந்திருந்த அந்த நாட்டின் நீதியமைச்சர் தெரிவித்துள்ளார்.
இலங்கைக்கு நான்கு நாள் விஜயத்தை மேற்கொண்டிருந்த சுவிஸ்லாந்தின் நீதியமைச்சர் சிமோன்டா சொமரூக்கா நேற்று தமது பயண முடிவின்போது இதனை குறிப்பிட்டுள்ளார். இந்த செய்தியை சுவிஸ் இன்போ என்ற இணையத்தளம் வெளியிட்டுள்ளது.
இந்நிலையில் இலங்கையின் மனித உரிமைகள் 23

### வடக்கு மாகாண அமைச்சரவை தொடர்பில்

## ஆளுநர் - முதலமைச்சர் விரைவில் நடவடிக்கை எடுக்க வேண்டும்

### மாகாணசபையில் தீர்மானம் நிறைவேற்றம்

(யாழ்ப்பாணம்)
வடக்கு மாகாண அமைச்சரவை எண்ணிக்கையில் பொருத்தமான நடவடிக்கையை வடக்கு மாகாண ஆளுநரும்வடக்குமாகாண முதலமைச்சரும் விரைவில் எடுக்க வேண்டும் என வடக்கு மாகாண சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.
வடக்கு மாகாண அமைச்சரவை விவகாரம் தொடர்பாக நான்காவது தடவையாகவும் நேற்றைய தினம் இடம்பெற்ற சபை அமர்வில் குழப்ப நிலை ஏற்பட்டது.
அமைச்சரவை தொடர் 23

# அடியவர்களுக்கு இலவச தங்குமிடவசதிகள்

ஆடி அமாவாசை தினமான நாளை சனிக்கிழமை பிதிர்க்கடன் செலுத்தவரும் அடியார்களுக்கு இலவச தங்குமிட வசதிகள் வழங்கப்படும் என அகில இலங்கை சைவ மகாசபை அறிவித்துள்ளது.

பிதிர்க்கடன்களை செலுத்துவதற்கு தூர இடங்களில் இருந்து கீரிமலைக்கு வருபவர்களுக்கு கீரிமலை குழந்தை வேல் சித்தர் பீடத்தில் தங்குமிட வசதி மற்றும் உணவு என்பவை வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும மேலதிக விபரங்களுக்கு 0774978294 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-9)







## சங்கத்தானை விபத்து இரு இளைஞர்கள் காயம்

சாவகச்சேரி சங்கத்தானையில் நேற்று இரவு 6.50 மணியளவில் இடம்பெற்ற வாகன விபத்தில் இரண்டு இளைஞர்கள் காயமடைந்துள்ளனர்.

ஏ9 வீதியில் சங்கத்தானை புகையிரத நிலையத்திற்கு முன்பாகவே விபத்து இடம்பெற்றுள்ளது. சென்றுகொண்டிருந்த முச்சக்கர வண்டி சடுதியாக திரும்ப முற்பட்டபோது பின்னால் வேகமாக வந்து கொண்டிருந்த மோட்டார் சைக்கிள் மோதியதிலேயே விபத்து ஏற்பட்டுள்ளது.

இதன் போது மோட்டார் சைக்கிளில் சென்றவர்கள் தூக்கி வீசப்பட்டு காயங்களுக்கு உள்ளாகியுள்ளனர். தர்மக்கேணி பளையைச் சேர்ந்த குலேந்திரராசா சுகந்தன் (வயது 23), புலோப்பளை மேற்கைச் சேர்ந்த கந்தசாமி தனிஸ்வரன் (வயது 26) ஆகியோரே காயமடைந்து சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ம-89)

நீரிழிவு (சலரோகம்), மூட்டுவாதம், முட்டு (வீசிங்) போன்ற 16 வகையான நோய்களுக்கு மூன்று மாதங்களில் நிரந்தர தீர்வு

நோயாளிகளின் கோரிக்கைக்கு அமைய

37 வருடங்களாக மாத்தளையில் சேவையாற்றிய பிரபல ஹோமியோபதி வைத்திய நிபுணரின் சேவை தற்போது பரந்தனிலும் யாழ்ப்பாணத்திலும் உங்களுக்காக...

கிளினிக் நடைபெறும் திகதி:
பரந்தனில்-11/08/2018 (நாளைய தினம்)
யாழ்ப்பாணத்தில்-18/08/2018

I.A.S. HOSPITAL
ஐ.ஏ.எஸ் மருத்துவமனை

ஒமெகா இன், இல.101, பிரதான வீதி, யாழ்ப்பாணம் (2ஆம் குறுக்குத் தெரு சந்தியில்)

பல நோக்கு கூட்டுறவு சங்க கட்டடம், பரந்தன் சந்தி, பரந்தன்

தொடர்புகட்கு:-
077 440 5969, 077 444 1082
(8304)

## மரண அறிவித்தல்

### வடிவேலு சிவக்கொழுந்து

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 03 - 02 - 1948 | 08 - 08 - 2018 |



நீலாட்சி பகுதி, இமையாணன் கிழக்கு உடுப்பிட்டியை வசிப்பிடமாக கொண்ட வடிவேலு சிவக்கொழுந்து நேற்று முன்தினம் (08.08.2018) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பு-சித்திரம் தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற முத்தன்-ஆனந்தியின் மருமகளும், காலஞ்சென்ற வடிவேலுவின் அன்பு மனைவியும், நிர்மலா, சசிகலா (UK), சசிதரன் (UK) அவர்களின் பாசமிகு தாயாரும், உதயகுமார், ஜெயகாந்தன் (UK), ஷர்மிலா (UK) ஆகியோரின் மாமியாரும், செந்தூரன், சரிதா, சுபாங்கி (UK), சுபாநந் (UK), லஷானா (UK) ஆகியோரின் பேர்த்தியும், தாரங்கி, றித்வா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.08.2018) வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வல்லை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இமையாணன் கிழக்கு, உடுப்பிட்டி (சி-3479)
தகவல்:- குடும்பத்தினர்

## நினைவகலாப் பொழுதுகளில் ஓராண்டு

| அன்னை மடியில் | காலனின் பிடியில் |
|---|---|
| 15 - 10 - 1955 | 22 - 07 - 2017 |



### அமரர் செல்லத்துரை பரராசசிங்கம்
(இல.471, கரியாலை, நாகபவான்)

ஊனினை உருக்கி உடலினை வருத்தி
எமை வளர்த்த எம் தந்தையே
நாம் உயர்ந்து உலகினிலே-பல
கதைகள் பேசிடும் வேளையிலே-பாதியிலே
எமை விட்டுச் சென்றது ஏனோ
என்றும் உங்கள் நினைவுகளுடன்

(சி-3476)

02, இரணைமடுச் சந்தி, கிளிநொச்சி
-குடும்பத்தினர்




ஆகஸ்ட் 11 நாளை 4.00 மணிக்கு குஞ்சர்கடை கொலின்ஸ் விளையாட்டுக்கழக மைதானம், நெல்லியடி.

ஆகஸ்ட் 12 மாலை 4.00 மணிக்கு வெலிங்டன் தியேட்டர் சதுக்கம் (லிங்கம் கூல்பார் முன்பாக) யாழ்ப்பாணம்.

Rs.300/=, Rs.500/=, Rs.1000/= மற்றும் VIP ரிக்கட்டுக்கள்.

Event Management - Ceylon Art Creation ( K.T.பிரசாத்)

(C-3395)

# பணிப்புறக்கணிப்பில் ஈடுபடுகின்றவர்கள் அப்பாவி மக்களின் உரிமைகள் பற்றியும் மனிதாபிமானத்தோடு சிந்திக்க வேண்டும்

## ஜனாதிபதி மைத்திரி இடித்துரைப்பு



(கொழும்பு)

பணிப்புறக்கணிப்பில் ஈடுபடுகின்றவர்கள் தங்களது வரப்பிரசாதங்களைப் பற்றி சிந்திப்பதைப் போன்று நாட்டின் அப்பாவி பொதுமக்களின் உரிமைகளைப் பற்றியும் மனிதாபிமானத்தோடு சிந்திக்க வேண்டும் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். வேலைநிறுத்தங்களால் பாதிக்கப்படுவது நாட்டிலுள்ள அப்பாவி மக்களேயன்றி அரசாங்கம் அல்ல என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

கொழும்பு விகாரமகாதேவி பூங்காவில் நேற்று முற்பகல் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி இதனை தெரிவித்தார்.

பொதுப் பயணிகள் போக்குவரத்து சேவைகள், இலவச சுகாதார சேவைகள் ஆகியவற்றை பயன்படுத்துகின்றவர்கள் நாட்டின் அப்பாவி ஏழை மக்களேயன்றி வசதிபடைத்தவர்கள் அல்ல எனக் குறிப்பிட்ட ஜனாதிபதி நேற்று முன்தினம் இடம்பெற்ற புகையிரத வேலை நிறுத்தத்தின் காரணமாக கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைக்கு தோற்றிவிட்டு வீடுகளுக்கு திரும்பிச் செல்லும் பிள்ள்ளகள் உட்பட பொது மக்களுக்கு ஏற்பட்ட அசௌகரியங்கள் குறித்து கவலை தெரிவித்தார்.

தமது பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்வதற்காக எந்தவொருவருக்கும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அரசாங்கத்துடன் கலந்துரையாடுவதற்கான சந்தர்ப்பம் உள்ளது எனக் குறிப்பிட்ட ஜனாதிபதி கடந்த அரசாங்கத்தை போன்று எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுகினறவர்களுக்கு எதிராக தற்போதைய அரசாங்கம் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் துப்பாக்கியை பயன்படுத்தவில்லை என்றும் தெரிவித்தார்.

எனவே நாட்டின் அப்பாவி பொதுமக்களை அசௌகரியங்களுக்கு உட்படுத்தாது அறிவுபூர்வமாகவும் மனிதாபிமான அடிப்படையிலும் தங்களது பிரச்சினைகளை தீர்த்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு புகையிரத மற்றும் மருத்துவத்துறை உள்ளிட்ட வேலை நிறுத்தங்களுக்கு தயாராகிவரும் தொழிற்சங்கங்களிடம் ஜனாதிபதி கேட்டுக் கொண்டார்.

இலங்கை ஆயுர்வேத ஔடதங்கள் கூட்டுத்தாபனமும் இலங்கை இராணுவமும் இணைந்து நடத்திய ஒரு இலட்சம் மூலிகை கன்றுகளை பகிர்ந்தளிக்கும் நிகழ்ச்சித் திட்டம் நேற்று முற்பகல் கொழும்பு விகாரமகாதேவி பூங்காவில் ஜனாதிபதி தலைமையில் இடம் பெற்றது.

"புனருதய - 60 நாள் செயற்றிட்டம்" எனப் பெயரிடப்பட்ட இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் நூற்றுக்கும் மேற்பட்ட மூலிகைச் செடி வகைகளை இராணுவ முகாம்களில் முதலில் நடுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. ஆயுர்வேத ஔடதங்கள் கூட்டுத்தாபனத்தின் ஊடாக இந்த கன்றுகள் பகிர்ந்தளிக்கப்பட்டன. பேண்தகு அபிவிருத்தியை நோக்கிய பயணத்தில் ஒரு நடவடிக்கையாக இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது..

தேசத்தின் புத்தெழுச்சிக்காக நாட்டின் அனைத்து துறைகளும் அர்ப்பணிப்பு, தியாகம் மற்றும் நேர்மையுடன் செயற்படவேண்டியது அவசியமாகும் என்றும் ஜனாதிபதி இங்கு தெரிவித்தார்.

நாட்டின் வன அடர்த்தியை அதிகரிப்பதற்கும் போதைப்பொருளுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்டுள்ள நிகழ்ச்சித் திட்டங்களிலும் பாரியதொரு புரட்சியை இலங்கை முப்படையினரின் உதவியுடன் முன்னெடுப்பதற்கு எதிர்பார்ப்பதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

சிறையில் இருக்கின்ற போதும் பாரியளவில் போதைப் பொருள் கடத்தல்களுடன் சம்பந்தப்பட்டுள்ளவர்களுக்கு மரண தண்டனை வழங்குவதற்கு அரசாங்கம் மேற்கொண்டுள்ள தீர்மானம் நாட்டினதும் மக்களினதும் எதிர்காலத்திற்காக உரிய முறையில் நிறைவேற்றப் படும் என்றும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.


இதேவேளை இத்திட்டத்தை ஆரம்பித்து வைத்த ஜனாதிபதி, முதலாவது மூலிகை கன்றை இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் மகேஷ் சேனநாயக்கவுக்கு வழங்கி வைத்தார். விகாரமகாதேவி பூங்காவில் ஜனாதிபதி சந்தன மரக்கன்றொன்றை நாட்டினார்.

அமைச்சர் ராஜித சேனாரட்ன, ஆயுர்வேத ஔடதங்கள் கூட்டுத் தாபனத்தின் தலைவர் லால் சமரசிங்க, இராணுவ கட்டளைத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா, இராணுவத்தின் விவசாயப் பணிப்பாளர் பிரிகேடியர் புவனக்க குணரத்ன உள்ளிட்ட இராணுவ உயரதிகாரிகள் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர். (இ-7)

---

# வன்முறைச் சம்பவங்களைக் கட்டுப்படுத்த அறநெறிகளைப் போதிக்க வேண்டும்

## இந்துக்களுக்கு வடக்கு ஆளுநர் கூரே அறிவுரை



(யாழ்ப்பாணம்)

இந்து அறநெறிப்பாடசாலைகளை அதிகளவில் தோற்றுவித்து அறநெறிகளை குழந்தைகளுக்கு போதிக்க வேண்டும்.

அதன் மூலம் வன்முறை உள்ளிட்ட தவறான பழக்க வழக்கங்களை குறைத்துக் கொள்ளலாம் என வடமாகாண ஆளுநர் றெஜினோல்ட் கூரே தெரிவித்தார்.

பௌத்த, கிறிஸ்தவ, முஸ்லிம் மதங்கள் தத்தமது சமய நெறிகளை அறநெறிப் பாடசாலைகள் ஊடாக சிறுவர்களுக்கு போதித்து வரும் நிலையில் இந்து சமயம் அறநெறிகளை தமது சமயம் சார்ந்தவர்களுக்கு போதிப்பதில் வீழ்ச்சி கண்டுள்ளதாக ஆளுநர் தெரிவித்தார்.

வன்முறை மற்றும் சமூக சீரழிவுகளை தடுப்பதற்காக சமூக பிரதிநிதிகளையும், மதத் தலைவர்களையும், அதிகாரிகளையும், சட்டத் துறையை சேர்ந்தவர்களையும் பாதுகாப்புத் தரப்பினையும் ஒன்றிணைத்து கட்டமைப்பு ஒன்று உருவாக்க வேண்டிய அவசியம் எழுந்துள்ளதாகவும் அதற்கான முன் ஏற்பாடுகளை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் ஆளுநர் தெரிவித்தார்.

யாழ்.குடாநாட்டில் அதிகரித்துள்ள வாள்வெட்டுச் சம்பவங்கள் மற்றும் போதை வஸ்து பாவனையினை தடுப்பதற்கு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் ஆராய்வு செய்யும் விசேட கூட்டம் நேற்று ஆளுநர் செயலகத்தில் நடைபெற்றது. இங்கு கருத்து வெளியிடும் போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

மூன்று மணி நேரம் நடைபெற்ற இக் கலந்துரையாடலில் அரச உயர் அதிகாரிகளாலும் சமூகப் பிரதிநிதிகளாலும் மதத் தலைவர்களாலும் பல்வேறு ஆலோசனைகள் முன்வைக்கப் பட்டன.

குறிப்பாக தென்மராட்சி கெற்பேலி, தனாங்கிளப்பு பகுதிகளில் தொடர்ச்சியாக நடைபெற்றுவரும் சட்டவிரோத மணல் அகழ்வு தொடர்பிலும் குடியிருப்பாளர்கள் அற்ற வீடுகளில் இடம்பெறும் கலாசார மற்றும் சட்ட விரோத செயற்பாடுகள் தொடர்பிலும் நாவற்குழி கரையோரத்தினை அண்டிய பகுதியில் கஞ்சா பாவனை அதிகரித்துள்ளமை தொடர்பிலும் ஆளுநருக்கு பிரஸ்தாபிக்கப்பட்டது.

இதேபோன்று காரைநகர், புங்குடுதீவு, அனலைதீவு உள்ளிட்ட பிரதேசங்களில் இறைச்சிக்காக மாடுகள் வெட்டப்படுவது குறித்தும் அதற்கு உடந்தையாக இருப்போர் குறித்தும் முறைப்பாடு செய்யப்பட்டும் நடவடிக்கைகளில் முன்னேற்றம் இல்லாது காணப்படுவது தொடர்பிலும் அதிகாரிகள் ஆளுநருக்குத் தெரியப்படுத்தினர். (இ-9-60)

---

# பொதுப் போக்குவரத்தில் இராணுவப் பேருந்துகள்

(கொழும்பு)

ரயில் பணியாளர்களின் பணிப்புறக்கணிப்பைத் தொடர்ந்து, இலங்கை இராணுவத்தின் பேருந்துகள் நேற்று வியாழக்கிழமை சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் நலனைக் கருத்திற்கொண்டு, அவசர சேவையாக இச்சேவை இடம்பெறுமென அரசாங்கத் தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

ரயில்வே பணியாளர்களின் சம்பள அதிகரிப்பு தொடர்பான அமைச்சரவைப் பத்திரத்திற்கு இவ்வாறம் அமைச்சரவையில் அனுமதி வழங் கப்படவில்லை. இதனையடுத்து நேற்று முன்தினம் மாலை முதல் ரயில்வே ஊழியர்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

இதனால், பணிகளுக்கு வந்தவர்கள் மீண்டும் வீடுகளுக்கு செல்லமுடியாத நிலை ஏற்பட்ட நிலையில், கொழும்பு கோட்டை ரயில்வே நிலையத்தில் குவிந்திருந்த பயணிகள் ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர். இதனால் முப்படையினரின் பாதுகாப்பின் கீழ் கோட்டை ரயில் நிலையம் கொண்டுவரப்பட்டுள்ளது.

பயணிகளின் நன்மை கருதி இராணுவத்தின் பாதுகாப்புடன் தூர இடங்களுக்கு இலங்கை போக்குவரத்துச் சபையின் பேருந்துகள் சில நேற்று முன்தினம் இரவு முதல் இயங்கின.

வெளிப்பிரதேசங்களிலிருந்து கொழும்புக்கு சேவையில் ஈடுபட்ட ரயிலின் சாரதி ஒருவரை நேற்று முன் தினம் இரவு சிலர் தடுத்து வைத்த நிலையில், பின்னர் அவர் மீட்கப்பட்டார்.

பயணிகள் எதிர்நோக்கும் சிரமத்தைக் கருத்திற்கொண்டு நேற்று முன்தினம் இரவு நிதியமைச்சில் அவசர கலந்துரையாடலொன்று முன்னெடுக்கப்பட்ட போதும், எவ்வித தீர்மானமும் எட்டப் படவில்லை. இந்நிலையில், பணிப்புறக்கணிப்பு தொடர்ந்தும் இடம் பெற்று வருகின்றது.

இதேவேளை, ஓய்வு பெற்ற ரயில் சாரதிகளை கடமைக்கு திரும்புமாறு ரயில்வே திணைக்களம் அழைப்பு விடுத்துள்ளதோடு, வீதி அனுமதிப்பத்திரமின்றி இக் காலத்தில் பேருந்துகள் சேவையில் ஈடுபடலாம் என்றும் அரசாங்கம் அறிவித்துள்ளது.

அத்தோடு, ரயில் பயணச் சீட்டுக்கள் வைத்திருப்போர், இலங்கை போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான பேருந்துகளில் இலவசமாக பயணிக்கலாமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறெனினும், தூர பிரதேசங்களிலிருந்து பணிகளுக்குச் செல்வோர் பாரிய சிரமங்களை எதிர்நோக்கியுள்ள நிலையில், பணிப்புறக்கணிப்பை கைவிட்டு பேச்சுவார்த்தைக்கு வருமாறு அரசாங்கம் அழைப்பு விடுத்துள்ளது. (இ-7)

---

### சமுர்த்தி வங்கிகளை முற்றாக மூடி

# உத்தியோகத்தர்கள் போராட்டம் சமுர்த்திப் பயனாளிகள் பாதிப்பு



(காரைநகர்)

சமுர்த்தி உத்தியோகத்தர்களின் சுகயீன லீவுப் போராட்டத்தினால் யாழ்.மாவட்டத்தின் அனைத்து சமுர்த்தி வங்கிகளும் முற்றாக மூடப்பட்டன. இதனால் சமுர்த்தி வங்கிகளின் பயனாளிகள் பெரும் பாதிப்பினை எதிர் நோக்கியுள்ளனர்.

அகில இலங்கை ரீதியாக சமுர்த்தி உத்தியோகத்தர்கள் தாங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளைத் தீர்க்க வலியுறுத்தியும், சமுர்த்தி வங்கி நிதியத்தினை கையகப்படுத்தும் திட்டத்தினை எதிர்த்தும் சமுர்த்தி உரிமைகளைக் காக்கும் தேசிய முன்னணியின் ஏற்பாட்டில் நேற்று வியாழக்கிழமை பாராளுமன்ற சுற்று வட்டத்தில் பாரியளவு எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர். இதேவேளை நாடளாவிய ரீதியில் அனைத்து சமுர்த்தி வங்கிப் பணியாளர்கள் மற்றும் வெளிக்களப் பணியாளர்கள் மற்றும் முகாமையாளர்கள் இணைந்து நேற்றைய தினம் ஒருநாள் அடையாள பணிப் பகிஷ்கரிப்பிலீடுபட்டனர்.

இந் நிலையில் யாழ். மாவட்ட சமுர்த்தி உத்தியோகத்தர்கள் அனைவரும் ஒன்றிணைந்து ஒருநாள் பணிப் பகிஷ்கரிப்பிலீடுபட்டதனால் அனைத்து சமுர்த்தி வங்கிகள் மற்றும் மகாசங்கங்கள், தலைமையகங்கள் அனைத்தும் மூடப்பட்டிருந்தன. இதனால் அன்றாட தேவைகளை நிறைவேற்றுமுகமாக வருகை தந்த பயனாளிகளான மாதாந்த சமுர்த்தி பணம் பெறுவோர், மற்றும் வங்கியில் பெற்ற கடனை செலுத்த வந்தவர்களென அனைவரும் உரிய சேவைகளைப் பெறமுடியாது திரும்பிச்சென்றதனை அவதானிக்கமுடிந்தது. (இ-246)

# லோர்ட்ஸ் டெஸ்ட்: மழையால் பாதிப்பு

இந்தியா - இங்கிலாந்து அணிகள் மோதும் இரண்டாவது டெஸ்ட் (லோர்ட்ஸ்) போட்டியின் முதல் நாள் ஆட்டம் மழை காரணமாக பாதிக்கப்பட்டது.

இங்கிலாந்து சென்றுள்ள இந்திய அணி ஐந்து போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது.

முதல் டெஸ்டில் வீழ்ந்த இந்திய அணி தொடரில் 0-1 என பின்தங்கியுள்ளது. இரு அணிகள் மோதும் இரண்டாவது டெஸ்ட் லண்டன், லோர்ட்ஸ் மைதானத்தில் நேற்று ஆரம்பமாக இருந்தது.

கடந்த 2014 முதல் ஆசிய அணிகள் இங்கு பங்கேற்ற 5 டெஸ்டில் 3ல் வெற்றி பெற்றன. 2 போட்டி 'சமனானது . இதனால் இந்திய அணி நம்பிக்கையுடன் காத்திருந்தது.

இப்போட்டியை 'ஜாம்பவான்' வீரர் சச்சின், மணி அடித்து ஆரம்பித்து வைக்க இருந்தார்.

ஆனால் காலையில் இருந்து லேசான தூறலுடன் மழை பெய்தது. இது தொடர்ந்ததால் இரு அணி வீரர்களும் முன்னதாகவே உணவு இடைவேளைக்கு சென்றனர். பிறகும் மழை நின்றபாடில்லை. இதனால் முதல் நாள் ஆட்டம் நாணயச்சுழற்சி கூட போடப் படாமல் ரத்தானது.


# கேள்வி அறிவித்தல்

## கமநல அபிவிருத்தி திணைக்களம் - கிளிநொச்சி

## சிறிய நீர்ப்பாசன குளங்கள் புனரமைப்பு

கமநல அபிவிருத்தி திணைக்களத்தில் பின்வரும் விபரங்களைக் கொண்ட சிறிய நீர்ப்பாசன குளங்கள் புனரமைக்கும் வேலைகளுக்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

| கேள்வி அடையாள இலக்கம் | வேலையின் விபரம் | மதிப்பீட்டுத் தொகை (வற் மற்றும் ஏனைய நீங்கலாக (Rs Mn) | வேண்டப்படும் ஆகக் குறைந்த ICTAD தரம்/பதிவு | கேள்விப் பிணைப் பணம் செல்லுபடியாகும் காலம் |
|---|---|---|---|---|
| KOC/DAD/06/MI/06/95/DAD11 | பூநகரி கமநல சேவைகள் நிலையத்துக்கு உட்பட்ட கரியாம் பிட்டிக் குளம் புனரமைத்தல் | 4.208 | C8 | ரூபா 42000.00 வங்கி பிணை 25.11.2018 வரை |
| KOC/DAD/06/MI/07/59/DAD12 | பளை கமநல சேவைகள் நிலையத்துக்கு உட்பட்ட பெரியகுளம் புனரமைத்தல் | 3.976 | C8 | ரூபா 39000.00 வங்கி பிணை 25.11.2018 வரை |
| KOC/DAD/06/MI/07/61/DAD05 | பளை கமநல சேவைகள் நிலையத்துக்கு உட்பட்ட யாவில்க்குளம் புனரமைத்தல் | 1.686 | C9 | ரூபா 16000.00 வங்கி பிணை 12.11.2018 வரை |
| KOC/DAD/06/MI/04/02/MINI01 | அக்கராயன் கமநலசேவைகள் நிலையத்துக்கு உட்பட்ட உப்புவில்க்குளம் புனரமைத்தல் | 4.145 | C8 | ரூபா 41000.00 வங்கி பிணை 25.11.2018 வரை |
| KOC/DAD/06/MI/07/31/MINI02 | பூநகரி கமநல சேவைகள் நிலையத்துக்கு உட்பட்ட காயமோட்டைக் குளம் (Kunsanaivilun-than) புனரமைத்தல் | 2.773 | C8 | ரூபா 27000.00 வங்கி பிணை 25.11.2018 வரை |
| KOC/DAD/06/MI/06/36/MINI03 | பூநகரி கமநல சேவைகள் நிலையத்துக்கு உட்பட்ட காயமோட்டைக் குளம் (Iraman) புனரமைத்தல் | 4.145 | C8 | ரூபா 41000.00 வங்கி பிணை 25.11.2018 வரை |

அட்டவணையில் குறிப்பிடப்பட்ட வேலைகளிற்காக தற்போது தகைமையுடையவர்களும் தகைமை பெற்றவர்களிடமிருந்தும் குறியீடு செய்யப்பட்ட விலைக்கேள்விகள் கோரப்படுகின்றது.

I. நிர்மாணப் பயிற்சி அபிவிருத்தி நிறுவனத்தால் இக்ராட் (ICTAD/CIDA) விருத்தி செய்யப்பட்ட தேசிய நிர்மாண ஒப்பந்ததாரரை பதிவு செய்யும் திட்டத்தின் கீழ் மேற்படி அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தரமொன்றில் ஒப்பந்ததாரர் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும்.

II. இக்ராட் (ICTAD/CIDA) வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையை பொறுப்பேற்பவர் போதிய அளவு ஒப்பந்தங்களை மேற்கொண்ட ஆற்றலை கொண்டிருக்க வேண்டும்.

III. ஒப்பந்ததாரர் மோசடியான அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளுக்கு அல்லது திருப்திகரமற்ற வேலை செயற்திறனுக்கு உட்பட்டு தகுதியற்றவர் என்ற பிரகடனத்தின் கீழ் இருக்கக்கூடாது.

2. ஆர்வமுள்ள தகுதிவாய்ந்த கேள்விதாரர்கள் கேள்விகள் தொடர்பான மேலதிக தகவல்களை கமநல அபிவிருத்தி திணைக்களம், கிளிநொச்சியில் பெற்றுக் கொள்ளலாம். (தொ.பே.இல.0212285904), பக்ஸ் இல. 0212285904

3. கேள்வி ஆவணங்களை 10.08.2018ஆம் திகதியிலிருந்து 23.08.2018ஆம் திகதிவரை முற்பகல் 9.30 மணி முதல் பிற்பகல் 3.00 மணிவரை வேலைநாட்களில் கிளிநொச்சி கமநல அபிவிருத்தி திணைக்களத்தில் மீளளிக்கப்படாத ரூபா 1,000.00 கட்டணத்தை செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.

4. இரு அரக்கு முத்திரை இடப்பட்ட உறைகளில் (மூலப்பிரதி, பிரதி தனித்தனியாக சமர்ப்பிக்கப்பட்டுள்ள விலையிடப்பட்ட கேள்விகளையும் கேள்வி கோருவோரின் முன் தகுதிக்கு அவசியமான ஆவணத்தையும் கேள்விகள் கொண்டிருக்க வேண்டும் என்பதுடன் அது தொடர்பாக பந்தி 5இல் குறிப்பிடப்பட்டுள்ள இடம், திகதி மற்றும் நேரம் ஆகியவற்றுக்கு ஒப்படைத்தல் வேண்டும்.

5. அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் யாவும் **தலைவர் திணைக்கள பெறுகைக்குழு கமநல அபிவிருத்தி திணைக்களம், கிளிநொச்சி** எனும் விலாசத்துக்கு 24.08.2018ஆம் திகதி முற்பகல் 10.00 மணிக்கு முன் கிடைக்கப்பெறல் வேண்டும். தாமதமாக கிடைக்கும் விலையிடப்பட்ட கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது என்பதுடன் கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்வி தாரர் அல்லது அவரால் எழுத்துமூலம் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதி முன்னிலையில் கேள்விகள் திறக்கப்படும்.

6. கேள்விகள் தயாரிப்பு அல்லது ஒப்படைப்புக்கு கேள்விதாரர்களுக்கு ஏற்படும் ஏதாவது செலவுகளுக்கு அல்லது செலவீனங்களுக்கு தொழில் தருநர் பொறுப்பாகமாட்டார்.

7. நிதி அமைச்சினால் வெளியிடப்பட்ட நிதிச்சுற்றறிக்கை 04/2016க்கு அமைவாக வடக்கு மாகாணத்தை சார்ந்தவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

8. குறித்த வேலைகளுக்கான முதற்கூட்டம் (Pre Bid Meeting) 15.08.2018ஆம் திகதி முற்பகல் 10.00 மணிக்கு கமநல அபிவிருத்தி திணைக்களம், கிளிநொச்சியில் நடைபெறும்.

**வே.ஆயகுலன்**
**திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவர்,**
**கமநல அபிவிருத்தி திணைக்களம்,**
**கிளிநொச்சி.**

(C-3480)





# இலங்கை வெற்றி

தென்னாபிரிக்காவுக்கு எதிரான நான்காவது ஒரு நாள் போட்டியில் லக்மல் வேகத்தில் அசத்த, இலங்கை அணி 'டக்வோர்த் லூயிஸ்' விதிப்படி 3 ஓட்டங்களால் 'திரில்'வெற்றி பெற்றது.

இலங்கை வந்துள்ள தென்னாபிரிக்க அணி 5 போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரில் பங்கேற்கிறது.

முதல் மூன்று போட்டிகள் முடிவில், தென்னாபிரிக்கா 3-0 என ஏற்கெனவே தொடரை கைப்பற்றிவிட்டது.

இந்நிலையில் நான்காவது போட்டி நேற்று முன்தினம் பல்லேகலேயில் நடந்தது. நாணயச்சுழற்சியில் வென்ற தென்னாபிரிக்கா களத்தடுப்பை தேர்வு செய்தது.

மழை காரணமாக போட்டி இரண்டு மணி நேரம் தாமதமாக ஆரம்பமாக, போட்டி தலா 45 ஓவர்களாக மாற்றப்பட்டது.

**பெரேரா அரைச் சதம்**

இலங்கை அணிக்கு டிக்வெல, உபுல் தரங்க ஆரம்பம் கொடுத்தனர். 9ஆவது ஓவரின்போது, மீண்டும் மழை குறுக்கிட 39 ஓவராக குறைக்கப்பட்டது. டுமினி 'சுழலில்' டிக்வெல (34) சிக்கினார். தரங்க 36 ஓட்டங்கள் எடுத்தார். குசல் பெரேரா (51) அரைச் சதம் கடந்தார். அணித் தலைவர் மத்யூஸ் (22) ஜொலிக்கவில்லை. சானக (65), திசரா பெரேரா (51*) அரைச்சதம் விளாசினர். இலங்கை அணி 39 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து 306 ஓட்டங்களை எடுத்தது.

**இலக்கு மாற்றம்**

பதிலுக்கு களமிறங்கிய தென்னாபிரிக்க அணிக்கு பொறுப்புத் தலைவர் குயின்டன், அம்லா ஜோடி ஆரம்பம் வழங்கியது. 2 ஆவது ஓவரில், மழை குறுக்கிட தென்னாபிரிக்காவுக்கு இலக்கு 21 ஓவர்களில் 191 ஓட்டங்களாக மாற்றப்பட்டது. லக்மல் பந்தில் குயின்டன் (23) ஆட்டமிழந்தார். அம்லா (40), டுமினி (38) ஓரளவு கைகொடுத்தனர். ரீசா ஹென்ரிக்ஸ் (2), பெலுக்வாயோ (9) ஒற்றை இலக்கில் திரும்பினர். வெற்றிக்கு லக்மல் வீசிய கடைசி ஓவரில் 8 ஓட்டங்கள் தேவைப்பட்டன. இரண்டாவது பந்தில் மில்லர் (21) சிக்கினார். மொத்தம் 4 ஓட்டங்கள் மட்டுமே கிடைக்க, தென்னாபிரிக்கா 21 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களை இழந்து 187 ஓட்டங்கள் மட்டும் எடுத்து தோல்வியடைந்தது. இலங்கை சார்பில் அதிகபட்சமாக லக்மல் 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

ஐந்தாவது மற்றும் கடைசி போட்டி 12 ஆம் திகதி கொழும்பில் நடக்கிறது.


**புடைவை விற்பனையாளர் தேவை**

யாழ்.நகரில் இயங்கும் எமது புடைவை நிறுவனத்துக்கு புடைவை விற்பனையில் அனுபவமுள்ள அல்லது பழக ஆர்வம் உள்ள ஆண்/பெண் சேல்ஸ்மன் தேவை.

**41, பெரிய கடை வீதி, யாழ்ப்பாணம்.**

**புதிய வகுப்புக்கள் ஆரம்பம்**

**A/L 2019, 2020, G.A.Q, B.A, BA Final**
பேராதனை 1ம், 2ம் வருட விரிவுரைகள் ஆரம்பம்

**இடம்** : ஆரியகுளம் சந்தி, ஸ்ரான்லி வீதி DMIக்கு அருகாமை
**காலம்** : 11.08.2018
**நேரம்** : 9.00 A.M

**ஆசிரியர் குழாம்**

| | |
|---|---|
| தமிழ் | : S. தர்மராஜா |
| அரசியல் விஞ்ஞானம் | : ம.புவனதாஸ் |
| இந்து நாகரிகம் | : N. இன்பறாச் |
| வரலாறு | : S. ரவி |
| பொருளியல் | : S. தயாபரன் |
| ஆங்கிலம் | : S. மகேஸ்வரன் |
| புவியியல் | : பிரபல ஆசிரியர் |

**தொடர்பு: 077 418 8959**



தி.மு.க.தலைவரும் தமிழகத்தின் முன்னாள் முதல்வருமான கலைஞர் கருணாநிதிக்கு அமைச்சர் மனோ கணேசன் தலைமையிலான குழுவினர் நேற்று முன்தினம் நேரில் சென்று அஞ்சலி செலுத்தியுள்ளனர். இலங்கை அரசாங்கத்தின் சார்பாக தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் அமைச்சர் மனோ கணேசன், இராஜாங்க அமைச்சர் இராதாகிருஷ்ணன், நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.திலகராஜ், வடிவேல் சுரேஷ், தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் ஆகியோரே நேரில் அஞ்சலி செலுத்தியுள்ளனர். இந்த அமைச்சர்கள் குழு, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் இரங்கல் செய்தியையும் கலைஞரின் மகளான கனிமொழியிடம் வழங்கி அனுதாபங்களைத் தெரிவித்துள்ளனர்.

# சிறந்த விவசாயிகள் தெரிவுக்கு வடக்கில் விண்ணப்பங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண விவசாயத் திணைக்களத்தின் யாழ்ப்பாண மாவட்ட அலுவலகத்தால் 2017ஆம் ஆண்டிற்கான சிறந்த விவசாயிகள் தெரிவானது நான்கு வகுதிகளின் அடிப்படையில் யாழ். மாவட்டச் செய்கையாளர்களிடையே நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

சிறந்த வீட்டுத் தோட்டச் செய்கையாளர்கள், சிறந்த சேதன விவசாயச் செய்கையாளர்கள், காலநிலை மாற்றத்திற்கேற்ப பயிர்ச்செய்கை மேற்கொள்பவர், சிறந்த விவசாயச் செயன்முறைத் தொழில்நுட்பங்களைப் பழ உற்பத்தியில் நடைமுறைப்படுத்துபவர் போட்டியில் பங்குகொள்ள விரும்பும் போட்டியாளர்கள் தங்கள் பகுதியிலுள்ள விவசாயப் போதனாசிரியர் அலுவலகத்தில் போட்டிக்கான விண்ணப்பப் படிவத்தினை பெற்றுக் கொள்ள முடியும். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்தினை 2018 ஆவணி மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் தங்கள் விவசாயப் போதனாசிரியரிடம் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும் அல்லது மாவட்ட காரியாலயத்தில் சமர்ப்பிக்கவும்.கடித உறையின் இடது பக்க மேற்பக்கத்தில் "சிறந்த விவசாயிகள் தெரிவு-2018" எனக் குறிப்பிடப்பட வேண்டும்.

சிறந்த ஏனைய செய்கையாளர்களுக்கும் சந்தர்ப்பம் அளிக்கும் வகையில் விவசாயத் திணைக்களத்தினால் கடந்த காலங்களில் மாவட்ட மட்டத்தில் கௌரவிக்கப்பட்டவர்கள் இப் போட்டியில் கலந்து கொள்ள முடியாது.

இந் நிகழ்ச்சித் திட்டமானது செய்கையாளர்களுடன் போட்டி மூலமான ஊக்குவிப்பை ஏற்படுத்துவதோடு சூழலுக்கிசைவான பொருத்தமான தொழில்நுட்பங்களை விவசாயிகளிடையே பரவச் செய்து பேண்தகு உற்பத்தியை பெற்றுக்கொள்ள வழி வகுக்கின்றது.

மேலதிக தொடர்புகளுக்கு பின்வரும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும். 021222 2175, 077 3051363, 077 6913456 என யாழ். பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (இ)


# இனவாதத்தை விதைத்து அரசியல் இலாபம் தேடுவதே மகிந்தவின் திட்டம்-பைசல்

(கொழும்பு)

சிங்கள மக்கள் மத்தியில் குழப்பகரமான ஒரு நிலைமையை ஏற்படுத்தி தமிழர்களுக்கு எதிராக இனவாதத்தை விதைத்து அரசியல் இலாபம் தேடுவதே மகிந்த அணியினரின் திட்டம் என சுகாதார பிரதியமைச்சர் பைசல் காசிம் தெரிவித்துள்ளார்.

சுகாதார பிரதியமைச்சர் பைசல் காசிமினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கை ஒன்றிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் எதிர்க்கட்சித் தலைவர் பதவியில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனிடமே இருக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார். நாடாளுமன்ற சம்பிரதாய மற்றும் ஜனநாயக அடிப்படையில் எதிர்க்கட்சித் தலைவராக இரா.சம்பந்தன் இருக்க வேண்டும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.



சம்பந்தனிடம் இருக்கின்ற எதிர்க்கட்சித் தலைவர் பதவியைப் பறிக்க முயற்சிப்பது ராஜபக்ஷ குடும்பத்தினரின் சதித்திட்டம் எனக் குறிப்பிட்டுள்ள அவர் அந்தப் பதவியை பறிக்க முனைவது ஜனநாயக மீறலாகும் எனவும் தெரிவித்தார். (இ-7)

# நாடாளுமன்றக்கட்டடத் தொகுதியை புனரமைக்க அமைச்சரவை அனுமதி

(கொழும்பு)

நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியைப் புனரமைப்பு செய்ய அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் கயந்த கருணாதிலக இதனை தெரிவித்துள்ளார்.

1982ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட நாடாளுமன்ற கட்டடத் தொகுதியில் கடந்த 35 வருடங்களில் எவ்வித புனரமைப்பு பணிகளும் முன்னெடுக்கப்படவில்லை.

இந்த நிலையில் விரைவாக புனரமைப்பு மேற்கொள்ளப்பட வேண்டுமென அடையாளங் காணப்பட்டுள்ள பணிகளை விரைவில் மேற்கொள்ள நாடாளுமன்ற பணியாளர் ஆலோசனை தெரிவுக் குழுவின் சிபாரிசை கவனத்தில் கொண்டு, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினால் முன்வைக்கப்பட்ட யோசனைக்கே அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது என கயந்த மேலும் தெரிவித்தார். (இ-7)

# சுயதொழில் முயற்சி கடன் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

புதிய சோனகதெரு ஜே/88 கிராம அபிவிருத்திச்சங்க உறுப்பினர்களுக்கு சங்க நிதியிலிருந்து சுயதொழில் முயற்சிக்கடன் வழங்கும் நிகழ்வு சங்கத் தலைவர் சி.க.தம்பிராசா தலைமையில் இன்று வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு ஆறுகால் மடம் அறிவொளி கலையரங்க முன்றலில் நடைபெறும்.

இந்நிகழ்வில் ஜே/88 புதிய சோனகதெரு கிராம உத்தியோகத்தர் ஆர்.சல்பீர் கலந்து கொண்டு கடன் திட்டப் பயனாளிகளுக்கு பணத்தினை வழங்குவார். (இ)

# பொலிஸ் பொறுப்பதிகாரி நியமனம்

(கரணவாய்)

நெல்லியடி பொலிஸ்நிலைய பொறுப்பதிகாரியாக பொலிஸ் பரிசோதகர் கே.எம்.ஏ.கே. கொனரா நியமிக்கப்பட்டுள்ளார்.

நெல்லியடி பொலிஸ் பொறுப்பதிகாரியாக இருந்த கீர்த்தி சிங்க கொழும்பிற்கு இடம் மாற்றம் பெற்றுச் சென்ற. நிலையில் அவரின் இடத்திற்கு செட்டிகுளம் பொலிஸ் நிலையத்தில் போக்குவரத்து பொலிஸ் பொறுப்பதிகாரியாக பதவிவகித்த கே.எம். ஏ.கே. கொனரா பொலிஸ் தலைமையகத்தினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

அவர் நேற்று வியாழக்கிழமை தனது கடமையைப் பொறுப்பேற்றார். (இ-60)

# பொதுக்கூட்டம்

(கரணவாய்)

வடமராட்சி சமூகப் பொருளாதார மேம்பாட்டு சபை ஆண்டுப் பொதுக் கூட்டம் நாளை மாலை 4 மணியளவில் கொற்றாவத்தை செட்டி தறை சித்தி விநாயகர் திருமண மண்டபத்தில் தி.செல்வநாதன் தலைமையில் இடம் பெறும். (இ-60)

# இரத்த சுத்திகரிப்பு நிலையத்தின் 500ஆவது பரிசோதனை இன்று

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையின் சிறுநீரக நோயாளர்களுக்கான இரத்த சுத்திகரிப்பு நிலையம் ஜனவரி மாதம் ஆரம்பிக்கப்பட்டு தினந்தோறும் இரத்த சுத்திகரிப்பு பரிசோதனைகள் இடம் பெற்று வருகின்றன.

இந் நிலையில் இன்று வெள்ளிக்கிழமை 500ஆவது பரிசோதனை இடம் பெறும். இதனை முன்னிட்டு தெல்லிப்பழை ஆதார வைத்திய சாலையின் சிறுநீரக பிரிவில் விசேட நிகழ்வுகள் வைத்திய சாலை அத்தியட்சகர் யோ.திவாகர் மற்றும் வைத்திய நிபுணர் அ.ரகுபதி தலைமையில் இடம் பெறும்.

இந் நிகழ்வில் வைத்திய நிபுணர்கள், வைத்தியர்கள் மற்றும் தாதிய உத்தியோகத்தர்கள் கலந்து கொள்வர்.

யாழ்.மாவட்டத்தில் இரண்டாம் நிலை வைத்தியசாலையாக காணப்படும் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையின் சிறுநீரக நோயாளர்களுக்கான இரத்த சுத்திகரிப்பு பிரிவானது தற்போது மிகவும் சிறப்பாக இயங்குவதுடன் இதனூடாக தினம்தோறும் சிறுநீரக நோயாளர்கள் பயன் பெற்று வருவது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# இராசி பலன்

**10.08.2018**

ஆடி 25, வெள்ளிக்கிழமை

சூரிய உதயம் காலை 6.04 மணிக்கு

சதுர்த்தசி முன்னிரவு 6.54 மணிவரை

பூசம் பின்னிரவு 3.49 மணிவரை

சுபநேரம் 6.04-7.34 மணிவரை

இராகுகாலம் 10.34-12.04 மணிவரை

போதாயன அமாவாசை

வளவன்

கிரகநிலை: சூரி.புத. ராகு.சந் | செவ். கேது | சனி | குரு | சுக்

சந்திராஷ்டமம்: பூராடம்

**மீனம்:** ஆசைகள் நிறைவேற ஆனைமுகனை வழிபட வேண்டிய நாள், தொலைபேசி வழியில் பொன்னான செய்திகள் வந்து சேரலாம், பிள்ளைகளால் பெருமை காண்பீர்கள்.

**மேடம்:** பெற்றோர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள்.

**இடபம்:** கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும், உடன் பிறப்புக்கள் மூலம் உதவிகள் கிடைக்கலாம், தன்னம்பிக்கையோடு பணியாற்றுவீர்கள்.

**மிதுனம்:** சேமிப்பை அதிகரிக்க முற்படுவீர்கள், ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள், உன்னதமான வாழ்வுக்கு அடித்தளம் அமைக்கும் நாள்.

**கும்பம்:** குடும்பத்தில் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் அகலும், தேகாரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், பெண் வழி ஒத்துழைப்பு கிடைக்கும்.

**கடகம்:** பயணத்தால் பலன் கிடைக்கும், கொடுக்கல் -வாங்கல்களில் கவனம் தேவை, விருப்பங்கள் நிறைவேற விநாயகரை வழிபட வேண்டிய நாள்.

**மகரம்:** நிம்மதிக்காக ஆலயத்தை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், புதிய பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, நண்பர்கள் சந்திப்புண்டு.

**சிம்மம்:** திடீர் பயணமொன்று ஏற்படலாம், மாற்றங்களால் ஏற்றம் பெறுவீர்கள், சுபகாரியச் செலவுகள் ஏற்படலாம், சயனசுகக் குறைவுகள் ஏற்படலாம்.

**தனுசு:** கவலைகள் தீர கணபதியை வழிபட வேண்டிய நாள், திடீர்ச் செலவுகள் ஏற்படும் வாய்ப்புண்டு, தொழில் போட்டிகள் அதிகரிக்கலாம்.

**விருச்சிகம்:** பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு, சுறுசுறுப்போடு செயற்படுவீர்கள், சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**துலாம்:** எடுத்த காரியத்தை எளிதில் முடிக்க நண்பர்கள் ஒத்துழைப்பு வழங்குவர், பிரியமான சிலரின் சந்திப்பு இடம்பெறலாம், தொழில் மேன்மையுண்டு.

**கன்னி:** பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள், வருங்கால நலன்கருதி புதிய திட்டமொன்றைத் தீட்டுவீர்கள், யோகமான நாள்.





மாவிட்டபுரம் கந்த சுவாமி ஆலய வேட்டைத் திருவிழா நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இதன்போது சுவாமி வெளி வீதியுலா வருவதையும் வேட்டைத் திருவிழா காட்சியையும் படங்களில் காணலாம்.

# இலங்கையில் இடம்பெற்றது இனப்படுகொலை தீர்மானத்தை ஆதரித்தவர் கருணாநிதி

## த.தே.ம.முன்னணி இரங்கல் செய்தியில் சுட்டிக்காட்டு





(யாழ்ப்பாணம்)

முத்தமிழ் அறிஞரும் தமிழக முன்னாள் முதல்வரும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவருமான கலைஞர் முத்துவேல்கருணாநிதி அவர்களின் மறைவு தமிழ் மக்களைச் சோகத்தில் ஆழ்த்தியுள்ளது.

கலைஞரின் நீண்ட அரசியல் பயணத்தில் தமிழ்த் தேசியத்திற்கும் தமிழகத்தில் வாழும் ஒடுக்கப்பட்ட சமூகங்களைச் சேர்ந்த மக்களின் மேம்பாட்டுக்கும் அவர் ஆற்றிய பணி அளப்பரியது.

இந்தி மொழித் திணிப்பிற்கு எதிரான போராட்டங்களில் தன்னை ஈடுபடுத்திக் கொண்ட அவர் தமிழ்மொழியை செம்மொழியாக அங்கீகரிக்க வைக்கும் முயற்சியில் வெற்றி பெற்றார்.

கலை. இலக்கியப் பரப்பில் அவர் ஆற்றிய பணி அவரை தமிழ் மக்களின் இதயங்களில் என்றென்றும் நிலைத்திருக்கச் செய்யும் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் அக்கட்சியின் செயலாளர் செல்வராசா கஜேந்திரன் ஆகியோர் இணைந்து விடுத்துள்ள இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளனர்.

திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வருவதற்கு முன்னரே 1956ஆம் ஆண்டு இலங்கையில் கொண்டுவரப்பட்ட சிங்கள மட்டும் சட்டத்திற்கு எதிராகக் கட்சியின் பொதுச்சபைக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றியதிலும், தமிழ் மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட இன வன்முறைகளின்போது அவற்றை இந்திய நடுவன் அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டுவந்து தமிழர்களைக் காக்க எடுத்த நடவடிக்கைகளிலும் கலைஞரின் பங்கு போற்றத்தக்கது.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தத்தை முடித்துக் கொண்டு ஈழத் தமிழ் தேசத்தை விட்டு இந்தியப்படைகள் வெளியேறி 1990 மார்ச் மாதம் தமிழகத்தைச் சென்றடைந்தபோது அவர்களை வரவேற்பதற்குச் செல்வதில்லை என கருணாநிதி அவர்கள் எடுத்த துணிச்சலான முடிவை ஈழத்தமிழ் மக்கள் என்றும் நன்றியுடன் நினைவில் கொள்வர்.

ஈழத்தமிழர்கள் கருணாநிதி அவர்கள் தமக்குச் செய்த நன்மைகளையும் அவர் இழைத்த தவறுகளையும் என்றும் நினைவில் வைத்திருப்பார்கள்.

2009 ஆம் ஆண்டில் இலங்கை அரச படைகளால் மேற்கொள்ளப்பட்ட இனப்படுகொலையை தடுத்து நிறுத்துவதற்கு அப்போதைய இந்திய காங்கிரஸ் கூட்டணி அரசாங்கத்தில் அங்கம் வகித்த திராவிட முன்னேற்றக் கழகம் உரிய நடவடிக்கை எடுக்கத் தவறியமை தமிழர்களின் மனங்களை ஆழமாகப் பாதித்துள்ளது.

எனினும் அதன் பின்னர் ஜெயலலிதா அரசாங்கத்தினால் இலங்கையில் இடம்பெற்றது இனப்படுகொலை என்பதனையும், அதனை விசாரிக்க சர்வதேச பக்கச்சார்பற்ற விசாரணை வேண்டும் எனவும் வலியுறுத்தும் தீர்மானம் தமிழக சட்ட சபைக்கு கொண்டுவரப்பட்டபோது அதனை ஏகமனதாக நிறைவேற்றுவதற்கு அரசியல் பேதங்களை மறந்து அவரது தலைமையிலான தி.மு.கழகத்தினர் ஆதரவு வழங்கியிருந்தமையை நன்றியுடன் நினைவு கூருகின்றோம்.

கலைஞரின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும் திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களுக்கும் மக்களுக்கும் ஆழ்ந்த இரங்க தெரிவித்துக் கொள்கின்றோம்.

காலஞ்சென்றவர்களான ஜீ. ஜீ. பொன்னம்பலம், எஸ்.ஜே. வி. செல்வநாயகம் உட்பட்ட ஈழத்தமிழ் அரசியற் தலைவர் களுடன் கலைஞர் மிக நெருக்கமான தொடர்புகளைப் பேணி வந்தார்.

அவரது வழியில், தமிழக மக்களுக்கும் ஈழத்தமிழ் மக்களுக்குமான உறவினைக் கட்டிக்காப்பதில் திராவிட முன்னேற்றக்கழகம் தொடர்ந்தும் அக்கறையுடன் செயற்படவேண்டும் என உரிமையுடன் வேண்டிக் கொள்கின்றோம் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் மற்றும் செயலாளர் விடுத்துள்ள இரங்கல் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# சந்நிதி மஹோற்சவ விஞ்ஞாபனம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய மஹோற்சவ விஞ்ஞாபனம் நாளை சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும். 15 தினங்கள் நடைபெறும் இம் மஹோற்சவத்தில் எதிர்வரும் 22 ஆம் திகதி இரவு இந்திர விமான உற்சவமும் 24 ஆம் திகதி சப்பறத் திருவிழாவும் 25 ஆம் திகதி சனிக்கிழமை தேர்த்திருவிழாவும் 26 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளன.(இ-60)

# "இடிபடும் கோட்டைகள்" நாவல் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

நா.யோகேந்திரநாதன் எழுதிய "இடிபடும் கோட்டைகள்" நாவல் வெளியீட்டு விழா நாளை பிற்பகல் 3 மணியளவில் நல்லூர் நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறும்.

1950 - 1960 காலப் பகுதியில் எமது மண்ணில் நிலவிய சமூக, பண்பாட்டு வாழ்வியலை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்ட இலக்கியப் படைப்பாக குறித்த நாவல் வெளிவருகின்றது குறிப்பிடத்தக்கது. (இ-60)

# குழந்தை ம.சண்முகலிங்கத்தின் உறவுகள் நாடக ஆற்றுகை

(யாழ்ப்பாணம்)

நாடக அரங்கக் கல்லூரியின் தயாரிப்பில் ஈழத்து நவீன தமிழ் நாடகத்தின் தந்தை எனப் போற்றப்படுகின்ற குழந்தை ம. சண்முகலிங்கத்தின் எழுத்துருவிலும் நெறியாள்கையிலும் உருவான "உறவுகள்" நாடகம் நாளை 11 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 4 மணியளவில் காலையடி, பண்டத்தரிப்பு என்ற முகவரியில் அமைந்துள்ள மறு மலர்ச்சி மன்றத்தின் தியாகராஜா மகேந்திரன் குடும்ப ஞாபகார்த்த உள்ளரங்கில் ஆற்றுகை செய்யப்படவுள்ளது.

நாடக, இலக்கிய கலைஞர்கள் அனைவரையும் இவ் ஆற்றுகையைக் கண்டுகளிக்க ஒன்றுகூடுமாறு மறு மலர்ச்சி மன்றத்தினர் அழைப்புவிடுத்துள்ளனர். (இ-7)

# மண்டலாபிஷேக பூர்த்தி 108 கலச சங்காபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

மண்டலாபிஷேக பூர்த்தியை முன்னிட்டு ஸ்ரீ மஹா சரஸ்வதி அம்பாளுக்கு 108 கலச சங்காபிஷேகமும்ஏனைய பரிவார தெய்வங்களுக்கு விஷேட கும்ப அபிஷேகமும் எதிர்வரும் 14 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணி முதல்நடைபெறவுள்ளது.

இதில் மண்டலாபிஷேக காலத்தில் கலந்து கொண்டு கலைகளை சமர்ப்பித்த மாணவர்களையும் அவர்களை வழிப்படுத்திய ஆசிரியர்களையும் கௌரவிக்கும் நிகழ்வும் நடைபெறும். அதனைத் தொடர்ந்து மகேஸ்வர பூஜை நடைபெறும். இதில் அடியவர்களை கலந்து கொள்ளுமாறு சண்டிலிப்பாய் ஸ்ரீ சரஸ்வதி உபதேச திருக்கோவில் குருமுதல்வர் சிவ ஸ்ரீ.சபா. வாசுதேவக்குருக்கள் அறிவித்துள்ளார். (இ-9)

# தி.மு.க. தலைவர் கருணாநிதிக்கு வடக்கு மாகாண சபையில் அஞ்சலி



(யாழ்ப்பாணம்)

தமிழக முன்னாள் முதலமைச்சரும் தி.மு.க தலைவருமான கலைஞர் மு.கருணாநிதிக்கு வடக்கு மாகாண சபையில் நேற்று அஞ்சலி செலுத்தப்பட்டது. வடக்கு மாகாண சபையின் 129 ஆவது அமர்வு நேற்று மாகாணசபை சபா மண்டபத்தில் அவைத் தலைவர்சீ.வீ.கே. சிவஞானம்தலைமையில் இடம்பெற்றது. இதன் போதே கலைஞர் கருணாநிதிக்கு மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. (இ-9)

# 5 சாஸ்திரக்காரர்கள் யாழில் நேற்றுக்கைது

## குடிவரவு திணைக்கள அதிகாரிகள் நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

இந்தியாவிலிருந்து வருகை தந்து யாழில் தங்கியிருந்த 5 சாஸ்திரக்காரர்களை குடிவரவு திணைக்கள அதிகாரிகள் நேற்றுக் கைதுசெய்துள்ளனர்.

யாழ்.நகரிலுள்ள பிரபல தங்குமிடத்தில் வைத்தே நேற்றுக்காலை கட்டுநாயக்க விமான நிலைய குடிவரவு திணைக்கள அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

இந்தியாவிலிருந்து வருகை தந்த இவர்கள் ஐந்து பேரும், கடவுச்சீட்டு காலம் நிறைவடைந்த பின்னரும் யாழில் தங்கியிருந்த குற்றச்சாட்டின் பேரிலேயே கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட ஐந்து பேரையும்கட்டுநாயக்க விமான நிலைய அலுவலகத்திற்கு அழைத்துச் சென்றுள்ளதுடன், விசாரணையின் பின்னர் நீதிமன்றில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளதாகவும் அதிகாரிகள் மேலும் தெரிவித்தனர். (இ-101)




# சைவ சமய அறிவுப்போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்.வண்ணை செல்வ விநாயகர் தான்தோன்றி ஸ்ரீ ஞானவைரவர் ஆலய மஹோற்சவத்தை முன்னிட்டு ஆலய இந்து இளைஞர் மன்றத்தின் ஏற்பாட்டில் சைவ சமய அறிவுப்போட்டி நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை யாழ்.பெரியபுலம் மகா வித்தியாலயத்தில் காலை 9 மணிக்கு நடைபெறும். (இ)

# ஐ.நாவின் குற்றச்சாட்டை முற்றாக மறுத்தது இலங்கை

(கொழும்பு)

வடகொரியாவிலிருந்து ஆடைகளை இறக்குமதி செய்ததாக வெளியான செய்தியினை இலங்கை அரசாங்கம் முற்றாக மறுத்துள்ளது.

அமெரிக்காவின் தடைகளையும் மீறி வட கொரியாவிலிருந்து இலங்கை ஆடைகளை இறக்குமதி செய்திருந்ததாக ஐக்கிய நாடுகள் சபையால் குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

இந்நிலையில் இலங்கை வெளிவிவகார அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே குறித்த குற்றச்சாட்டுக்களை முற்றாக மறுத்துள்ளது.

குறித்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

“கடந்த ஒக்டோபர் 2017 மற்றும் மார்ச் 2018 காலப் பகுதியில் இலங்கை உள்ளிட்ட பல நாடுகளுக்கு கொரிய குடியரசிலிருந்து ஆடை இறக்குமதிகள் செய்யப்பட்டமை தொடர்பான செய்தி அறிக்கைகள் எமது அமைச்சின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன.

இலங்கை தொடர்பில் வெளியான செய்தி அறிக்கையில் அடங்கிய தகவல்கள் தவறானவை என எமது அமைச்சு தெளிவுபடுத்த விரும்புகிறது.

ஐக்கிய நாடுகள் சபையின் உறுப்பினர் என்ற வகையில் இலங்கையின் சர்வதேச கடமைகளை பாதுகாக்கும் விதத்தில் இலங்கை அரசாங்கமானது கொரிய ஜனநாயகக் குடியரசு தொடர்பில் ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச்சபையின் தீர்மானங்களின் விதிகளுக்குக் கட்டுப்படுகின்றது.

அதன்படி ஐக்கிய நாடுகள் சபையின் தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவதற்கு அவசியமான உள்நாட்டு ஒழுங்குமுறைகள் தொடர்பான வர்த்தமானிகள் முறையே 6 ஒக்டோபர் 2017, 19 ஏப்ரல் 2018, மற்றும் 14 மே 2018 இல் வெளியிடப்பட்டுள்ளன. (குறிப்பு அதிவிசேட வர்த்தமானி இல. 2039/32, 2067/14 மற்றும் 2071/3)

அந்த தீர்மானங்களை அமுல்படுத்துவதற்கு ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் நிபுணர் குழுவோடு இலங்கை ஒத்துழைக்கிறது. மேலும் அவ்வப்போது பாதுகாப்புச் சபையின் நிபுணர்களின் குழுவால் எழுப்பப்படும் கேள்விகளுக்கான பதில்களை வழங்குகிறது” என தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# 108 சுமங்கலிப் பெண்களால் உபசார ஆராத்தி எடுத்தல் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீ மஹா சரஸ்வதி அம்பாள் மற்றும் அம்பாளுக்கு 108 சுமங்கலிப் பெண்களால் மங்கள உபசார ஆராத்தி எடுக்கும் நிகழ்வு எதிர்வரும் 13.08.2018 திங்கட்கிழமை பிற்பகல் 03.30 மணிமுதல் ஸ்ரீ மஹா சரஸ்வதி அம்பாள் உபதேச திருக்கோவிலில் நடைபெறவுள்ளது.

இவ்வுபசார நிகழ்வின் போது வீணா, வேணு, மிருதங்க, நாட்டிய கீத, வாத்தியங்கள் இசைக்கப்படும்.

சரஸ்வதி உபதேச திருக்கோவிலுக்கு வருகைதந்து தரிசித்து சகல ஐஸ்வரியங்களும் பெற்று நலமுடன் வாழ்வீர்களாக.

பெண்களுக்கெதிரான வன்முறைகள் அற்றுப்போகவும் பெண்கள் பாதுகாப்புடன் வாழ்வதற்கும் சகல நலன்களுடனும் வாழ்வதற்கும் வேண்டி நடைபெறும் பூஜையில் அடியவர்களை கலந்து கொள்ளுமாறு சண்டிலிப்பாய் ஸ்ரீ சரஸ்வதி உபதேச திருக்கோவில் குரு முதல்வர் சிவஸ்ரீ.சபா.வாசுதேவக் குருக்கள் அறிவித்துள்ளார். (இ-9)

# போலி மருந்து விநியோகத்திற்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கை

## சுகாதார அமைச்சு எச்சரிக்கை

(கொழும்பு)

போலி மருந்து வகைகளை இறக்குமதி மற்றும் விநியோகம் செய்வோருக்கு எதிராக சட்டத்தை கடுமையாக அமுல்படுத்துவதாக சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

மருந்து ஒழுங்குமுறை அதிகார சபை, உணவு மருந்துகள் பரிசோதகர்கள் மற்றும் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் இணைந்து போலி மருந்து வகைகளை விநியோகம் செய்வோரை சுற்றிவளைக்கவுள்ளதாக, சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விஷேட வைத்திய நிபுணர் அனில் ஜயசிங்க தெரிவித்துள்ளார்.

இந்த சுற்றிவளைப்புக்களின் போது, கம்பஹா உள்ளிட்ட பல பகுதிகளில் போலி மருந்து வகைகள் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும், இவ்வாறான சந்தேக நபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, கம்பஹா, பியகம, தொம்பே உள்ளிட்ட நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் இயங்குகின்ற போலி வைத்தியர்கள் சம்பந்தமாகவும் சுகாதார அமைச்சுக்கு தகவல் கிடைத்துள்ளதாகவும், இது தொடர்பிலும் தற்போது அவதானம் செலுத்தப்பட்டு வருவதாகவும் சுகாதார சேவைகள் பணிப்பாளர்நாயகம் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதன்பிரகாரம், அனைத்து தனியார் வைத்தியர்களும் தமது தனியார் வைத்திய நிலையங்களை வைத்திய ஒழுங்குமுறை அதிகார சபையில் கட்டாயம் பதிய வேண்டும் என்றும் அவர் வைத்தியர்களைப் பணித்துள்ளார். (இ-7)


Centre for Open and Distance Learning(CODL), University of Jaffna, Sri Lanka.

திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

**வணிகமாணி பட்டப்படிப்பு 2016/2017 (வெளிவாரி) (புதிய பாடத்திட்டம்)**

**Bachelor of Commerce Degree Programme-2016/2017 (External) (New Syllabus) (Semester Based Course Unit System and Grade Point Average Evaluation)**

**புதிய அனுமதிக்கான தெரிவுப் பரீட்சை-2016**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தினால் நடத்தப்புடும் புதிய பாடத்திட்டத்தின் கீழ் அமைந்த நான்கு வருட கால வணிகமாணிக் கற்கைநெறிக்கு புதிய மாணவர்களைத் தெரிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**அனுமதிக்கான தகைமைகள்.**

- க.பொ.த (உ/த) பரீட்சை (வணிகப்பிரிவு)-2016 அல்லது அதற்கு முன்னர் சித்தியடைந்து பல்கலைக்கழக அனுமதிக்கு தகுதியானவர்கள்.

**அல்லது**

- பல்கலைக்கழக மூதவையினால் ஏற்றுக் கொள்ளகூடிய க.பொ.த (உ/த) பரீட்சைக்கு சமமான வேறு தகைமையைக் கொண்டவர்கள்.

**வணிக முதற் தேர்வில் இருந்து விலக்களிப்பு கோருதல்**

- ஏற்கனவே வணிக முதற்தேர்வு அல்லது அதற்கு சமமான கற்கை நெறிகளில் சித்தியடைந்து விலக்களிப்பு கோருவோர், உரிய தகைமைகளை குறிப்பிட்டு விண்ணப்பிக்க முடியும்.

**முக்கிய குறிப்பு: இலங்கை பல்கலைக்கழகமொன்றில் பட்டப்படிப்பொன்றுக்காக பதிவு செய்தவர்கள் விண்ணப்பிக்கலாகாது.**

**மாணவர் தெரிவு:**

- விண்ணப்பதாரிகள் பொது உளச்சார்புப் பரீட்சை அல்லது நேர்முகப் பரீட்சை அல்லது இரண்டின் மூலம் தெரிவு செய்யப்படுவர்.
- பரீட்சை நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

**விண்ணப்பப்படிவங்களைப் பெறுதல்.**

- விண்ணப்பப்படிவத்தினை நேரடியாகப் பெற விரும்புவோர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இயங்கும் மக்கள் வங்கிக் கிளையில் விண்ணப்பம் மற்றும் பரீட்சைக் கட்டணமாக ரூபா.500 ஐ செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டைச் சமர்ப்பித்து யாழ்.பல்கலைக்கழக திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தில் இருந்து அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம். தபால் மூலம் பெற விரும்புவோர், யர்ழ்ப்பாணப் பல்கலைக்கழக நிதியாளருக்கு எழுதப்பட்ட, ரூபா 500 இற்கான காசுக்கட்டளை/தபாற்கட்டளையை, சுய முகவரியிடப்பட்ட ரூபா 50.00 பெறுமதியுடைய முத்திரை ஒட்டப்பட்ட 25X20 செ.மீ. அளவுடைய தபால் உறையுடன், **பிரதிப் பதிவாளர், திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம், யாழ்.பல்கலைக்கழகம்,** திருநெல்வேலி என்ற முகவரிக்கு அனுப்பிப் பெற்றுக் கொள்ள முடியும்.

**விண்ணப்பப்படிவங்களைச் சமர்ப்பித்தல்.**

விண்ணப்பங்கள் யாவும் பிரதி பதிவாளர், திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் **“வணிகமாணி பட்டப்படிப்புக்கான விண்ணப்பம் -2016/2017”** என தெளிவாகக் குறிப்பிடப்படல் வேண்டும்.

**விண்ணப்ப முடிவுத் திகதி: 21.09.2018 (வெள்ளிக்கிழமை) (விண்ணப்ப முடிவுத் திகதிக்கு பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது).**

மேலதிக விபரங்களுக்கு: 021 222 3612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளவும்.

(சி-3464)

பதிவாளர்



**கல்யாணமாலை**

**சர்வதேச திருமண சேவை**

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: சயதம்<br>கி.பா: சூரிசெவ் 7 இல்<br>உயரம்: 6’<br>தகைமை/தொழில்: O/L/அரச தொழில்<br>தொ.இ: B/8798 | பிறப்பு: 1975 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம்<br>கி.பா: 35 செவ் 1 இல்<br>உயரம்: 5’3"<br>தகைமை/தொழில்:BA, MA/ஆசிரியர்<br>தொ.இ: G/112 |
| பிறப்பு: 1975 இந்து<br>நட்சத்திரம்: பூராடம்<br>கி.பா: 36<br>உயரம்: 5’8"<br>தகைமை/தொழில்:BA/ஆசிரியர்<br>தொ.இ: B/696 | பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம்<br>கி.பா: 50 செவ் 7 இல்<br>உயரம்: 4’10"<br>தகைமை/தொழில்:ஆசிரியர்<br>தொ.இ: G/122 |
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>கி.பா: 36<br>உயரம்: 5’6"<br>தகைமை/தொழில்:BBA, MSc, MBA/அரசதொழில்<br>தொ.இ: B/025 | பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி<br>கி.பா: 67 சூரி செவ் 7 இல்<br>உயரம்: 5’3"<br>தகைமை/தொழில்:MBBS/வைத்தியர்<br>தொ.இ: G/126 |
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி<br>கி.பா: சூரி,செவ் 11இல்<br>உயரம்: 5’5"<br>தகைமை/தொழில்:A/L/சொந்ததொழில்<br>தொ.இ: B/043 | பிறப்பு: 1975 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>கி.பா: 47 செவ் 7 இல்<br>உயரம்: 5’4"<br>தகைமை/தொழில்:BA/அரசதொழில்<br>எதிர்பார்ப்பு: சைவபோசனம் முக்கியம்<br>தொ.இ: G/152 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

# ஆயிரத்து 881 குடும்பங்களுக்கு வவுனியாவில் குடிநீர் விநியோகம்


## அரசாங்க அதிபர் முகமட் ஹனிபா தெரிவிப்பு

(குருமன்காடு)

**வவுனியா மாவட்டத்தில் வரட்சியால் பாதிக்கப்பட்ட ஆயிரத்து 881 குடும்பங்களைச் சேர்ந்த ஆறாயிரத்து 830 பேருக்கு குடிநீர் விநியோகிக்கப்பட்டு வருவதாக மாவட்ட அரசாங்க அதிபர் இஸ்மாலெப்பை முகமட் ஹனீபா தெரிவித்துள்ளார்.**

வவுனியா மாவட்டத்தின் வரட்சி நிலை தொடர்பாக வினவிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டின் சீரற்ற கால நிலை காரணமாக வவுனியா மாவட்டத்திலும் வரட்சி நிலை நீடிக்கின்றது. இதன்படி வவுனியா பிரதேச செயலக பிரிவில் 294 குடும்பங்களைச் சேர்ந்த 967 பேரும் வவுனியா வடக்கு பிரதேச செயலக பிரிவில் 115 குடும்பங்களைச் சேர்ந்த 446 பேரும் வவுனியா தெற்கு பிரதேச செயலக பிரிவில் 78 குடும்பங்களைச் சேர்ந்த 257 பேரும் வெண்கலச்செட்டிகுளம் பிரதேச செயலக பிரிவில் 1394 குடும்பங்களைச் சேர்ந்த 5 ஆயிரத்து 160 பேருமாக மொத்தம் ஆயிரத்து 881 குடும்பங்களைச் சேர்ந்த ஆறாயிரத்து 830 பேர் வரட்சியினால் பாதிக்கப்பட்ட நிலையில் தேசிய அனர்த்த நிவாரண சேவைகள் நிலையத்தின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் மாவட்ட செயலகத்தால் அவர்களுக்கான



குடிநீர் வழங்கப்பட்டு வருகின்றது.

நபர் ஒருவருக்கு நாள் ஒன்றுக்கு 6 லீற்றர் வீதம் இக்குடிநீர் வழங்கல் நடவடிக்கைக்காக முதல் கட்டமாக 1.39 மில்லியன் ரூபாய் நிதியை தேசிய அனர்த்த நிவாரண சேவைகள் நிலையத்தால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-250)

# 3 கிலோ கேரளக் கஞ்சாவுடன் வவுனியாவில் இளைஞன் கைது

(குருமன்காடு)

யாழ்ப்பாணத்தில் வைத்து கஞ்சாவுடன் கைது செய்யப்பட்ட நபர் ஒருவர் வழங்கிய வாக்கு மூலத்தின் அடிப்படையில் யாழ்ப்பாணப் பிராந்திய போதை ஒழிப்பு பிரிவினரால் வவுனியாவில் வைத்து இளைஞர் ஒருவர் நேற்று முன்தினம் இரவு கைது செய்யப்பட்டுள்ளார். அவரிடமிருந்து 3 கிலோ 900 கிராம் கேரளக் கஞ்சாவை கைப்பற்றியுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது,


கடந்த 7 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் கஞ்சாவுடன் நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். அவரிடம் யாழ்ப்பாணப் பிராந்திய போதை ஒழிப்புப் பிரிவினர் மேற்கொண்ட விசாரணைகளின் போது வவுனியாவில் கஞ்சா வியாபார நடவடிக்கையில் ஈடுபட்டு வரும் இளைஞர் தொடர்பாக தகவல் கிடைத்துள்ளது. இதையடுத்து யாழ்ப்பாணப் பிராந்திய போதை ஒழிப்புப் பிரிவினரால் இரவு 7 மணியளவில் வவுனியா கூமாங்குளம் பகுதியிலுள்ள வீடொன்றை சோதனை செய்த போது 3 கிலோ 900 கிராம் கேரளக் கஞ்சா மீட்கப்பட்டதுடன், கஞ்சா வைத்திருந்த குற்றச்சாட்டில் கூமாங்குளம் பகுதியைச் சேர்ந்த 21 வயதுடைய இளைஞர் ஒருவரையும் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட இளைஞர் கேரளக் கஞ்சாவுடன் வவுனியா பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டு மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் விசாரணைகளின் பின்னர் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (2-250)

# ஈழத்தமிழர் விடுதலைப் பயணத்தில் கலைஞர் கருணாநிதியின் கனவு நனவாகும்

## முன்னாள் எம்.பி. சந்திரகுமார் இரங்கல்





(பரந்தன்)

தமிழர்களின் பெருந்தலைவர் கலைஞர் மு.கருணாநிதியின் மறைவு உலகத் தமிழர்களையும் இந்திய தேசத்தையும் ஆழ்ந்த துயரத்தில் ஆழ்த்தியுள்ளது என சமத்துவம், சமூக நீதிக்கான மக்கள் அமைப்பாளர் முருகேசு சந்திரகுமார் விடுத்துள்ள இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

எழுபது ஆண்டுகளுக்கு மேலாக அரசியலிலும் சினிமாவிலும் இலக்கியத்திலும் தமிழ் வளர்ச்சியிலும் தமிழ்ப் பண்பாட்டிலும் பெரும் பங்களிப்பைச் செய்த கலைஞர், இறுதி விடைபெற்றுள்ளார். பன்முக ஆற்றலாளராக விளங்கிய கலைஞர், இறுதிவரையில் முழு இந்தியாவிலும் மதிப்புப் பெற்ற அரசியல் தலைவராக விளங்கினார்.

தன்னுடைய அரசியல் வாழ்வில் சவால்களையும் நெருக்கடிகளையும் சந்தித்துக் கொண்டே பல புதிய முன்னுதாரணங்களை உருவாக்கி வரலாற்று நாயகனானார். தமிழகத்தில் மட்டுமல்லாது, ஈழத் தமிழர்களுடைய அரசியல் உரிமைக்கான போராட்டத்திலும் கலைஞரின் பங்களிப்புகள் வரலாற்றுப் பதிவுக்குரியவை. ஏறக்குறைய ஒரு நூற்றாண்டு காலம் வாழ்ந்த கலைஞரின் மறைவு தமிழ்ச்சமூகத்துக்குப் பேரிழப்பாகும்.

இலங்கையில் 1956 இல் தனிச்சிங்களச் சட்டம் கொண்டு வரப்பட்ட போது அதை எதிர்த்து தி.முகவின் சிதம்பரம் மாநாட்டில் தீர்மானம் கொண்டு வந்த கலைஞர், 1983 இல் இலங்கையில் நடந்த இன வன்முறையைக் கண்டித்து சட்டமன்றத்தில் பதவியைத் துறந்திருந்தார்.

1986 இல் டெஸோ மாநாட்டை ஈழவிடுதலைக்கு வலுச்சேர்க்கும் வகையில் இந்தியத் தலைவர்களின் பங்கேற்போடு மதுரையில் நடத்தி, ஈழப் போராட்டத்தையும் இலங்கையின் இன ஒடுக்குமுறையையும் இந்திய அளவில் வலுவூட்டினார்.

இப்படிப் பல்வேறு நிலைகளில் பெரும்பங்களித்த முதுபெரும் தமிழ்த்தலைவர் கலைஞர் கருணாநிதி அவர்களின் இழப்பு ஈழத்தமிழர்களுக்கும் உலகத்தமிழர்களுக்கும் பேரிழப்பாகவே அமைந்துள்ளது. கலைஞரின் இழப்பினால் துயரடைந்திருக்கும் அவருடைய குடும்பத்தினருக்கும் தி.மு.கவினருக்கும் கலைஞரின் கோடி மக்களுக்கும் எங்கள் ஆறுதலையும் ஆழ்ந்த கவலையையும் வெளிப்படுத்துகிறோம். கலைஞருக்கு சமத்துவம், சமூக நீதிக்கான மக்கள் அமைப்பு தனது இறுதி அஞ்சலியைச் செலுத்துகிறது. ஈழத்தமிழர்களுடைய விடுதலைப் பயணத்தில் கலைஞரின் கனவு நனவாகும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-312)

# குடிநீர் தாங்கியில் குளவிக் கூடுகள் அச்சத்துடன் பேருந்து நிலையத்தில் பயணிகள்

(மல்லாவி)

மல்லாவி நகரப் பகுதியில் உள்ள பேருந்து நிலையத்திற்கு அருகே அமைந்துள்ள தேசிய நீர் வழங்கல் அதிகார சபையின் குடிநீர் விநியோகம் செய்யும் பிரதான நீர்த் தாங்கியில் கருங்குளவித் தேன் கூடுகள் காணப்படுவதால் பேருந்து நிலையத்திற்கு வருகை தரும் பயணிகள் அச்சத்துடன் இருந்து பேருந்துக்களில் ஏறிப் பயணிக்க வேண்டிய அவல நிலை காணப்படுவதாகவும் இந்தக் குளவிக்கூடுகளை அகற்றுவதற்கு துறை சார்ந்த அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொது மக்கள் சுட்டிக் காட்டியுள்ளார்கள்.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவது,

துணுக்காய் பிரதேச செயலக பிரிவில் உள்ள மல்லாவி நகரப் பகுதியில் உள்ள பேருந்து நிலையத்திற்கு அருகே அமைந்துள்ள குடிநீர் விநியோகம் செய்யும் பிரதான நீர்த் தாங்கியில் கருங்குளவிக் கூடுகள் காணப்படுகின்றன.

இவை சில வேளைகளில் பலத்த காற்று வீசும் போது திடீரென கலைந்து அருகே உள்ள பேருந்து நிலையத்தில் நிற்கும் பயணிகள் குளவிகளின் கொட்டுக் இலக்காகுவதாகவும் இதனால் புதிதாக அமைக்கப்பட்ட பயணிகள் பேருந்து நிலையத்தில் இருந்து பயணிகள் பயணத்தைத் தொடர அச்சம் கொண்டு வீதிகளில் நின்று பயணிக்கும் அவலநிலை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் துணுக்காய் பிரதேச சபை தவிசாளர் அ.அமிர்தலிங்கத்துடன் தொடர்பு கொண்டு வினவிய போது, இந்த குளவிக் கூடுகள் தொடர்பில் துணுக்காய் பிரதேச செயலக அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் முன் வைக்கப்பட்டுள்ளபோதும் இது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆயினும் தற்போது வரை குளவிக்கூடுகள் அகற்றப்படாமையால் பயணிகள் அச்ச உணர்வுடனேயே பேருந்து நிலையத்தில் இருந்து பயணத்தை தொடர்வதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-15)




# மருதமடுகுள வாய்க்கால்களை புனரமைக்க மதிப்பீடுகள் தயாரிப்பு

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்ட முத்தையன்கட்டு நீர்ப்பாசனத் திணைக்களத்தின் கீழுள்ள மருதமடுக்குளத்தின் நீர்விநியோக வாய்க்கால்களை புனரமைப்பதற்கான மதிப்பீடுகள் தயாரிக்கப்படு வருவதாக நீர்ப்பாசனத் திணைக்களத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முத்தையன்கட்டு நீர்ப்பாசன திணைக்களத்திற்குட்பட்ட மருதமடுக்குளம் கடந்த 2013 ஆம்ஆண்டு புனரமைக்கப்பட்டபோதும் இதனுடைய நீர்விநியோக வாய்க்கால்கள், கழிவு வாய்க்கால்கள் புனரமைக்கப்படாமையினால் பயிர்ச்செய்கை காலங்களில நீர்விநியோகத்தில் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்வதுடன், நீர் வீண்விரயமாவதாகவும் விவசாயிகளும் விவசாய அமைப்புக்களும் தெரிவித்துள்ளன.

புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தில் அண்மையில் நடைபெற்று முடிந்த பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்திலும் குறித்த கோரிக்கை விவசாய அமைப்புக்களால் முன்வைக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் மேற்படி குளத்தின் கீழான நீர்ப்பாசன வாய்க்கால்களின் புனரமைப்புப்பணிகள் தொடர்பில் முத்தையன்கட்டு நீர்ப்பாசனத்திணைக்களத்திடம் தொடர்புகொண்டு வினவிய போது, குறித்த குளத்தின் வாய்க்கால்கள் ஏனைய கட்டுமானங்களை புனரமைக்க வேண்டிய தேவை காணப்படுகின்றது.

புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தில் இறுதியாக நடைபெற்று முடிந்த ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டத்தின் போது இதற்கான மதிப்பீடுகளைத் தயாரித்து சமர்ப்பிக்குமாறு கோரப்பட்டது.

இதற்காக கிட்டத்தட்ட 24 மில்லியன் ரூபா நிதி தேவை. இதற்கான மதிப்பீடுகள் தயாரிக்கும் வேலைகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

அடுத்த வாரமளவில் இதன் பணிகள் நிறைவு பெறும் என மேற்படி நீர்ப்பாசனத்திணைக்களத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-15)

# மாணவர்கள் கிடைக்கின்ற சந்தர்ப்பங்களை சாதகமாக்கி பெருமை சேர்ப்பவர்களாக உருவாகவேண்டும்

## வடக்கு மாகாணசபை உறுப்பினர் தவநாதன் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

கிடைக்கின்ற சந்தர்ப்பங்களை சாதகமாக கொண்டு பெற்றோருக்கும் நாட்டுக்கும் பெருமை சேர்ப்பவர்களாக ஒவ்வொரு மாணவரும் மாறவேண்டும். இதுவே எமது எதிர்பார்ப்பு என வடக்கு மாகாண சபை உறுப்பினருமான வை.தவநாதன் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாணசபை உறுப்பினர்களுக்கான நிதி ஒதுக்கீட்டுக்கமைய தனது வருடாந்த அபிவிருத்தி நிதி ஒதுக்கீட்டின் பிரகாரம் கிளிநொச்சி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த மாணவர்களுக்கு துவிச்சக்கர வண்டிகளை வழங்கி வைக்கும் நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவிக்கையில்,

நாம் இவ்வாறு உதவித் திட்டங்களை வழங்குவது மாணவர்களின் கற்றலை இலகுபடுத்துவதற்காகவே. தூர பிரதேச பாடசாலைகளுக்குச் செல்வதற்கும் மாலை நேரக் கல்விக்கு செல்வதற்கும் இந்த உதவிகள் மாணவர்களுக்கு பெரிதும் பயனுள்ளதாக இருக்கும்.

இந்த உதவித்திட்டங்கள் மட்டும் மாணவர்களின் கல்வி வளர்ச்சியை உயர்த்திவிடாது. மாறாக ஆசிரியர்கள், பெற்றோர்கள், கல்வி நிர்வாகிகள் மற்றும் மாணவர் சார்ந்த சமூகத்தின் ஒட்டுமொத்த வலுவூட்டலும் தான் ,மாணவர்களை சாதனை நோக்கி இட்டுச்செல்ல முடியும். எனவே துரித வளர்ச்சிக்கு இவ்வாறான உதவிகளை ஒரு துரும்பாக பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

மாணவர்கள் சவால்களை எதிர்கொண்டு தடைகளை மீறி கல்வியில் முன்னேறவேண்டும். எதிர்கொள்கின்ற பரீட்சைகளுக்கு தங்களை முழுமையாக தயார்படுத்திக்கொண்டு பரீட்சைகளுக்கு துணிச்சலாக முகம்கொடுத்து சாதனை மாணவர்களாகத் திகழ வேண்டும் எனவும் அவர் கேட்டுக் கொண்டார். (2)

# எட்டு நீர்ப்பாசனக்குளங்கள், பிரதான கால்வாய்கள் புனரமைக்கும் பணிகள் விரைவில் ஆரம்பிக்கப்படும்

## முல்லை.மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்களத் தகவல்படி

(மல்லாவி)

மத்திய விவசாய அமைச்சின் நடப்பாண்டுக்குரிய 03, கோடியே 30 இலட்சம் ரூபா நிதியொதுக்கீட்டில் முல்லைத்தீவு மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்களத்திற்குட்பட்ட கமநல் சேவை நிலையங்களுக்குட்பட்ட 8 நீர்ப்பாசனக் குளங்களின் புனரமைப்பு மற்றும் பிரதான கால்வாய்கள் புனரமைப்பு வேலைகள் செய்யப்படவுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் அலுவலகத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது, மத்திய விவசாய அமைச்சின் 3 கோடியே 30 இலட் சம் ரூபா நிதி உதவியுடன், பாண்டியன்குளம் கமநல சேவை நிலையத்திற்குட்பட்ட நீர்ப்பாசனக்குளங்களான கொல்லவிளாங்குளம் புனரமைப்புச் செய்வதற்காக 40 இலட்சத்து 95 ஆயிரம் ரூபாவும், அம்பிவைத்த குளம் புனரமைப்புச் செய்வதற்காக 48 இலட்சத்து 90 ஆயிரம் ரூபாவும், உழவன் ஏரிக்குளம் புனரமைப்புச் செய்வதற்காக 49 இலட்சத்து 99 ஆயிரம் ரூபாவும் துணுக்காய் கமநல சேவை நிலையத்திற்குட்பட்ட கரம்பைக் குளம் புனரமைப்புச் செய்வதற்காக 40 இலட்சம் ரூபாவும், உடையார்கட்டு கமநல சேவை நிலையத்தின் கீழ் உள்ள வேணாவில் குளம் புனரமைப்புச் செய்வதற்காக 24 இலட்சத்து 16 ஆயிரம் ரூபாவும், கொக்குத் தொடுவாய் கமநல சேவை நிலையத்திற்குட்பட்ட அரசன் குளத்தினை புனரமைப்புச் செய்வதற்காக 47 இலட்சத்து 10 ஆயிரம் ரூபாவும், புதுக்குடியிருப்பு கமநல சேவை நிலையத்திற்குட்பட்ட வேணாவில் குளம் புனரமைப்புச் செய்வதற்காக 20 இலட்சம் ரூபாவும், முள்ளியவளை கமநல சேவை நிலையத்திற்குட்பட்ட சின்னக் குளம் புனரமைப்புச்செய்வதற்காக 49 இலட்சத்து 90 ஆயிரம் ரூபாவுமாக மொத்தம் 3 கோடியே 30 இலட்சம் ரூபா நிதி 8 நீர்ப்பாசன குளங்களின்புனரமைப்புக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்த குளங்களின் புனரமைப்பு வேலைகளுக்காக பொருத்தமான ஒப்பந்ததாரர்கள் தெரிவு செய்யப்பட்டு வேலைகள் ஒப்படைக்கப்பட்டு நடப்பாண்டுக்குள் வேலைகள் முடிவுறுத்தப்படவுள்ளன.

எனவே இந்த வேலைத் திட்டம் நடைபெறவுள்ள பகுதியில் உள்ள கமக்கார அமைப்புக்களிற்குட்பட்ட விவசாயிகள் வேலைகள் தொடர்பில் கண்காணிப்பு செலுத்துவதுடன், வேலைகளில் ஏதும் குறைபாடுகள் காணப்படின் தங்கள் பகுதி கமநல சேவை நிலையத்தின் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் ஊடாகவோ அல்லது நேரடியாகவோ முல்லைத்தீவு மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்களத்திற்கு அறியத்தருமாறும் முல்லைத்தீவு மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின்அலுவலகத்தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-15)

# பயிர்ச்செய்கை மேற்கொள்ள முடியாதநிலை; வனவளப்பிரிவினர் எல்லை அடையாளமிடல் ஜனாதிபதிக்கு கடிதம் அனுப்பப்படும்

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தின் ஜெயபுரம் விவசாயிகள் தமக்கான வயல் காணிகளை வழங்க நடவடிக்கை எடுக்குமாறு கோரி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கு கடிதம் அனுப்பவுள்ளதாக தெரிவித்துள்ளனர்.

பூநகரிப்பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட ஜெயபுரம் பகுதியில் 1983ஆம்ஆண்டு காலப்பகுதிக்கு பின்னர் தங்களுக்கு வழங்கப்பட்ட வயல் காணிகள் 1990 ஆம் ஆண்டில் நாட்டில் இடம் பெற்ற யுத்தம் காரணமாக கைவிடப்பட்ட நிலையில் தற்போது அவற்றை துப்புரவு செய்து பயிர்ச்செய்கை மேற்கொள்ள முடியாத நிலையில் வனவளப் பிரிவினர் அடையாளப்படுத்தி எல்லையிட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளனர்.

குறித்த பகுதியிலுள்ள வயல் காணிகளை விடுவித்து தருமாறு கோரிக்கை விடுத்த நிலையில் கடந்தாண்டின் இறுதியில் 100 ஏக்கர் காணிகளைக் துப்புரவு செய்து விவசாயிகளுக்கு பகிர்ந்தளிக்கும் வகையில் அரசாங்கத்தினால் நிதி வழங்கப்பட்டு துப்புரவுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

இந் நிலையில் வனவளப் பிரிவினர் 'இதனை துப்புரவு செய்வதற்கு தடை விதித்துள்ளனர்.

இதனையடுத்து குறித்த காணிகளை துப்புரவு செய்து தமது வாழ்வாதாரப் பயிர்ச் செய்கைகளுக்கு வழங்குமாறு ஜெயபுரம் விவசாயிகள் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

இதுதொடர்பில் கருத்துத் தெரிவித்த ஜெயபுரம் கமக்கார அமைப்பின் தலைவர் தமக்கான வயல் காணிகளை தருவதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகளில் வனவளப் பிரிவினர் தடைகளை விதித்துள்ளனர்.

ஏமக்கான காணிகளை வழங்குமாறு கடந்த மாதம் 30 ஆம் திகதி பூநகரிக்கு விஜயம் செய்த அமைச்சர் மனோ கணேசனிடம் மகஜர் ஒன்றினை கையளித்துள்ளோம்.

இதேவேளை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க விற்கும் மகஜர் ஒன்றை அனுப்பி வைத்துள்ளோம். இதேவேளை எமக்கான காணிகளைப் பெற்றுத்தரக் கோரி ஜனாதிபதிக்கான மகஜர் ஒன்றினை அனுப்பி வைக்கவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-315)




# போரில் மூன்று பிள்ளைகளை இழந்த குடும்பத்திற்கு உதவி



(முல்லைத்தீவு)

முன்னாள் போராளி ஒருவரின் குடும்பத்திற்கு ஒரு இலட்சம் பெறுமதியான வாழ்வாதார உதவி வழங்கப்பட்டுள்ளன.

இளவாலை வருத்தப் படாத வாலிபர் சங்கத்தின் "உயர்த்தும் கரங்கள்" செயற்திட்டத்தின் கீழ், முல்லைத்தீவில் வசித்துவரும், போரில் 3 பிள்ளைகளை இழந்தும், மேலுமிரு பிள்ளைகள் போரில் காயப்பட்ட நிலையிலும் மிகுந்த நலிவான பொருளாதாரச் சூழலில் வாழ்ந்துவரும் பெண் தலைமைத்துவ குடும்பம் ஒன்றிற்கு நாளுக்கு ஒன்பது போத்தல்கள் பால் கறக்கும் ஒரு இலட்சம்ரூபா பெறுமதியான பசுமாடும், பசுக்கன்றும் வழங்கப்பட்டது.

இவ் வாழ்வாதார உதவியின் தேவையை நேரில் சென்றுஉண்மைத்தன்மையை உறுதி செய்து பசுமாட்டையும், பசுக்கன்றையும் அண்மையில் சங்க உறுப்பினர்கள் வழங்கி வைத்தனர். (2)

# முல்லை.மீனவர்களின் போராட்டத்திற்கு மக்கள் விடுதலை முன்னணி ஆதரவு!

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர்கள் தடை செய்யப்பட்ட தொழில் நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்து இன்று ஒன்பதாவது நாளாகவும் தொடர்ச்சியாக கவனயீர்ப்பு நடவடிக்கையினை முன்னெடுத்து வருகின்றார்கள்.

இவர்களின் போராட்டத்திற்கு பல மீனவ அமைப்புக்கள் ஆதரவு தெரிவித்து வரும் நிலையில் நேற்று முன்தினம் மக்கள் விடுதலை முன்னணியின் அகில இலங்கை பொதுமீனவர்சம்மேளன அமைப்பாளர் ரத்னகமகே உள்ளிட்டவர்கள் சென்று தங்கள் ஆதரவை வெளிப்படுத்தியுள்ளார்கள்.

திருகோணமலையில் நேற்று முன்தினம் மக்கள் விடுதலை முன்னணியின் ஏற்பாட்டில் தடைசெய்யப்பட்ட கடற்றொழில் நடவடிக்கைக்கு எதிர்ப்பு தெரிவித்து பாரிய ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்துள்ளதாகவும் அதன் பின்னர் முல்லைத்தீவு மாவட்டத்தில் போராட்டம் மேற்கொள்ளும் மீனவர்களைச் சந்தித்து அவர்கள் ஆதரவை வெளிப்படுத்தியுள்ளதாகவும் மக்கள் விடுதலை முன்னணியின் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளார்கள்.

வடக்கில் இந்தியாவில் இருந்து வருகைதரும் ரோலர்களால் கடல்வளங்கள் சூறையாடப்பட்டு வருகின்றபோது தெற்கில் மக்கள் விடுதலை முன்னணியின் பாரிய ஆர்ப்பாட்டத்தை மேற்கொண்டு அதற்கான நடவடிக்கையை எடுக்க இலங்கை அரசை வலியுறுத்தி வரும் நிலையில் தற்போது அங்கீகரிக்கப்பட்ட வலைகளை மற்றும் தொழில் உபகரணங்களை ஒருசில முதலாளிமார்கள் பயன்படுத்துவதால் மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது.

இந் நிலையை அனைவரும் ஒன்றிணைந்து எதிர்ப்பதன் ஊடாக நல்ல மாற்றத்தை காணலாம். இதற்காக வடக்கு மீனவர்களுடன் தெற்கில் உள்ள மக்கள் விடுதலை முன்னணியும் இணைந்து செயற்படும் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

இதன்போது முல்லைத்தீவு மாவட்ட மீனவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினை தொடர்பில் வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரனினால் கடற்றொழிலாளர் அமைப்பின் தலைவர்களினாலும் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. (2-281)

# கடற்றொழில் நீரியல்வள அமைச்சர் முல்லைக்கு 12ம் திகதி வருகின்றார்

## சாந்தி எம்.பி. தெரிவிப்பு

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்ட மீனவர்களின் பிரச்சினைகள் தொடர்பில் ஆராய்வதற்காக எதிர்வரும 12 ஆம் திகதி கடற்றொழில் நீரியல் வளங்கள் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சர் விஜித விஜயமுனி சொய்சா முல்லைத்தீவுக்கு வருகை தரவுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் சாந்திசிறிஸ்கந்தராஜா தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் தடை செய்யப்பட்ட மற்றும் அனுமதியற்ற கடற்றொழில்களால் தமது வாழ்வாதாரத்தொழில் முழுமையாகப் பாதிக்கப்படுவதாக தெரிவித்து முல்லைத்தீவு மாவட்ட மீனவர்கள் கடந்த 2ஆம்திகதிமுதல்கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றை முன்னெடுத்து வருகின்றனர்.

இச்சம்பவத்தையடுத்து கடற்றொழில் மற்றும் நீரியல் வளத்திணைக்களத்தின் பணிப்பாளர் இனிகே ஜனக பிரசன்ன குமார நேற்று முன்தினம் எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன், கடற்றொழில் நீரியல் வளங்கள் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சர் விஜித விஜயமுனி சொய்சா ஆகியோரின் பங்குவற்றுதலுடன் அமைச்சின் செயலகத்தில் கலந்துரையால் ஒன்று நடைபெறவுள்ளதாக தெரிவிக்கப்பட்டிருந்தபோதும், குறித்த சந்திப்பு அன்றைய தினம் நடைபெறவில்லை.

இதனையடுத்து பாராளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறிஸ்கந்தராஜாவிடம் இது தொடர்பில் வினவியபோது, குறித்த சந்திப்பு நடைபெறவில்லை என்றும் அமைச்சர் எதிர்வரும் 12 ஆம் திகதி முல்லைத்தீவுக்கு விஜயம் செய்து மீனவர்களுடன் கலந்துரையாடவுள்ளார் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-315)

# ஏற்று நீர்ப்பாசனத் திட்டத்தின் ஊடாக நீர் விநியோகத்தை மேற்கொள்ளுங்கள்

## விவசாயிகள் கோரிக்கை

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தின் திருவையாறு பகுதியில் கடுமையான வரட்சியினால் தாங்கள் பல்வேறு பாதிப்புக்களை எதிர்கொள்வதாகவும் ஏற்றுநீர்ப்பாசனத் திட்டத்தின் மூலம் நீர்விநியோகத்தை மேற்கொள்ளுமாறும் விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கிளிநொச்சி இரணைமடுக்குளத்தின் கீழுள்ள திருவையாறு ஏற்றுநீர்ப்பாசனத்திட்டத்திற்குட்பட்ட பகுதியில் தற்போது நிலவுகின்ற கடுமையான வரட்சி காரணமாக கூடுதலான கிணறுகளில் நீர் இன்றிக் காணப்படுவதுடன் பெருமளவான பயன்தருமரங்களும் அழிவடையும் அபாய நிலை காணப்படுகின்றது.

இப்பகுதியில் இருந்த ஏற்று நீர்ப்பாசனத்திட்டம் கடந்த 1991 ஆம் ஆண்டு காலப்பகுதியில் செயலிழந்த நிலையில் தற்போது 400 மில்லியனுக்கும் மேற்பட்ட நிதியொதுக்கீட்டில் புனரமைக்கப்பட்டு அதன் வேலைகள் முழுமைபெற்று வெள்ளோட்ட நீர்விநியோகமும்மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்த நிலையில் தற்போது நிலவும் வரட்சியை நீக்கும் வகையில், ஏற்று நீர்ப்பாசனத்திட்டத்தின் மூலமும் நீர்விநியோகத்தை மேற்கொள்ளுமாறு பிரதேச மக்களும் விவசாயிகளும் கோரிக்கைவிடுத்துள்ளனர். (2-315)

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் பிரிவு A வழங்கும்...

# இனங்களின் ஆக்கிரமிப்பு!

# சூழலியல் சார்ந்த ஓர் பார்வை

ஆக்கிரமிப்பு அல்லது இனங்களின் ஆக்கிரமிப்பு என்பது பண்டைய காலம் முதல் தற்காலம் வரை மனிதன் சார்ந்த ஓர் நிகழ்வாகவே பார்க்கப்பட்டு வருகிறது. மனிதன் தனக்குரிமையில்லாத இடங்களை நியாயமற்ற ரீதியில் ஆக்கிரமிப்புச் செய்யும்போது பல வழிகளிலும் அது பேசப்படுகிறது. போருக்கும் வழிவகுக்கின்றது. ஆனால் இப்புவியானது மனிதனுக்கு மட்டும் உரியதன்று. பல்வேறு உயிரினங்களால் பகிரப்படும் உயிர்க்கோளமாகும். இவ்வுயிர்க் கோளத்தில் உள்ள பல்வேறு உயிரினங்களும் அவற்றுக்கே உரித்தான இடங்களில் தோற்றம் பெற்றது என நம்பப்பட்டாலும் அவற்றின் பரம்பலும் கூர்ப்பும் சூழற்காரணிகளுடன் தொடர்புபட்டது. எனவே இயற்கையான பரம்பல் ஏற்றுக் கொள்ளப்படக்கூடியதே.

ஆனால் மனித நடவடிக்கைகளால் குறித்த நோக்கம் கருதி அல்லாது தவறுதலாக புதிய இடங்களுக்கு அறிமுகப்படுத்தப்படும் போது சில இனங்கள் புதிய இடங்களை ஆக்கிரமிப்புச் செய்கின்றன. இவ்வாறு தமக்குரித்தான வாழிடங்களுக்கு வெளியே மனிதனால் குறித்த தேவை கருதி அல்லது தற்செயலாக அறிமுகம் செய்யப்படுகின்ற இனங்கள் புதிய வாழிடத்தில் தமது இனப்பெருக்கம் மற்றும் குடித்தொகையை விரைவாக நிலைநிறுத்துவதுடன் அவ்வாழிடத்தில் இயற்கையாகவுள்ள இனங்களை இடம்பெயர அல்லது அழிவடையச் செய்கின்றன. இத்தகைய இனங்கள் ஆக்கிரமிக்கும் அந்நிய இனங்கள் (Invasive Alien Species–IAS) என அழைக்கப்படுகின்றன.

இவ்வாறு புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட எல்லா இனங்களும் ஆக்கிரமிக்கும் இனங்களாக மாறுவதில்லை. ஆனால் மாற்றமடையக்கூடிய இனங்கள் குறுகிய காலத்தில் அல்லது நீண்ட காலத்தில் ஆக்கிரமிக்கும் இனங்களாக மாற்றமடையலாம்.

அறிமுகப்படுத்தப்படும் இனங்கள் ஆக்கிரமிக்கும் இனங்களாக மாற ஏதுவான காரணிகள்:

1. புதிய வாழிடத்தின் சூழற் காரணிகள்/காலநிலை ஏதுவாக இருத்தல்.

2. புதிய வாழிடத்தில் போதிய உணவு கிடைத்தல்/ உணவிற்கான போட்டி குறைவு.

3. புதிய வாழிடத்தில் இரை கௌவிகள் காணப்படாமை.

4. புதிய வாழிடம் இனப்பெருக்கத்திற்கு ஏற்ற சூழ்நிலைகளைக் கொண்டிருத்தல்.

5. அறிமுகப்படுத்தப்பட்ட இனத்திலிருந்து மனிதனுக்கு குறிப்பிடத்தக்க பயன் கிடைத்தல்.

6. மனிதனுக்கு தனது சூழல் பற்றிய விழிப்புணர்வு காணப்படாமை.

7. அறிமுகப்படுத்தப்பட்ட இனங்கள் தமக்கு வரையறுக்கப்பட்ட வாழிடங்களிலிருந்து தப்புதல்.


ஆக்கிரமிக்கும் அந்நிய இனங்களால் ஏற்படும் பாதிப்புக்கள்

1. உயிர்ப்பல்வகைமைக்கு அச்சுறுத்தலாயிருத்தல்

Nile perch



உயிர்ப்பல்வகைமை (Biodiversity) என்பது குறித்த வாழிடத்தில் உள்ள பல்வேறு உயிரினங்களின் (தாவர,விலங்கு) பன்மையை குறிக்கின்றது. அறிமுகப்படுத்தப்பட்ட இனங்கள் ஏனைய இனங்களை உணவாக உட்கொள்ளல், வாழிடத்திற்காக போட்டியிடல், இனப்பெருக்கத்திற்கான போட்டி, மற்றும் கலப்பினங்களை தோற்றுவித்தல் மற்றும் உணவுக்கான போட்டி என்பவற்றால் உயிர்ப்பல்வகைமைக்கு பெரும் அச்சுறுத்தலாய் உள்ளன.



சீமைக்கருவேல மர ஆக்கிரமிப்பால் ஆபத்துக்குள்ளாகியுள்ள வண்ணத்துப்பூச்சி இனங்கள்

(உ-ம்):- வட ஆபிரிக்காவிலிருந்து மத்திய ஆபிரிக்காவின் விக்டோரியா நீர்த்தேக்கத்திற்கு அறிமுகப்படுத்தப்பட்ட Nile perch மீனினம் ஏறத்தாழ 200 இன மீன்கள் முற்றாய் அழிவதற்கு காரணமாகின.

2. புதிதாக அறிமுகமாகும் இனங்கள் பூர்வீக இனங்களை மாற்றீடு செய்வதால் பூர்வீக இனங்களில் தங்கிவாழும் இனங்களும் அழிவடைகின்றன.

(உ-ம்):- சீமைக்கருவேல மரங்களின் பரம்பலால் பல பூக்கும் தாவரங்கள் அழிவடைந்துள்ளன. அத்துடன் இப்பூக்கும் தாவரங்களில் தேன்குடிக்கும் வண்ணத்துப் பூச்சி இனங்களும் அவற்றின் குடம்பிகளும் (மயிர்க்கொட்டிகள்) உணவின்மையால் அழிவடைந்து வருகின்றன. இத்தரவுகள் இலங்கையில் செய்யப்பட்ட ஆய்வுகளில் கண்டறியப்பட்டுள்ளன.

3. பொருளாதாரத்தில் பாதிப்பை ஏற்படுத்தல்


உணவுக்காக பயன்படும் தாவர விலங்குகள் அறிமுகப்படுத்தப்பட்ட இனங்களால் மாற்றீடு செய்யப்படல்.

(உ-ம்):- 1.விவசாய நிலங்களில் பார்த்தீனியத்தின் பரம்பல்

2. விவசாய நிலங்களில் நத்தைகளின் தாக்கம்

இங்கு இவ்வினங்களால் ஏற்படும் நட்டம் தவிர இவ்வினங்களை அழிப்பதற்கு/கட்டுப்படுத்துவதற்கு பெருமளவு பணம் செலவழிக்கப்படுகிறது.

Zebra Mussel எனப்படும் இருவால்விகள் நீரில் வளர்ப்பு (Aquaculture) செய்வதற்காக ரஷ்யாவின் தெற்கு மற்றும் கஸ்பியன் கடற்பகுதிகளிலிருந்து அமெரிக்கா,



பிரித்தானியா மற்றும் தெற்கு ஐரோப்பிய நாடுகளுக்கு அறிமுகம் செய்யப்பட்டன. ஆனால் அவற்றின்



குடித்தொகைப்பரம்பல் மற்றும் பெருக்கம் நீர்மின் வலு உற்பத்தி நிலையங்களுக்கும் நீர் வழங்கலுக்கும் பெரும் அச்சுறுத்தலாய் மாறியுள்ளன.

சீமைக்கருவேல மரம்



4. தரைத்தோற்றம் மற்றும் மண்வளத்தில் ஏற்படுத்தும் பாதிப்புக்கள்

உதாரணமாக அவுஸ்திரேலியாவுக்கு ஐரோப்பியர்கள் குடிபெயரும்போது உணவுக்காக அறிமுகப்படுத்தப்பட்ட ஐரோப்பிய காட்டு முயல்கள் பல்கிப்பெருகி அங்குள்ள இயற்கை மற்றும் விவசாய நிலங்களிலுள்ள தாவரங்களின் அழிவுக்கு பெரும் அச்சுறுத்தலாயின. தாவரப்போர்வை அழிக்கப்பட்ட பல இடங்கள் வெள்ளம் வரும்போது மண்ணரிப்புக்குள்ளாகியமை பதிவு செய்யப்பட்டுள்ளது.

5.நோய்க்காவிகளின் பரம்பல்

பல்வேறு தாவர, விலங்கு மற்றும் நோய் காவும்/நோய் விளைவிக்கும் நுண்ணங்கிகளின் பரம்பல்


உதாரணமாக tiger mosquito என அழைக்கப்படும் Aedes albopictus கிழக்காசியாவுக்குரிய இனமாகும். இது தற்போது அமெரிக்கா மற்றும் ஐரோப்பாவுக்கு பரவியுள்ளதுடன் டெங்கு மற்றும் பல வைரஸ்களை பரப்புகின்றது. இதன் பரம்பலானது பாவித்த ரயர் ஏற்றுமதியுடன் தொடர்புபட்டுள்ளதாக நம்பப்படுகிறது.

6. சுற்றுலாத் துறையின் பாதிப்பு

வாழிடம் அழிக்கப்படும்போது அவ்வாழிடம் சார்ந்த சுற்றுலாத் துறையும் பாதிப்புக்குள்ளாகிறது.

இவ்வகையில் உலகளாவிய ரீதியில் பல்வேறு உயிரினங்கள் அறிமுகப்படுத்தப்பட்ட ஆக்கிரமிக்கும் அந்நிய உயிரினங்களாக இனங்காணப்பட்டுள்ளதுடன் பல்வேறு நாடுகளும் அவற்றை கட்டுப்படுத்த பாரிய முயற்சியை எடுத்துள்ளன.

உலகளாவிய ரீதியில் இனங்காணப்பட்ட முதல் 34 உயிர்ப்பன்மை கூடிய இடங்களில் (Biological Hot spots) ஒன்றாக இலங்கை காணப்படுகிறது. இதற்கு பரப்பளவில் சிறிய இலங்கைத் தீவானது பரந்த காலநிலை வீச்சையும் வேறுபட்ட வாழிடங்களையும் கொண்டிருத்தலும் அதிகளவான உள்நாட்டு, சுதேச இனங்



களை கொண்டிருத்தலும் முக்கிய காரணங்களாகும். இவ்வாறு சூழலியல் முக்கியத்துவம் வாய்ந்த இலங்கையும் பல்வேறு அந்நிய இனங்களின் ஊடுருவல் மற்றும் பரம்பலால் அச்சுறுத்தலுக்குள்ளாகியுள்ளமை மறுக்கப்பட முடியாத உண்மை ஆகும். ஆனால் எமது சூழல் எமக்கு (மனிதனுக்கு) மட்டுமல்ல ஏனைய பல்வேறு உயிரினங்களுக்கும் உரித்தானது





என்ற விழிப்புணர்வு குறைவாகவே எம்மிடத்தில் உள்ளது. எனவே எமது சூழல் சார்ந்த ஓர் விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கிலேயே இக்கட்டுரை வரையப்படுகிறது.

(தொடரும்....)

கலாநிதி.வி.சா.துளசிதா
சிரேஷ்ட விரிவுரையாளர்,
விலங்கியல்துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

புதிர் 210 க்கான 500/- பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி

ஜோன் யோர்தான் யோகராசா
வல்லை வீதி,
தொட்டிலடி,
சங்கானை.

**புதிர் 210க்கான கேள்வியும் விடையும்:**

Penicillin எனும் முதலாவது வெற்றிகரமான நுண் உயிர்க்கொல்லியை கண்டறிந்தவர் யார்?

Alexander Flaming

## வாரத்திற்கு ஒரு புதிர்! 211

இலங்கையின் தேசிய பறவையின் விஞ்ஞானப் பெயர் என்ன?

Dr. வி.சா.துளசிதா
விலங்கியல்துறை,
விஞ்ஞானபீடம்,
யாழ். பல்கலைக்கழகம்.

**புதிர் 211 இற்கான விடைகளை 20.08.2018 இற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்ப வேண்டிய முகவரி:**

சரியான விடையை அனுப்பும் அதிர்ஷ்டசாலிக்கு ருபா 500/- பணப்பரிசு வழங்கப்படும்.
இப் பணப்பரிசினை யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் பிரிவு A ஆசிரியரிடம் நேரில் சென்று பெற்றுக் கொள்ளலாம்.

**யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் புதிர் இல. 211**

சரியான விடை:-..........................................

முழுப்பெயர்:-..........................................

முகவரி:-..........................................

தொ.பே. இல:..........................................

கையொப்பம்:..........................................

# நீதிமன்ற அவமதிப்பு குற்றச்சாட்டு; சுற்றவாளி என அறிவித்த ரஞ்சன்




(கொழும்பு)

நீதிமன்ற அவமதிப்பு குற்றச்சாட்டின் கீழ் பிரதி அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்கவிற்கு எதிராக சட்டமா அதிபர் தாக்கல் செய்துள்ள வழக்கின் சாட்சிகளை விசாரணைக்கு உட்படுத்த உயர் நீதிமன்றம் நேற்று முன்தினம் தீர்மானித்தது.

பிரதி அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க நீதிமன்றத்தை அவமதித்துள்ளதாகக் கூறி குற்றப்பத்திரிகையின்வரைவை சட்டமா அதிபர் கடந்த ஜூலை 30 ஆம் திகதி உயர் நீதிமன்றில் சமர்ப்பித்த நிலையில், அது நேற்று முன்தினம் எந்தத் திருத்தங்களுமின்றி குற்றப் பத்திரிகையாக பிரதி அமைச்சர் ரஞ்சனுக்கு எதிராக நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்டது. இதனையடுத்து அந்த குற்றப் பத்திரிகையில் ரஞ்சனுக்கு எதிராக 4 குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டிருந்தன.

குறித்த குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் தான் சுற்றவாளி என ரஞ்சன் ராமநாயக்க நீதிமன்றத்தில் அறிவித்ததை தொடர்ந்தே வழக்கின் சாட்சிகளை விசாரிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது.

பிரதம நீதியரசர் பிரியசாத் டெப், உயர்நீதிமன்ற நீதியரசர்களான நளின்பெரேரா மற்றும்பிரசன்ன ஜெயவர்த்தன ஆகியோர் முன்னிலையில் இந்த வழக்கு நேற்று முன்தினம் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

இந் நிலையில் வழக்கின் சாட்சியாளர்கள் பட்டியலை நீதிமன்றத்தில் எதிர்வரும் செப்டெம்பர் 5 ஆம் திகதி சமர்ப்பிக்குமாறு உயர்நீதிமன்றம் சட்டமா அதிபருக்கு உத்தரவு பிறப்பித்த நிலையில் அன்றைய திகதிக்கு இந்த வழக்கையும் ஒத்தி வைத்தது.

நீதிமன்றத்தை அவமதித்த விவகாரம் தொடர்பில் பிரதி அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்கவிற்கு எதிராக மாகல்கந்த சுதத்த தேரர் மற்றும் ஓய்வுபெற்ற விமானப்படை அதிகாரியான சுனில் பெரேரா ஆகியோர் உயர் நீதிமன்றில் வழக்குத் தொடர்ந்திருந்தனர்.

ரஞ்சன் ராமநாயக்கவிற்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவில், கடந்த 2017 ஓகஸ்ட் 21 ஆம் திகதி ஊடகங்களிடம் கருத்து வெளியிட்ட ரஞ்சன், நாட்டில் பெரும்பாலான சட்டத்தரணிகள் ஊழல்வாதிகள் எனக் குறிப்பிட்டுள்ளதாகவும் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் இவ்வாறு கூறியமையானது, மக்களுக்கு நீதித்துறை தொடர்பில் இருக்கும் நம்பிக்கையை சீர்குலைக்க வாய்ப்புள்ளதாகவும்சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதனால், நீதிமன்றத்திற்கு அபகீர்த்தி ஏற்பட்டுள்ளதாகவும் இது தொடர்பில் விசாரணை நடத்தி பிரதி அமைச்சருக்கு எதிராக உரிய தண்டனையை வழங்குமாறும் மனுதாரர்கள் கோரியுள்ளனர்.

பிரதி அமைச்சர் ஊடகங்களுக்கு தெரிவித்த கருத்து தொடர்பான காணொலியை பரிசீலித்த உயர்நீதிமன்ற நீதிபதிகள் மேலோட்டமாக பார்க்கும் போதே அவர் நீதிமன்றத்தை அவமானப்படுத்தும் விதமாக பேசுவது தெளிவாகத் தெரிவதால் ரஞ்சன் ராமநாயக்கவிற்கு எதிராக குற்றப் பத்திரிகையை தாக்கல் செய்ய நடவடிக்கை எடுக்குமாறு சட்டமா அதிபருக்கு கூறினார்.

அதனடிப்படையில் சட்டமா அதிபரினால் முதலில் குற்றப்பத்திரிகை வரைவு முன்வைக்கப்பட்டதுடன் நேற்று முன்தினம் அது குற்றப் பத்திரிகையாக தாக்கல் செய்யப்பட்டது. அதன்படியே ரஞ்சன் ராமநாயக்கவுக்கு எதிரான வழக்கை விசாரணை செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# சீனாவுடனான சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் மேற்கொள்ளப்படின் இருதரப்புக்கும் அனுகூலம்

(கொழும்பு)

இலங்கையின் 2018ஆம் ஆண்டிற்கான ஏற்றுமதி இலக்காகிய 17.5 பில்லியன் அமெரிக்க டொலர்களை வருமானமாகப்பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகள் அரசாங்கத்தால் முன்னெடுக்கப்பட்டு வருவதாக ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் தலைவர் இந்திரா மல்வத்த தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற மெஸ்சே பிராங்பர்ட் கண்காட்சியில் கலந்துகொண்டு உரையாற்றும் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இவ்வாண்டிற்கான ஏற்றுமதி இலக்கில் 60சதவீதமானவை ஜூலை மாத இறுதியில் அடையப்பட்டுள்ளன என்றும் சுட்டிக்காட்டினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"அரசாங்கம் ஏற்றுமதி இலக்காக 2019ஆம் ஆண்டில் 20 பில்லியன் அமெரிக்க டொலரையும் 2020ஆம் ஆண்டில் 23 பில்லியன் அமெரிக்க டொலரையும் அடைந்து கொள்வதற்கு எதிர்பார்த்துள்ளது. இதனை அடைவதற்கு அவசியமான நடவடிக்கைகள் தற்போது செயல் வடிவில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அத்தோடு,இலங்கை தற்போது பொருட்கள் வடிவிலான ஏற்றுமதியிலிருந்து சேவை ரீதியான ஏற்றுமதிக்கு நிலைமாற்றம் அடைந்து வருகின்றன. இன்னும் இரு வருடங்களில் சேவை ஏற்றுமதிகள் விரிவடையும் என உறுதியாகக் கூறமுடியும்.

மேலும் சேவைத்துறையில் தகவல் தொழில்நுட்பம் அதிக செல்வாக்குச் செலுத்துகின்றது. ஆகையினால்,இலங்கை மற்றும் சிங்கப்பூருக்கு இடையிலான சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் சேவை ஏற்றுமதியை விரிவுப்டுத்துவதற்கு உதவியாக அமையும். இந்த நாட்டிலே யுத்தத்தை முறியடிப்பதற்கு அனைவரும் ஒன்றிணைந்துசெயற்பட்டதுபோன்று பொருளாதாரத்தை விருத்தி செய்வதற்கும் அனைவரும் ஒன்றிணைய வேண்டும்.

ஏற்றுமதி மற்றும் வெளிநாட்டு நேரடி முதலீடு என்பனவே தற்போது நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமான முக்கிய தூண்களாக உள்ளன. அதே போன்று இலங்கை மற்றும் சீனாவுக்கிடையில் பரிந்துரை செய்யப்பட்டுள்ள சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் மூலம் இலங்கையில் சீன முதலீட்டாளர்களின் அளவு அதிகரிக்கும்.

அது மாத்திரமன்றி சீனர்கள் இலங்கையில் உற்பத்தியை மேற்கொண்டு அதனை வரிகளின்றி சீனாவிற்கு மீள் ஏற்றுமதி செய்தல் இலகுபடுத்தப்படும். மேலும் இலங்கையில் உற்பத்திகளை மேற்கொள்ளும் சீன முதலீட்டாளர்கள் இலங்கை-இந்திய சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தின் மூலமான அனுகூலங்களைப் பெறமுடியும். அதன் மூலம் இந்தியாவிற்கும் பாகிஸ்தானிற்கும் ஏற்றுமதிகளை மேற்கொள்ளலாம்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# வன்முறையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு விரைவில் முழுமையாக நட்டஈடு-பிரதமர்

(கொழும்பு)

கண்டியில் வன்முறையினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஏற்கனவே 15 மில்லியன் ரூபா நட்டஈடு வழங்கியுள்ள நிலையில் மிகுதி நட்டஈட்டு தொகையினை விரைவில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்போம் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.



பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் பிரதமர் மீதான கேள்வி நேரத்தின் போது கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வேலுகுமார், கண்டி வன்முறையில் பாதிக்கப்பட்டவர்களுக்கான நட்டஈடு தொடர்பாக எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே பிரதமர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் பிரதமர் மேலும் பதிலளிக்கையில்,

கண்டி வன்முறையினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஏற்கனவே 18 மில்லியன் ரூபா நட்டஈடு வழங்கியுள்ளோம். மிகுதித்தொகையை வழங்குவதற்கான மதிப்பீடு செய்யப்பட்டு வருகின்றது. இதன்படி பூரண நட்டஈடாக 205 மில்லியன் ரூபாவை மதிப்பிட்டுள்ளோம். ஆகவே மிகுதி நட்டஈட்டுத் தொகையை விரைவில் வழங்குவோம்.

அத்துடன்,சொத்துடைமைகளுக்கான சான்றுகள் தீக்கிரையாகியுள்ளதனால் அது தொடர்பிலான மதிப்பீடுகள் செய்வது குறித்து ஆராய்வதற்கு மீண்டும் விசேட பேச்சுவார்த்தையொன்றை நடத்தி முடிவொன்றை எடுப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட ஞானசார தேரருக்கு சத்திரசிகிச்சை

(கொழும்பு)

சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட பொதுபல சேனா அமைப்பின் பொதுச்செயலாளர் கலகொட அத்தே ஞானசாரதேரருக்கு சத்திரசிகிச்சை ஒன்று மேற்கொள்ளப்படவுள்ளதாக ஸ்ரீ ஜெயவர்த்தனபுர வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.



நீதிமன்றத்தை அவமதித்த குற்றச்சாட்டிற்காக பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரருக்கு 6 ஆண்டுகளில் அனுபவிக்கும் படி 19 வருட கடூழிய சிறைத் தண்டனையை நீதிமன்றம் நேற்று முன்தினம் விதித்தது.

ஞானசார தேரரின் சிறுநீரகத்தில் கல் இருப்பதாகவும் அதனை சத்திரசிகிச்சை மூலமே அகற்ற முடியும் என்றும் வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதனால் எதிர்வரும் திங்கட்கிழமை சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்படலாம் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட ஞானசார தேரர் பாதுகாப்புக்கு மத்தியில் சிகிச்சை பெற்று வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# வைத்தியசாலையில் நோயாளர்கள் சிரமம்




(கரணவாய்)

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையின் மேல் மாடியிலுள்ள தளத்தில் பதிக்கப்பட்ட மாபிள்கள் உடைந்த நிலையில் காணப்படுவதனால் வைத்திய அறிக்கை பெறச் செல்லும்நோயாளர்கள் பெரும் சிரமங்களுக்கு உள்ளாவதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த வைத்தியசாலையில் வெளிநோயாளர் பிரிவிற்கு மேல் தளத்தில் நிர்வாகப் பிரிவு, குருதிப் பரிசோதனை நிலையம் என்பன காணப்படுகின்றன.

இங்குள்ள தளத்தில் பதிக்கப்பட்டுள்ள மாபிள்கள் உடைந்த நிலையில் காணப்படுவதனால் வைத்திய அறிக்கை பெறச் செல்லும் நோயாளர்கள் பெரும்சிரமங்களுக்கு உள்ளாவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எனவே இந்த விடயத்தில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனம் செலுத்த வேண்டும் என கோரிக்கை விடப்பட்டுள்ளது. (இ-60)



இலங்கையிலுள்ள புந்தல வனவிங்கு பூங்காவில் பெரிய மான் ஒன்றை பாரிய அளவிலான மலைப் பாம்பு ஒன்று விழுங்கும் காட்சி கமராவில் பதிவாகியுள்ளது. பூங்காவுக்குச் சென்ற சுற்றுலாப்பயணி ஒருவர் இதனை புகைப்படம் எடுத்து இணையத்தில் வெளியிட்டுள்ளார். நன்கு வளர்ந்த மான் ஒன்றை பாம்பு முழுமையாக விழுங்கியுள்ளது. இதற்காக சுமார் அரை மணித்தியாலங்களை பாம்பு செலவிட்டுள்ளதாக குறித்த சுற்றுலா பயணி குறிப்பிட்டுள்ளார்.

# பாரதம்

## கருணாநிதிக்கு அஞ்சலி செலுத்தியவர்களுக்கு நன்றி தெரிவித்து மு.க.ஸ்டாலின் அறிக்கை





(சென்னை)

கருணாநிதிக்கு அஞ்சலி செலுத்தியவர்களுக்கு நன்றி தெரிவித்து மு.க.ஸ்டாலின் அறிக்கை வெளியிட்டார்.

தி.மு.க. செயல் தலைவர் மு.க.ஸ்டாலின் நேற்று முன்தினம் இரவு வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது.

ஓய்வறியா சூரியனாகத் திகழ்ந்த தலைவர் கருணாநிதியை அவரது உயிரினும் மேலான உடன்பிறப்புகளான நீங்களும் நானும் மட்டுமன்றி, உலகெங்கும் வாழும் தமிழர்கள் அனைவரும் இழந்து கண் கலங்கி நிற்கிறோம்.

ஜனநாயகத்தின் அணையாத தீபமாகவும், சுயமரியாதைக் கொள்கையின் குன்றாகவும், நாட்டின் பன்முகத்தன்மையை பாதுகாக்கும் போர்ப்படை தளபதியாகவும், தமிழர்களின் அழுகுரலுக்கு ஓடி வரும் உத்தம தலைவராகவும் திகழ்ந்த கருணாநிதி திராவிட இயக்கத்தின் தன்மான உணர்வுகளை போற்றிப் பாதுகாத்தவர்.

அந்த மாபெரும் தலைவருக்கு இறுதி மரியாதை செலுத்திய பிரதமர், மத்திய அமைச்சர்கள், ஆளுநர்கள், பல்வேறு மாநில முதலமைச்சர்கள், அமைச்சர்கள், அனைத்துக் கட்சி அரசியல் தலைவர்கள், தமிழ்ச் சான்றோர், கலைத்துறையினர், பல்வேறு துறைசார்ந்த பெருமக்கள், தலைவர் கலைஞர் அவர்களின் உயிர்காக்கப் போராடிய காவேரி வைத்திய சாலை நிர்வாகத்தினர், வைத்தியர்கள் மற்றும் அல்லும், பகலும் வைத்திய சாலை வாசலிலேயே இருந்த பொது மக்களுக்கும், தி.மு.க. தொண்டர்களுக்கும் கருணாநிதி உடல்நிலை குறித்த செய்திகளை உடனுக்குடன் வழங்கிய பத்திரிகை ஊடகத்துறையினர் என அனைவருக்கும் தி.மு.கவின் செயல் தலைவர் என்ற முறையிலும், கருணாநிதியின் மகன் என்ற முறையிலும் கண்ணீர் மல்க நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

அண்ணாவுக்கு கருணாநிதி அளித்த உறுதிமொழியை நிறைவேற்றிட உறுதி பூண்டு, சட்டப்போராட்டம் நடத்தி வெற்றி கண்டுள்ளோம்.

கருணாநிதி நிறைவேற்றிய திட்டங்களையும் நிகழ்த்திய சாதனைகளையும் போற்றும் வகையில் அண்ணாவுடன் இணையும் "இறுதிப் பரிசை" நீதிபதிகளே வழங்கி இருக்கிறார்கள். அதற்காக அவர்களுக்கும், கடற்கரையில் நினைவிடங்கள் தொடர்பாக தொடுத்திருந்த வழக்குகளை திரும்பப் பெற்ற நல்லுள்ளங்களுக்கும், நீதிமன்றத்தில் போராடிய தி.மு.க. சட்டத்துறையினருக்கும் குறிப்பாக உயர் நீதிமன்ற அமர்வில் அழுத்தந்திருத்தமான வாதங்களை வைத்து நீதி கிடைக்க செய்த தி.மு.க. சட்டதிட்ட திருத்த குழு செயலாளரும், மூத்த சட்டத்தரணியுமான வில்சனுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

காவிரி நதி தீரத்தில் பிறந்து வளர்ந்த கருணாநிதியை காவேரி வைத்திய சாலையிலிருந்து கொண்டு சென்றதிலிருந்து மெரினா கடற்கரையில் நல்லடக்கம் செய்தது வரை நீங்கள் கலங்கி நின்றாலும், ராணுவக் கட்டுப்பாட்டுடன் உனது "கடமை கண்ணியம் கட்டுப்பாட்டை" சிரமேற்கொண்டு நிறைவேற்றியதை இந்தியாவே திரும்பிப் பார்த்திருக்கிறது.

கருணாநிதியின் புகழுக்குப் பெருமை சேர்த்துள்ளது. அதற்கு நன்றி சொல்ல வார்த்தைகள் கிடைக்காமல் தவிக்கிறேன்.

வங்கக்கடல் மாநகரத்தில் புகுந்ததுபோல மக்கள் கடலாக காட்சியளித்த நிலையில், அதனை ஒழுங்குபடுத்துவதில் அக்கறை செலுத்திய பொலிஸாருக்கும், அரசின் ஏற்பாடுகளை செய்த அரசு அதிகாரிகளுக்கும் என் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன் என அவ் அறிக்கையில் கூறியுள்ளார். (7)

## கருணாநிதியைப் புகழ்ந்து நடிகர் விஜயகாந்த் கவிதை



(சென்னை)

தி.மு.க. தலைவர் கருணாநிதி மறைவையொட்டி தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த் அவருக்காக கவிதை ஒன்றை எழுதியுள்ளார்.

தி.மு.க. தலைவர் கருணாநிதி மறைவையொட்டி தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த் வெளியிட்டுள்ள கவிதை வருமாறு.

டாக்டர் கலைஞர் அவர்களுக்கு,

உலகமே உங்களை கலைஞரே! என்று அழைத்தாலும் உணர்வுபூர்வமாக உங்களை அண்ணா என்று வாஞ்சையோடு அழைத்து உங்களுடன் பழகிய அந்த நாட்களை எண்ணி வியக்கிறேன். விம்முகிறேன்.

தள்ளாத வயதிலும் ஓய்வுக்கே ஓய்வு!

என்பதன் அர்த்தத்தை "உழைப்பு" என்று மாற்றிக்காட்டிய ஒப்பற்ற தலைவரே!

அந்தி சாயும்பொழுது ஒரு சூரியன் மறைவது இயற்கை. ஆனால் 07.08. 2018 அன்று மாலை 6.10 மணியளவில் இரு சூரியன் ஒரு சேர மறைந்ததோ! என்று எண்ணும் வண்ணம், இவ்வுலகையே இருட்டாக்கியது போன்ற ஒரு உணர்வை தந்து சென்றவரே!

உங்கள் உடல் இவ்வுலகை விட்டு பிரிந்தாலும், உங்கள் சரித்திரம் சகாப்தமாய் என்றும் எங்களுடனேயே இருக்கும் உங்களை வணங்குகிறேன்.

உங்களின் நினைவாக என்றென்றும்...

தமிழன்என்றுசொல்லடா!

தலை நிமிர்ந்து நில்லடா!

என்ற உங்கள் வாசகத்துடன்.

இப்படிக்கு

உங்கள் விஜி என்னும் விஜயகாந்த்

இவ்வாறு அவர் அக் கவிதையில் தன் மனக் குமுறலை விபரித்துள்ளார். (7)

## கருணாநிதி உடலுக்கு அஞ்சலி

## கூட்ட நெரிசலில் சிக்கி உயிரிழந்தோர் எண்ணிக்கை 4ஆக உயர்வு

(சென்னை)

கருணாநிதி உடலுக்கு அஞ்சலி செலுத்த வந்தபோது ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி பெண் உட்பட 4 பேர் பலியாகினர். மேலும் 22 பேர் படுகாயம் அடைந்தனர்.

உடல் நலக்குறைவால் காவேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த தி.மு.க. தலைவர் கருணாநிதி, கடந்த செவ்வாய்க்கிழமை மாலை சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

பொதுமக்களும் கருணாநிதியின் உடலுக்கு அஞ் சலி செலுத்த அனுமதிக்கப்பட்டனர். முக்கிய பிரமுகர்களுக்கு என்று தனி வழியும், பொதுமக்களுக்கு என தனி வழியும் பொலிஸாரால் ஏற்பாடு செய்யப்பட்டிருந் தது.

அதன்படி பொதுமக்களை அவர்களுக்கென ஒதுக்கப்பட்ட வழியில் பொலிஸார் அனுப்பி வந்தனர். ராஜாஜி அரங்கில் பொதுமக்களின் கூட்டம் கட்டுக்கடங்காத வகையில் இருந்தது.

கருணாநிதியை கடைசியாக பார்த்து விட வேண்டும் என்ற ஆர்வத்தில் பொது மக்கள் முண்டியடித்துக் கொண்டு வரிசையில் சென்றனர்.

மேலும் சில இடங்களில் பொலிஸார் வைத்திருந்த தடுப்புக்களை தகர்த்துவிட்டு பொதுமக்கள் முன்னேறி சென்றனர்.

அதோடு பொலிஸாரின் கட்டுப்பாட்டை மீறி முக்கிய பிரமுகர்கள் செல்லும் பாதையில் பொதுமக்கள் நுழைந்தனர். இதனால் அங்கு கூட்ட நெரிசல் ஏற்பட்டது.

பொலிஸார், பொதுமக்களை கட்டுப்படுத்த முயன்றபோது இரு தரப்புக்கும் இடையே 'தள்ளு முள்ளு' ஏற்பட்டது. இதில்பொது மக்கள் பலர் கீழே விழுந்தனர். கூட்ட நெரிசலில் சிக்கி பெண் பொலிஸ் அனிதா (வயது-42) உட்பட 26 பேர் படுகாயம் அடைந்த னர்.

பொலிஸார் அனைவரையும் மீட்டு அம்புலன்ஸ் உதவியுடன் ராஜீவ் காந்தி அரசு பொது வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்தனர். ஆனால் வைத்தியசாலைக்கு செல்லும் வழியிலேயே இருவர் பலியாகினர்.

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவராக மேலும் இருவர் பலியாகியதால் பலி எண்ணிக்கை 4ஆக உயர்ந்தது. (7)

## இந்தோனேசியாவை...

## பலி எண்ணிக்கை...



(ஜகார்த்தா)

இந்தோனேசியாவின் லம்பொக் தீவில் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஏற்பட்ட நிலநடுக்கத்தில் சிக்கி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 350 ஆக அதிகரித்துள்ளது.

சுமார் 236 பேர் காயமடைந்ததோடு, 20 ஆயிரத்துக்கும் அதிகமானோர் இடம்பெயர்ந்துள்ளதாக அந்நாட்டு அதிகாரிகள் அறிவித்துள்ளனர்.

இடிபாடுகளுக்குள் சிக்கியவர்களைத் தேடும் பணிகள் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன. குறிப்பாக லம்பொக் தீவிலுள்ள பள்ளிவாசலின் இடிபாடுகளுக்குள் சிக்கியுள்ளவர்களை மீட்புக் குழுவினர் மீட்டு வருகி...

## கேரளாவில் கனமழை; 2...

(திருவனந்தபுரம்)

கேரளாவில் பெய்து வரும் கனமழை காரணமாக நேற்றும், இன்றும் இதுவரை 16 பேர் பலியாகி உள்ளனர். இதனால் பாடசாலை, கல்லூரிகளுக்கு விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது. கேரளாவில் தென் மேற்கு பருவமழை இதுவரை இல்லாத அளவுக்கு பெய்து வருகிறது.

கடந்த 2 மாதங்களாக மாநிலம் முழுவதும் மழை பெய்து வருவதால் அங்குள்ள அணைகள் உட்பட நீர் நிலைகளில் நீர் நிரம்பி விட்டன. மாநிலத்தில் பல பகுதிகளை மழை வெள்ளம் சூழ்ந்துள்ளது.



ஏராளமான வீடுகள் இடிந்து விட்டன. விவசாயப் பயிர்களும் மழையால் நாசமடைந்து விட்டது. நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் மழை...

# வெளிநாடு

## ...வை உலுக்கிய நிலநடுக்கம் ...கை 350 ஆக உயர்வு



...ன்றனர்.


மேலும், நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்ட சுமார் 20 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பாதுகாப்பான இடங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

லம்பொக் தீவில் சுமார் 30 இலட்சம் மக்கள் வசிக்கும் நிலையில் நிலநடுக்கத்தால் 80 சதவீதமான வீடுகள் சேதமடைந்துள்ளன. வீடுகளை இழந்தவர்கள் பொது இடங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். இந்தோனேசிய தேசிய பேரிடர் மீட்புப் படையினர் இரவு பகலாக மீட்புப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

லம்பொக் தீவு முழுவதிலும் தொடர்ந்தும் மின் விநியோகம் துண்டிக்கப்பட்டுள்ளதுடன், போக்குவரத்தும் முற்றாக பாதிக்கப்பட்டுள்ளது.

இதனை சீர்செய்யும் பணிகளிலும், மக்களுக்கான அடிப்படை வசதிகளை வழங்கும் நோக்கிலும் முப்படையினர் மற்றும் அரச அதிகாரிகள் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். (7)

## ...ழ; 20 பேர் உயிரிழப்பு!



...க்கு பலியாகியுள்ளனர்.

வெள்ளம் சூழ்ந்த பகுதியில் உள்ள பொதுமக்கள் நிவாரண முகாம்களிலும், பாதுகாப்பான இடங்களிலும் தங்க வைக்கப்பட்டுள்ளனர். அனைத்து அரசு துறை அதிகாரிகளும் நிவாரணப் பணிகளில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த நிலையில் நேற்று முன்தினமும் நேற்றும், கேரளா முழுவதும்கன மழை பெய்து வருகிறது.

இதனால் திருவனந்தபுரம், கண்ணூர், கோழிக்கோடு, மலப்புரம், இடுக்கி, வயநாடு போன்ற மாவட்டங்கள் பெரும் சேதத்தை சந்தித்து உள்ளன.

இந்த மழை நாளை வரை நீடிக்கும் என்று கொச்சி வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ளது.

கனமழை காரணமாக நேற்று முன்தினமும், நேற்றும் கேரளாவில் 20 பேர் பலியாகியுள்ளனர். இடுக்கி மாவட்டத்தில் 10 பேரும், மலப்புரத்தில் 10 பேரும், என்று மொத்தம் 20 பேர் பலியாகியுள்ளனர். (7)

## ஊழல் மோசடி வழக்கு

## நஜீப் ரஸாக்கிற்கு எதிராக மேலும் 3 குற்றச்சாட்டுக்கள்

(இஸ்லாமாபாத்)

ஊழல் மோசடி தொடர்பில் கைதுசெய்யப்பட்டு வீட்டுக்காவலில் வைக்கப்பட்டுள்ள பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் நஜீப் ரஸாக் மீது புதிதாக மூன்று குற்றச்சாட்டுக்கள் பதிவு செய்யப் பட்டுள்ளன.

10 மில்லியன் டொலர்கள் அரச நிதியை தனது வங்கிக் கணக்கிற்கு மாற்றியதாக தெரிவிக்கப்பட்டதோடு, அரச முதலீடுகளை தவறாக கையாண்டதாக அவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

அது தொடர்பான வழக்கு நேற்று முன்தினம் புதன் கிழமை கோலாலம்பூர் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது, அவர் தனது சொந்த வங்கிக்கு அரச நிதியை மாற்றியமை தொடர்பில் மூன்று குற்றச்சாட்டுக்கள் பதிவுசெய்யப்பட்டு அவை வாசிக்கப்பட்டன.

கடந்த இரு மாதங்களில் ஊழல்குற்றச்சாட்டுகளுக்கு இலக்காகியிருந்த நஜீப் ரஸாக்கின் வீடு மற்றும் அலுவலகங்களில் பணமோசடி தடுப்பு பிரிவு அதிகாரிகள்தொடர் சோதனையில் ஈடுபட்டிருந்தனர்.

இதன்போது, பெருந்தொகையான பணம், நகை உள்ளிட்ட ஆடம்பரப்பொருட்கள் கைப்பற்றப்பட்டன.

கைப்பற்றப்பட்ட பொருட்களின் மொத்த பெறுமதி, 27.5 கோடி டொலர்கள் என அறிவிக்கப்பட்டது. அவற்றில் 12000 நகைகள், 567 ஆடம்பர கைப்பைகள், 234 ஆடம்பர கண்ணாடிகள் மற்றும் 423 விலையுயர்ந்த கைக் கடிகாரங்களும் உள்ளடங்குகின்றன. இவை தொடர்பில் ஏற்கனவே அவர் மீது 4 குற்றச்சாட்டுக்கள் பதிவாகியுள்ளன.

இதனையடுத்து கடந்த ஜூலை மாதம் 3ஆம் திகதி கைது செய்யப்பட்ட நஜீப் ரஸாக் தற்போது வீட்டுக்காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

எவ்வாறாயினும் இக்குற்றச்சாட்டுக்களை நஜீப் ரஸாக் மறுத்துள்ளார். நஜீப் ரஸாக் மீதான குற்றச்சாட்டுக்கள் நிரூபணமாகும் பட்சத்தில், 20 வருடங்கள் சிறைத்தண்டனை மற்றும் அபராதம் விதிக்கப்படுமென தெரிவிக்கப்படுகிறது. (7)

## வெள்ளை மாளிகைக்கு முன்பாக ட்ரம்புக்கு எதிராக ஆர்ப்பாட்டம்



(வோஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்புக்கு எதிரான பேரணி ஒன்று நேற்று முன்தினம் வெள்ளை மாளிகைக்கு முன்பாக நடைபெற்றுள்ளது. இந்த பேரணியை நகைச்சுவை மற்றும் கலந்துரையாடல் நிகழ்ச்சி ஒன்றின் தொகுப்பாளரான ரோஸி ஓ டொனல் தலைமை தாங்கியிருந்தார்.

கடந்த ஜூலை மாதம்ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினுடன் நடைபெற்ற ட்ரம்பின் கூட்டத்துக்கு விடையிறுக்கும் வகையில் ட்ரம்புக்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்ற நிலையில் அதன் ஒரு பகுதியாக இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

ஆர்ப்பாட்டம் நடைபெற்ற போது வெள்ளை மாளிகையில் ட்ரம்ப் இல்லை என்றும் வெள்ளை மாளிகையில் புனரமைப்பு பணிகள் இடம்பெற்றுக் கொண்டிருந்ததாகவும் செய்தித் தொடர்பாளர் தெரிவிக்கிறார். (7)

## உலக நாடுகளில் அணுவாயுதத்தடை தொடர்பில் ஐ.நாவுக்கும் ஜப்பானுக்கும் இடையில் சந்திப்பு

(ஜெனிவா)

உலக நாடுகளில் அணுவாயுதத்தை முற்றாக தடை செய்வது தொடர்பாக, ஐ.நா. செயலாளர் நாயகம் அனடோனியோ குற்றேரஸ்க்கும் ஜப்பான் பிரதமர் ஸின்ஸோ அபேயிற்கும் இடையில் முக்கிய சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

குறித்த நிகழ்வில் கலந்து கொள்வதற்காக ஜப்பான் சென்றுள்ள ஐ.நா. செயலாளர் நாயகம், தலைநகர் டோக்கியோவில் நேற்று முன்தினம் புதன்கிழமை ஜப்பான் பிரதமரை சந்தித்து கலந்துரையாடினார்.

இதன்போது அணுவாயுதத்தை முற்றாக தடை செய்வது குறித்து கலந்துரையாடப்பட்டுள்ளது.

அத்துடன், அணுவாயுத தடை தொடர்பாக அமெரிக்கா மற்றும் வடகொரியாவிற்கு இடையில் இடம்பெறும் பேச்சுவார்த்தைக்கு முழு ஆதரவை வழங்குவதாகவும் தெரிவித்துள்ளார்.

கடந்த 2010ஆம் ஆண்டு முன்னெடுக்கப்பட்ட ஹிரோசிமா அணுகுண்டு தாக்குதல் நினைவுதின நிகழ்வில் பான் கீ மூன் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (7)

## அமெரிக்கா மீதான நம்பிக்கையை உலக நாடுகள் இழந்து விட்டன

### ஈரான் தெரிவிப்பு

(டெஹ்ரான்)

அமெரிக்கா மீது உலக நாடுகள் நம்பிக்கை இழந்து விட்டதாக ஈரான் வெளியுறவுத்துறை அமைச்சர் முகமது ஜாவத் ஜாரீப் தெரிவித்துள்ளார்.

ஈரானுக்கும் அமெரிக்கா, ரஷ்யா, இங்கிலாந்து, பிரான்ஸ், சீனா மற்றும் ஜேர்மனி ஆகிய வளர்ந்த நாடுகளுக்கும் இடையே அணு ஆயுத பரவல் தடுப்பு ஒப்பந்தம் போடப்பட்டிருந்தது. அதில் இருந்து அமெரிக்கா வெளியேறிவிட்டது.

அத்துடன் ஈரான் மீது பொருளாதார தடை விதிப்பதாக அறிவித்தது. மேலும் தனது நட்பு நாடுகளையும் ஈரான் மீது பொருளாதார தடை விதிக்குமாறு கோரிக்கை விடுத்துள்ளது.

இதனால் ஈரானின் பணமான ரியாலின் பெறுமதி குறைந்துள்ளது. பொருட்களின் இறக்குமதிக்கான செலவு அதிகரித்துள்ளது. ஈரானின் பணப்பெறுமதி மிகப் பெரிய அளவில் வீழ்ச்சி அடைந்ததால் வர்த்தகர்கள் டெஹ்ரானில் பாராளுமன்றம் முன்பு போராட்டங்களை நடத்தி வருகின்றனர்.

ஆனால், யாரும் எதிர்பாராத விதமாக அமெரிக்கா மற்றும் ஈரான் இடையேயான பேச்சுவார்த்தைக்கு தயார் என டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்தார். எனினும், பேச்சுவார்த்தைக்கு உடன்படாமல் ஈரான் தொடர்ந்து நிராகரித்து வருகிறது.

இந்நிலையில், இது தொடர்பாக கருத்து தெரிவித்துள்ள ஈரானின் வெளியுறவுத்துறை அமைச்சர் முகமது ஜாவத் ஜாரீப், 'ஒழுங்கற்ற முடிவுகளால் அமெரிக்காவின் மீதான நம்பிக்கையை உலக நாடுகள் இழந்துவிட்டதன் பிறகும், அமெரிக்காவுடன் மீண்டும் பேச்சுவார்த்தை என்பது மிகவும் கடினமானது.

பேச்சுவார்த்தை தொடர்பாக இப்போது தான் அமெரிக்கா யோசிக்க தொடங்கியுள்ளது.

ஏற்கனவே பல ஒழுங்கற்ற முடிவுகளை எடுத்துள்ள அமெரிக்காவை நாங்கள் எப்படி நம்ப முடியும்? என்று கேள்வி எழுப்பியுள்ளார். (7)

# பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு சம்பள அதிகரிப்பு இல்லை

## அமைச்சர் கயந்த தெரிவிப்பு



(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர்களின் சம்பள அதிகரிப்பு குறித்து பலதரப்பட்ட கருத்து முன்வைக்கப்படுகின்ற போதிலும் தற்போதைக்கு அவ்வதிகரிப்பு இல்லையென்பதை ஜனாதிபதி, பிரதமர் உட்பட ஆளுங்கட்சி உறுப்பினர்களும் தெரிவித்துள்ளனர். மேலும் பாராளுமன்ற உறுப்பினர்களின் சம்பள அதிகரிப்பு குறித்து அமைச்சரவையில் யோசனை முன்வைக்கப்படவுமில்லையென இணை அமைச்சரவைப் பேச்சாளர் கயந்த கருணாதிலக தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வாராந்த அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த ஆட்சிக் காலத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள தீர்மானங்களுக்கு அமைவாக உயர்நீதிமன்றின் நீதியரசர்களின் சம்பள அதிகரிப்புக்கு நிகராக பாராளுமன்ற உறுப்பினர்களின் சம்பள அதிகரிப்பும் மேற்கொள்ளப்பட வேண்டும் என்கின்ற தீர்மானம் உள்ளது.

எனினும் கடந்த காலங்களில் அது நடைமுறைக்கு வரவில்லை. இருந்தபோதிலும் கட்சித் தலைவர்கள் கூட்டத்தின் போது இது குறித்து பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளது.

ஆயினும் பாராளுமன்ற உறுப்பினர்களின் சம்பளம் தொடர்பில் தற்போது தெளிவான அறிக்கைகள் விடப்பட்டுள்ளன. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, சம்பள அதிகரிப்புக்கு இடமளிக்கப்போவதில்லை எனத் தெரிவித்துள்ளார். அதேபோல் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் அவ்வாறான யோசனை ஒன்று முன்வைக்கப்படவில்லை எனத் தெரிவித்துள்ளார். நிதியமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினர்களின் சம்பளம் அதிகரிக்கும் தேவையில்லை என அறிவித்துள்ளார்.

அத்துடன் ஆளுங்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களும் சம்பளத்தை அதிகரிக்கத் தேவையில்லையென ஏகமனதாகத் தீர்மானித்துள்ளனர். இதேவேளை பாராளுமன்ற உறுப்பினர்களின் சம்பள அதிகரிப்பு குறித்த யோசனை அமைச்சரவையில் முன்வைக்கப்படவுமில்லை என அவர், மேலும் தெரிவித்தார். (இ-7)

# எதிர்க்கட்சித் தலைவர் பதவி சம்பந்தனிடமே இருக்க வேண்டும்

## சரத் பொன்சேகா ஆதரவு





(கொழும்பு)

அரசாங்கத்தில் இருந்து விலகப்போவதாக கூறியவர்கள் இன்னும் ஒன்றரை வருடங்களுக்கு அரசாங்கத்தில் இருக்கலாம் என அமைச்சர் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்ட அமைச்சர், ஊடகவியலாளர்களிடம் கருத்து வெளியிடும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

70 பேர் இருக்கின்றார்கள் என்பதற்காக அரசாங்கத்தை கவிழ்க்க முடியாது. எதிர்க்கட்சியில் இருக்கும் தமிழ்க்கட்சியானாலும், ஐக்கிய தேசியக் கட்சியானாலும் அவர்கள் நினைப்பதைப் போன்று அரசாங்கத்தை கவிழ்க்க முடியாது.

அரசாங்கம் இருக்கும் வரைக்கும் அவர்களும் அரசாங்கத்திற்கு சார்பாக செயற்பட வேண்டும் எனவும் தெரிவித்தார்.

எதிர்க்கட்சித்தலைவர் பதவி கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனிடமே இருக்க வேண்டும் என்று சுதந்திரக் கட்சியே முடிவு செய்துள்ளது. அதுதான் சரியான முடிவு.

எதிர்க்கட்சித்தலைவர் பதவியை கோருபவர்கள் இன்னும் சுதந்திரக்கட்சியிலேயே இருக்கின்றார்கள்.

இவர்கள் பிரிந்து சென்று பொதுஜன பெரமுனவில் இணைந்தாலும் அவர்களது நாடாளுமன்ற உறுப்பினர் பதவி பறிபோகும். ஆகவே இவர்களுக்கு எதிர்க்கட்சித் தலைவர் பதவியை வழங்க முடியாது என அமைச்சர் சரத் பொன்சேகா தெரிவித்தார். (இ-7)

# பாலியல் இலஞ்சம் கோரும் சிறைச்சாலை அதிகாரிகள்

(கொழும்பு)

வெலிக்கடை சிறைச்சாலையின் சில அதிகாரிகள் பாலியல் இலஞ்சம் கோருகின்றனர் என ஸ்ரீஜெயவர்த்தன கோட்டே மாநகர சபையின் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் உறுப்பினர் ஹர்ஷனி சந்த ருவனி குற்றம் சுமத்தியுள்ளார்.

மாநகரசபைக் கூட்டத்தின் போது அவர் இவ்வாறு குற்றம் சுமத்தியுள்ளார்.

ராஜகிரிய, பண்டாரநாயக்கபுர, பொல்வத்த போன்ற பிரதேசங்களைச் சேர்ந்த குடும்பங்களின் தலைவர்கள் பலர் போதைப் பொருளுக்கு அடிமையாகியுள்ளனர்.

தங்களது கணவர்கள் பொலிஸாரினால் கைது செய்யப்படும் போது, பொலிஸார் அவர்களை விடுதலை செய்ய பாலியல் இலஞ்சம் கோருகின்றார்கள்.

சில உயர் அதிகாரிகள் போதைப் பொருள் சுற்றிவளைப்புக்கள் மேற்கொள்வதனை தவிர்ப்பதற்கு பால்மா பைக்கற்றுகளைக் கூட இலஞ்சமாக பெற்றுக் கொள்கின்றனர். போதைப் பொருள் விற்பனை செய்யும் நபர்கள் கைது செய்யப்படுவதில்லை என அவர் தெரிவித்தார்.

இதேவேளை, இவ்வாறு போதைப் பொருள் விற்பனை செய்வோர் பற்றிய விபரங்கள் இருந்தால் தம்மிடம் தருமாறும் அவர்களை கைது செய்யத் தயார் எனவும் வெலிக்கடை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சுதத் அஸ்மடல தெரிவித்துள்ளார். (இ-7)

# திருமலையில் மீனவர்கள் கண்டனப் பேரணி



(திருமலை)

திருகோணமலையில் மீனவர்கள் கண்டன பேரணியொன்றை மேற்கொண்டுள்ளனர்.

வெளிமாவட்ட மீனவர்கள் தாம் தொழில் நடத்தும் பகுதிக்கு வந்து சுருக்கு வலைகளை பயன்படுத்தி மீன் பிடிப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்தே இந்த பேரணி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

திருகோணமலை மணிக்கூட்டு கோபுரத்திற்கு அருகிலிருந்து ஆரம்பித்த பேரணி, திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச செயலகத்தை அடைந்த பின் செயலாளரிடம் மனு ஒன்று கையளிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை வெளிமாவட்ட மீனவர்களின் குறித்த செயற்பாடால் தமது ஜீவனோபாயம் பாதிக்கப்படுவதாகவும் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

மேலும் இந்த எதிர்ப்புப் பேரணியில் நூற்றுக்கும் மேற்பட்ட மீனவர்கள் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# இன்று ஒரு தகவல்

## சம்பந்தம் சம்பந்தமில்லாமல்...

நமக்கு ஒரு வித்தியாசமான சம்பவத்தையோ அல்லது ஏமாற்றம் தரும் சம்பவத்தையோ அல்லது ஒரு நகைச்சுவையான நிகழ்ச்சியையோ காண நேர்ந்தால் உடனே அதை யாரிடமாவது சொல்லிவிட வேண்டும் என்பது போல் தோன்றும்.

ரயிலில் அல்லது வீதியில் அடிபட்டுக் கிடக்கிற ஒருவரைக் காண நேருகிறவர்கள் 100 பேர் என்றால் அவர்களுள் 90 சதவிகிதம் பேர் எப்படியாவது யாரிடமாவது உடனே சொல்லியே தீருவார்கள். எதிரில் யாராவது தென்படமாட்டார்களா? என்றுகூடக் கண்கள் அலை பாயும். வீட்டில், அலுவலகத்தில் போய் இறங்கியதுமே, "வழியில் என்னாச்சு தெரியுமா?" என்று ஆரம்பித்து விடுவார்கள்.

இதில் வேடிக்கை என்னவென்றால், ஒரு சாவுச் செய்தியைச் சொல்லக் கூடிய சூழலே அங்கு இருக்காது. ஓர் இனிமையான பொழுதை இரத்தம் என்றும், காயம் என்றும் சொல்லி, ஓர் இளவேனில் மாலைப் பொழுதை சூறாவளிப் புயல் வீசிக் கெடுத்ததைப் போல் கெடுத்துவிடுவார்கள்.

வேறு சிலரோ, தங்கள் பெருமைகளைப் பறைசாற்றவும், தங்களைப் பற்றிப் பிதற்றிக் கொள்ளவும், பொருத்தமற்ற சூழலைத் தேர்ந்தெடுக்கிறார்கள். இன்னும் சிலர், ஒருவர் தன் கஷ்டத்தைச் சொல்கிற போது ஆறுதலாக நான்கு வார்த்தை சொல்லாமல் "நான் இப்பத்தான் என் கொடைக்கானல் பங்களாவிலிருந்து வர்றேன்" என்று சம்பந்தமில்லாமல் சுயபுராணம் ஆரம்பிக்கின்றார்கள்.

எந்த ஒரு செய்தியையும் இயல்பாகச் சொல்ல வேண்டும். பொருத்தமான நேரத்திற்காகக் காத்திருக்க வேண்டும். அது திணிப்பாக இருக்கக் கூடாது. அதில் செயற்கை தட்டக் கூடாது. சம்பந்தமில்லாமல் அமைந்துவிடக் கூடாது. அதிகம் நெருக்கம் இல்லாதவர்களிடம் நேரம் எடுத்துக் கொள்வதும், தம்பட்டம் அடிப்பதும் வெறுப்பையே உண்டாக்கும்.

நாம் சொல்லும் செய்தியால் மற்றவர்களுக்குப் பலன் உண்டா? அவர்களுக்கு அதைக் கேட்டுக் கொள்வதில் அக்கறை இருக்கிறதா? அவர்கள் ஏதும் கேள்வி கேட்கிறார்களா? என்றெல்லாம் நாம் சிறிதாவது அக்கறைப்பட வேண்டும்.

"இதையெல்லாம் யார் கேட்டார்கள் இந்தாளிடம்?" என்று நம்மைப் பார்த்து மற்றவர்கள் தலையிலடித்துக் கொள்ளும்படியான நிலையை நாம் உருவாக்காதிருந்தால் அது நமக்கு நாமே செய்து கொள்ளும் மிகப் பெரிய நன்மையாக இருக்கும்.

**லேனா தமிழ்வாணன்**

# நித்திய உறக்கத்தில் ஆழ்ந்து விட்ட கலைஞரின் துயரத்தில் நாமும் பங்கெடுக்கின்றோம்

## டக்ளஸ் எம்.பி. அஞ்சலி மரியாதை



(யாழ்ப்பாணம்)

மறைந்த தமிழக முன்னாள் முதலமைச்சர் முத்தமிழ் அறிஞர், கலைஞர் முத்துவேல் கருணாநிதி அவர்களுக்கு எனது இறுதி மரியாதையை செலுத்துகின்றேன் என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் நேற்று முன்தினம்நடைபெற்றஇணைமனை சொத்தாண்மை விசேட ஏற்பாடு சட்டமூலம் நிர்மாணத் தொழில் அபிவிருத்திச் சட்டத்தின் கீழான கட்டளைகள் விவாதத்தில் கலந்து கொண்ட பின்னர் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ்த்தேசிய இனத்தின் உரிமைகளுக்காக நாம் அன்று ஆயுதப்போராட்டத்தில் ஈடுபட்டவர்கள். ஆனாலும், மாறிவந்த யதார்த்த அரசியல் சூழ்நிலைகளை கருத்தில் கொண்டு, இலங்கை-இந்திய ஒப்பந்தத்தை தீர்க்க தரிசனமாக ஏற்றுக்கொண்டு தேசிய அரசியல் நீரோட்டத்தில் நாம் இணைந்து கொண்டவர்கள்.

ஒரு தேசிய இனத்தின் அரசியல் உரிமைகளை மத்திய அரசுடன் நாம் பேசி, தீர்வு பெற்றுக்கொள்ளலாம் என்றபாடங்களை பல்வேறு நாட்டு அனுபவங்களில் இருந்தும் நாம் கற்றுக்கொண்டவர்கள்.

இந்திய மத்திய அரசின் உறவுக்கு கரம் கொடுத்து, தமிழக மக்களின் உரிமைக்கு குரல் கொடுத்து, மாநில சுயாட்சியை அங்கு உருவாக்கிய அனுபவங்களையும் நாம் பெற்றுக்கொண்டவர்கள்.

தமிழக மக்களின் மனங்களில் சிம்மாசனமிட்டு தமிழுக்கும், தமிழ் கூறும் உலகிற்கும் பெரும்பணியாற்றிய கலைஞர் மு. கருணாநிதி அவர்கள், நித்திய உறக்கத்தில் ஆழ்ந்து விட்ட துயரத்தில் நாமும் பங்கெடுத்துக்கொள்கிறோம்.

எண்பத்து மூன்று ஆடியில் நடந்த இன வன்முறையின் ஞாபக நிகழ்வுகள் இங்கு நடந்து கொண்டிருக்கும் இவ்வேளையில், அன்று எமது மக்கள் தஞ்சம் தேடி தமிழகம் சென்ற போது மடி விரித்து எமது மக்களுக்கு உறங்க இடம் கொடுத்த தமிழக மக்களை நான் நன்றியுடன் நினைத்துப்பார்க்கிறேன்.

அந்த தமிழக மக்களின் திராவிடச் சூரியன் கலைஞர் கருணாநிதி அவர்களை இழந்து தவிக்கும் மக்களின் உணர்வுகளில் நாமும் பங்கேற்கின்றோம்.

எமது உரிமைப்போராட்ட இயக்கங்களிடையே ஒற்றுமையின் பலத்தை உருவாக்க துணை நின்ற கலைஞர் அவர்களை நான் இந்த இடத்தில்நன்றியுடன் நினைவு கூருகின்றேன்.

ஒன்று பட்டால் உண்டு வாழ்வு! எம்மில் ஒற்றுமை நீங்கின் அனைவருக்கும் தாழ்வு!...

இதை உணராமல் ஈழ விடுதலை போராட்ட இயக்கங்கள் முட்டி மோதி முரண்பட்டு நின்ற வேளையில், உட்பகைவேரறுக்கும் என்று தீர்க்க தரிசனமாக எமக்கு தத்துவ விளக்கம் தந்த கலைஞர் அவர்களை நான் நன்றியுடன்நினைவு கூருகின்றேன்.

நாம் அனைவரும் ஒன்றுபட்டு உரிமைக்காக போராடிய போது புளகாங்கிதம் அடைந்த கலைஞர் அவர்கள் ஒரு தாய்பெற்ற பிள்ளைகளான நாம் எமக்குள் நாமே சகோதர சண்டையில் ஈடுபட்ட போது, எமது உரிமைப் போராட்டத்திற்கு அளித்து வந்த ஆதரவை தொடர்ந்தும் வழங்குவதா? இல்லையா? என்பதில் கலைஞர் அவர்கள் எடுத்த முடிவுகளை நான் இன்று நினைத்துப்பார்க்கின்றேன்.

ஆனாலும், இந்திய மத்திய அரசின் சட்ட திட்டங்களுக்கு அமைவாக தொடர்ந்தும் ஈழத்தமிழ் பேசும் மக்களுக்காக குரல் எழுப்பி வந்தவர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள்.

கலைஞர் அவர்களுக்கு நான் இந்த சபையில் அஞ்சலி மரியாதை செலுத்துவது அவரது அரசியல் சார்ந்த விடயங்களுக்கு அப்பால் அவர் தமிழ்மொழிக்கு ஆற்றிய அளப்பரிய சேவைகளுக்காகவே என்பதை நான் இந்த சபையில் கூறிவைக்க விரும்புகிறோம்.

இந்திய மத்திய அரசில் தமிழ்மொழிக்கு உரிமை எடுத்து கொடுத்தது மட்டுமன்றி, உலக மொழிகளில் பாரம்பரியமொழிகளில் ஒன்றாக தமிழ்மொழிக்கு செம்மொழி அந்தஸ்து பெற்றுக் கொடுத்தவர் கலைஞர் அவர்களே.

உலகப்பொது மறையான திருக்குறளுக்கு விளக்கவுரை தந்தது முதற்கொண்டு தொல்காப்பிய பூங்காவை எளிய நடையில் தமிழ் மக்களுக்கு தந்தவர் கலைஞர் அவர்கள்.

கலை, இலக்கியம், நாடகம், சினிமா என தமிழ் மொழியின் வளர்ச்சிக்கு காலத்தால் அழியாத அளப்பரிய பங்காற்றிய கலைஞர் அவர்களுக்கு ஈழத்தமிழர்கள் சார்பாக எனது அஞ்சலி மரியாதையை நான் செலுத்துகிறேன்.

அழுதும் பிள்ளையை அவளே பெற வேண்டும் என்ற வகையில் ஒரு மருத்துவிச்சியின் துணையாகவே யாரும் எமக்கு உதவ முன் வருவார்கள். எமது மக்களின் விடியலுக்கு நாமே தொடர்ந்தும் உழைக்க வேண்டும் என்பதை மீண்டும் நினைவுபடுத்துகின்றேன் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

## வாய்க்காலைப் புனரமைக்குமாறு குருநகர் பகுதி மக்கள் கோரிக்கை



(குருநகர்)

யாழ்.குருநகர் மத்திய கிழக்கு வீதியின் ஆரம்ப வாய்க்கால் தூர்ந்து போன நிலையிலும் குன்றும் குழியுமாகவும் பொது மக்களின் போக்குவரத்துக்கு இடையூறாக காணப்படுகின்றது.

மேலும் இந்த வாய்க்காலில் கழிவு நீர் தேங்கி நிற்பதால் துர்நாற்றம் வீசுவதோடு நுளம்புப் பெருக்கத்துக்கு ஏதுவாக அமைகின்ற படியால் மக்கள் சுகாதாரச் சீர்கேடுகளுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

எனவே இவ் வாய்க்காலை புனர்நிர்மாணம் செய்து தரும்படி சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு தெரிவித்தும் இது வரை எவ்வித நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை என பிரதேச மக்கள் விசனம் வெளியிட்டுள்ளனர்.

எனவே மழைகாலம் நெருங்குவதால் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் துரித நடவடிக்கை எடுத்து இவ்வாய்க்காலை புனர்நிர்மாணம் செய்து தரும்படி இப்பிரதேச வாழ் மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (இ

## தி.மு.க. தலைவர் கருணாநிதியின் மறைவுக்கு மலையகத்தில் அஞ்சலி




(ஹற்றன்)

தமிழகத்தின் முன்னாள் முதலமைச்சரும் தி.மு.க. தலைவருமான கலைஞர் கருணாநிதியின் மறைவுக்கு, மலையக மக்கள் தமது அஞ்சலியை செலுத்தியுள்ளனர்.

மலையகத்தின் தோட்டப் பகுதிகளிலுள்ள ஆலயங்களிலும், பொது இடங்களிலும் அஞ்சலி நிகழ்வுகள் நடத்தப்பட்டு வருகின்றன.

அந்தவகையில் ஹற்றன், கொட்டகலை, மஸ்கெலியா, பொகவந்தலாவ, நோர்வூட், தலவாக்கலை, அக்கரப்பத்தனை, டயகம போன்ற பகுதிகளிலும் மக்களால் அஞ்சலி செலுத்தப்பட்டது.

கொட்டகலை பிரதேச சபையின் ஊடாக அதன் தவிசாளர் இராஜமணி பிரசாத் தலைமையில் நேற்று கருணாநிதியின் உருவப் படத்திற்கு மலர்மாலை அணிவிக்கப்பட்டு வெள்ளைக்கொடி பறக்கவிட்டு விளக்கேற்றி வைத்து அஞ்சலி செலுத்தப்பட்டது.




இதன்போது தோட்ட பொது மக்கள், கொட்டகலை பிரதேச சபை உறுப்பினர்கள் எனப் பலரும் அஞ்சலி செலுத்தியமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## யானையுடன் மோதி இளைஞன் பலி

(கொழும்பு)

கொழும்பிலிருந்து கிண்ணியா மூதூர் நோக்கி பயணித்த வான், யானையுடன் மோதியதில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

குறித்த சம்பவம் ஹபரணைக்கும், ஹதரஸ் கொட்டுவைக்கும் இடைப்பட்ட காட்டுப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். இதில் இளைஞர் ஒருவர் பலியானதுடன், சிறுமி உட்பட நால்வருக்கு படுகாயம் ஏற்பட்டுள்ளதாக தெரிய வருகின்றது.

சம்பவத்தில் கிண்ணியா, கற்குழி பகுதியைச் சேர்ந்த 27 வயதுடைய மொஹம்மட் நவீத் என்பவரே ஸ்தலத்தில் பலியாகியுள்ளார்.

யாருமில்லாத அடர்ந்த காட்டுப் பகுதியில் இச்சம்பவம் இடம்பெற்றதால் குறித்த நேரத்தில் மீட்புப் பணிகளை மேற்கொள்ள முடியாமல் போனதாகவும் தெரிவிக்கப் படுகின்றது. அதிக வேகமாக சென்றதன் காரணமாக வீதியில் நின்ற யானையுடன் மோதி விபத்துக்குள்ளானதுடன், சம்பவம்தொடர்பான மேலதிக விசாரணைகளைஹபரன பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)





சர்வதேச மது ஒழிப்பு தினத்தை முன்னிட்டு வட பிரதேச நல்லொழுக்க சம்மேளனம் அண்மையில் நடைபவனி ஒன்றை ஏற்பாடு செய்திருந்தது. இதில் சம்மேளனத்தின் உறுப்பினர்கள், பொது மக்கள் மற்றும் மாணவர்கள் ஆகியோர் சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியால யத்திலிருந்து சங்கானை பேருந்து நிலையத்துக்கு நடை பவனியாகச் சென்றனர்.

# யானைக்கும் மனிதனுக்கும் இடையில் இலங்கையில் யுத்தம் தொடர்கிறது

## ஜனாதிபதி மைத்திரி மனவேதனை





(கொழும்பு)

யானைக்கும் மனிதனுக்கும் இடையில் இலங்கையில் யுத்தம் நடைபெறுகின்றது. இதற்கு அவசரமாக தீர்வு தேவைப்படுகின்றது என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

தேசிய நிலையான அபிவிருத்தி தொலைநோக்கு என்பதற்கான திட்டத்தை கொழும்பில் நேற்று முன்தினம் ஆரம்பித்து வைத்து உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அண்மையில் யானையின் தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்த தனது தந்தையின் சடலத்தின் முன்னால் முழந்தாள் இட்டு வணங்கி விட்டு சிறுமி ஒருவர் புலமைப்பரிசில் பரீட்சை எழுதச் சென்ற படத்தை பத்திரிகையில் பார்த்து மிகவும் வேதனையடைந்தேன்.

அதேபோல், புலமைப் பரிசில் எழுதச் சென்ற மற்றுமொரு மாணவியும் அவரது தாயாரும் யானையின் தாக்குதலுக்கு இலக்காகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு பல சம்பவங்கள் இடம்பெறுகின்றன. இவற்றுக்கு உடனடித் தீர்வு கிடைக்க வேண்டும் என ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.


மேலும், நாட்டில் 35 வீதமான பயிர்கள் விலங்குகளால் அழிக்கப்படுவதாகவும் யானைகள், மயில்களை விட மிகப் பெரிய கொள்ளையர்கள் குரங்குகளே எனவும் தெரிவித்தார்.

இலங்கையில் அண்மைக் காலமாக தேங்காய்க்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதற்கு முன்னணி கொள்ளையர்களான குரங்குகளே காரணம்.

நாட்டில் 14 இலட்சத்துக்கும் அதிகமான குரங்குகள் உள்ளன. இவை தினமும் ஒரு குலை தேங்காய்களை யாவது நாசமாக்குகின்றன.

அந்த வகையில் பயிர்கள் அழியும் போது விலையும் உயர்வடைகின்றது. ஆனால் இதற்காக மக்கள் எம்மை விமர்சிக்கின்றனர் எனவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார். (இ-7)

# உடைந்த நிலையில் காணப்படும் மதிலை சீர் செய்ய வேண்டும்





(கரணவாய்)

யாழ். உடுப்பிட்டி சந்தையின் மதில்கள் உடைவடைந்திருப்பதுடன் அங்குள்ள குப்பைகள் அகற்றப்படாதுள்ளதாக பொதுமக்களால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எனவே கரவெட்டி பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட சந்தையில் குவிக்கப்பட்டிருக்கும் குப்பைகளை அகற்றுவதுடன் உடைந்த நிலையில் காணப்படும் மதிலையும் சீர் செய்ய வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-60)

# பருத்தித்துறை பிரதேசசபை பவுசரில் கெருடாவில் பகுதி மக்களுக்கு குடிநீர்



(கரணவாய்)

யாழ். பருத்தித்துறை பிரதேசசபையினால் கெருடாவில் பகுதிக்கு பவுசர் மூலம் குடிநீர் விநியோகம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கெருடாவில் பகுதியிலுள்ள மாயவனூர் குடியிருப்பில் 58 குடும்பங்கள் வசித்து வருகின்றன.

அவர்கள் குடிநீர் பெறுவதற்கு பெரும் சிரமப்படுவதாக அவ்வட்டார உறுப்பினர் பிரதேச சபையின் கவனத்திற்கு கொண்டு வந்தார். இதனையடுத்து நேற்று வியாழக்கிழமை தொடக்கம் அப்பகுதிக்கு பவுசர் மூலம் குடிநீர் விநியோகிக்கப்படும் என பருத்தித்துறை பிரதேசசபை தவிசாளர் அ. சா. அரியகுமார் தெரிவித்தார். (இ-60)

# பிறந்த எண்களின் அதிர்ஷ்ட இரகசியம்

## பிறப்பு எண் 3 விதி எண் 8

குரு சனி ஆதிக்கத்தில் பிறந்த இவர்கள் முன்னேற்றத்திலேயே கண்ணும் கருத்துமாக இருந்து வெற்றி பெறுவார்கள். முன்னோர்கள் காட்டிய பாதையிலேயே போ்வார்கள். பல வெறுப்புகளைச் சுமந்து வாழும் இவர்கள் நல்லது செய்தாலும், நேர்மையாக இருந்தாலும் வீண் பழிச் சொற்கள் வரும். ஆதிக்க சக்திமிக்கவர்கள். பேச்சும் எழுத்தும் தீவிரவாதத் தன்மையுடன் இருக்கும். பல தொழில் செய்வார்கள். தன்னைச் சார்ந்தவர்களைப் பொறுப்புடன் பாதுகாப்பார்கள். இளமையிலேயே தலைமுடி நரைத்து விடும்.

மிதந்த கண்களை உடையவர்கள். ஆரம்ப வாழ்க்கை கடினமாக இருந்து, பிற்கால வாழ்க்கை, பல நல்ல வசதிகளுடன் வாழும் பாக்கியமுடையதாகும். விழிகள் கூர்மையாகவும், வசீகரப் பார்வையுடனும் இருக்கும். பிறவியிலேயே கலைஞானமிக்கவர்கள். செலவு செய்வதில் சிக்கனத்தைக் கடைப்பிடிப்பார்கள். ஆழ்ந்த தெய்வ நம்பிக்கையிருக்கும். எழுத்தினால் புகழ் பெறுவார்கள். தியாக மனப்பான்மை இருக்கும். தலைமைப் பொறுப்பை ஏற்று நடத்துவார்கள். ஒருபோதும் தன் சுய கௌரவத்தை விட்டுக் கொடுக்க மாட்டார்கள். கைத்தொழில்கள் பல கற்று வைத்திருப்பார்கள். கணிதத் திறமையும், வாக்கு பலமும் மிக்க இவர்கள், பிறர் சொல்வதை அப்படியே கேட்காமல் தன் மனதிற்குச் சரியென்று பட்டத்தை மட்டும் செய்வார்கள். எல்லா விடயங்கள் பற்றியும் தெரிந்திருக்கும் இவர்கள் எப்போதும் சுறுசுறுப்புடன் காட்சியளிப்பார்கள். ஓய்வெடுக்க நினைத்தால் முழுச் சோம்பேறிகளாகவும் ஆகிவிடுவார்கள். மற்றவர்களைப் புகழ்வதன் மூலம் காரியத்தைத் சாதித்துக் கொள்வதில் விருப்பம் இல்லாதவர்கள். இவர்களை யாரும் பகைத்துக் கொள்ள மாட்டார்கள். பல மக்கள் இவர்களைச் சுற்றி எப்பொழுதும் இருந்து கொண்டேயிருப்பார்கள். புறம் பேச மாட்டார்கள். தனக்குப் பிடிக்காதவர்களை விட்டு உடனே விலகி விடுவார்கள். பண விடயத்தில் நாணயமிக்கவர்கள்.

வாகனம், நீச்சல் போன்றவற்றில் ஆர்வமிருக்கும். இலாபம் தராத தொழில்களில் ஈடுபட மாட்டார்கள். பூட்டிய வீட்டைப் பலமுறை பூட்டை இழுத்துப் பார்க்கும் குணமுடையவர்கள். இவர்கள் பணத்தைச் சிக்கனமாகச் செலவு செய்த போதும் திரும்பத் திரும்பச் செலவு வந்து கொண்டேயிருக்கும். ஒரு சீர்திருத்தக் கொள்கைப்படி வாழ வேண்டும் என்று எண்ணுவார்கள். சில நேரங்களில் இவர்கள் எதையோ இழந்தது போன்றே காணப்படுவார்கள். திடீரென்று தன்னம்பிக்கையை இழ்ந்து விடுவார்கள். கவர்ச்சியான முகமும், வசீகரமான தோற்றமும் உடையவர்கள். திரைகடல் தாண்டியும் பணம் சேர்ப்பார்கள். மனக்கட்டுப்பாடுகளுடன் வாழ்வார்கள். தனது கருத்துக்களை விவாதிக்கும் போது தெளிவாக இருப்பார்கள்.





எப்பேர்ப்பட்ட சிக்கல்கள் நிறைந்த பிரச்சினைகளையும் பேசியே தீர்த்து விடுவார்கள். தன் தகுதிக்குக் குறைந்த எந்தப் பணியையும் செய்ய மாட்டார்கள். நீதி, நேர்மை போன்ற குணங்கள் இயற்கையிலேயே அமைந்துவிடும். தனிப்பட்ட வழியில் தெய்வங்களை சிரத்தையோடு வழிபடுவார்கள். அதீத சக்திகள், தம்பனம், மோகனம், வசியம் அறிந்தவர்கள்.

வாக்கு பலமிக்கவர்கள். பண விடயத்தில் கண்டிப்பு இருக்கும். சீர்தூக்கிப் பார்க்கும் திறமை இருக்கும்.

நன்மை, தீமைகளை ஆராய்ந்து பார்ப்பார்கள். தோல்விகளைக் கண்டு துவள மாட்டார்கள். புத்திக்கூர்மையானவர்கள்.

உதவி என்று கேட்டு வருபவர்கள் யாராக இருந்தாலும் உதவிகள் செய்வார்கள். அஞ்சா செஞ்சமும் மன தைரியமும் மிக்கவர்கள். காரிய சித்தியடைவார்கள். ஏதாவது ஒரு வழியில் புதுமையைச் செய்து கொண்டேயிருப்பர்கள்.

எல்லோரிடமும் ஒத்துப் போகக் கூடியவர்கள். எத்துறையிலும் மேன்மையுண்டு. பிறருடைய யோசனையைக் கேட்காமலேயே தன்னுடைய விருப்பப்படி காரியம் ஆற்றுவார்கள். குழந்தைகள் மீது பாசமுடையவர்கள். தனது தகுதிக்கு மிஞ்சின பதவிகள் திடீரென்று தேடிவரும். தான தர்மங்களை மனம் விரும்பிச் செய்வார்கள். பேச்சு வசியமிக்கதாக இருக்கும்.

பலபேருடைய ஆதரவுகள் இவர்களுக்கு அமைந்துவிடும். சுய முயற்சியால் பூரண வெற்றி கிடைக்கும். தூரதேச தொடர்புகள் மூலம் பெரும் பணம் சேரும். கலை சார்ந்த துறைகளில் பெரும் புகழ் கிட்டும். அறிவியல், மருத்துவம், வரலாறு போன்றவற்றில் நாட்டம் அதிகமிருக்கும். புகழ்பெற வேண்டுமென்ற ஆசையுடையவர்கள். அதிர்ஷ்டக் குறிப்புகளை முறையாகக் கையாண்டு வந்தால் அதிர்ஷ்டமான வாழ்க்கை நிச்சயம் சித்திக்கும்.

அதிர்ஷ்ட திகதிகள்
3,12,21,30,1,10,19,28,5,14,23

துரதிர்ஷ்ட திகதிகள்
6,15,24,8,17,26

அதிர்ஷ்ட நிறங்கள்
வெளிர்நீலம், மஞ்சள், ரோஸ், ஒரேஞ், கத்தரிப்பூ நிறம்.

துரதிர்ஷ்ட நிறங்கள்
கறுப்பு, பச்சை, சிவப்பு, இருண்ட நிறங்கள்.

அதிர்ஷ்ட இரத்தினங்கள்
கனகபுஷ்பராகம், மஞ்சள் புஷ்பராகம், தங்க புஷ்பராகம், எமிதிஸ்ட், நீலக்கல், இந்திர நீலம்.

(தொடரும்...)

# இலங்கையில் தமிழர்

## ஒரு முழுமையான வரலாறு (கி.மு.300- கி.பி.2000)

**14**

கலாநிதி மு.குணசிங்கம்

இங்கு அடக்கம் செய்யப்பட்டவர் ஒரு குறுநிலத் தலைவராகக் காணப்பட்டதுடன் வர்த்தக நடவடிக்கைகளிலும் அவர் ஈடுபட்டு இருந்தமைக்கு அவரது முத்திரை சான்று பகர்கின்றது. இம் முத்திரையில் "கோவேத" என எழுதப்பட்டிருக்கின்றது. பிராமி எழுத்து வடிவத்தில் இது எழுதப்பட்டிருக்கின்றது.

"கோ" என்பது மன்னனைக் குறிக்கும் ஆதித் தமிழ்ச் சொல்லாகும். "கோவேத" என்பது கோ ஆதன், கோபூதி ஆகிய தமி ழ்ச் சொற்களுடன் ஒப்பிடக் கூடியதெனப் பேராசிரியர் இந்திரபாலா கணித்துள்ளார். துரதிர்ஷ்டவசமாக இவ் ஆய்வினைத் தொடர அவ் வேளையில் அரசாங்கம் தடை போட்டிருந்தது.

மேலும் 1981-1982 களில் காரைதீவுப் (இன்று காரைநகர் என அழைக்கப்படும்) பகுதியிலும், சந்திரத்தை, வேலணை போன்ற இடங்களிலும் பேராசிரியர் ரகுபதி மேற்கொண்ட மேலாய்வுகள் மூலம் இரும்புக்காலப் பண்பாடுத் தடயங்கள் கண்டறியப்பட்டுள்ளன. அதேபோன்று, 2004களில் பேராசிரியர் புஷ்பரத்தினம் தனது மேலாய்வுகள் மூலம் சாட்டியிலும், பூநகரிப் பகுதிகளிலும் குறிப்பாக மண்ணித்தலை, கல்முனை, வெட்டுக்காடு, பள்ளிக்குடா, ஈழவூர் பகுதிகளிலும் இருந்து இப் பண்பாட்டுக்குரிய தடயங்கள் பலவற்றைக் கண்டறிந்துள்ளார்.

பாக்கு நீரிணை - சேது சமுத்திரம் வழியாகத் தமிழ் நாட்டிலிருந்து பரவிய இவ் இரும்புக் காலப் பண்பாட்டுச் செல்வாக்கு, நதியோரம் வழியாக இலங்கையின் பல்வேறு இடங்களுக்கும் பரவியதுபோல பறங்கியாறு வழியாக வவுனியா மாவட்டத்திலும் பரவியமையைக் காணலாம்.

கிழக்கில் பாயும் மாஓயா, யான் ஓயா வழியாகவும் வவுனியா மாவட்டத்திற்கு இப் பண்பாடுச் செல்வாக்கு பரவும் வாய்ப்பு இருந்திருக்கின்றது. மாமடுவில் பெருங்கற்களால் அமைக்கப்பட்ட இரு பெரும் சவ அடக்கங்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. இவை இதுவரை இலங்கையில் வேறெங்கும் கண்டறியப்படாத தனித்துவமுள்ள கல்வட்ட சவ அடக்கங்கள் என்பதனைப் பேராசிரியர் ஸெனிவரத்ன சுட்டிக் காட்டியுள்ளார்.

கிழக்கு இலங்கையில் யான் ஓயாப் பகுதியிலேதான் இதுவரை கூடுதலான இரும்புக்காலப் பண்பாட்டுத் தடயங்கள் கண்டறியப்பட்டுள்ளன. தம்மன்னகொடல்ல, குருஹல்ஹின்ன, வடிகவவ, கொக்கப, திவுல்லவ, ராபாவ போன்ற இடங்கள் முக்கியமான தளங்களாகும். இதையொத்த சவ அடக்கங்கள், மல்வத்து ஓயாவுக்கு அருகாமையில் மச்சகம என்ற இடத்திலும் தெற்கே, இப்பன் கட்டுவ மற்றும் பின்வவ ஆகிய இடங்களிலும், கிழக்குக் கரையில்



"மத்திய இலங்கையில் வன்னிப் பெருநிலப் பரப்பை அண்மித்தாக உள்ள அநுராதபுரப் பிரதேசம் ஆதி இரும்புக் காலப் பண்பாட்டை இறுதியாக உள்வாங்கிய ஒரு நிலப் பரப்பாகக் காணப்படுவதை உறுதிப்படுத்தக் கூடியதாக உள்ளது. பெருங்கற் பண்பாட்டு அம்சத் தின் முக்கிய கூறான தாழி சவ அடக்க முறைகள் இப் பிரதேச த்தில் கண்டெடுக்கப் படாவிட்டாலும், ஏனைய இரும்புக் காலத் தடயங்கள் பல இங்கு அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன"

## தமிழரின் தோற்றமும் ஆரம்ப வரலாறும் கி.மு 300-கி.பி 300

கதிரவெளியிலும் கண்டறியப்பட்டுள்ளன.

மேலும், சேருவில என்ற இடத்திலுள்ள பிராமிக் கல்வெட்டு ஒன்று திருகோணமலை மாவட்டத்தில் இந்த சவ அடக்க காலத்தில் தமிழ் இனக் குழுவினர் இருந்தமைக்கு சான்று பகர்கின்றது.

மேலும் கிழக்கு இலங்கையில் மட்டக்களப்பு மாவட்டமும் இப் பண்பாட்டு அம்சங்களை உள்வாங்கிய ஒரு பிரதேசமாகக் காணப்படுகின்றது. காவிரி ஆற்றின் கழிமுகத்தில் இருந்து வட இலங்கைக்குக் கடற்பயணங்கள் அக்காலத்தில் மேற்கொள்ளப்பட்டமை போலவே, ஈழத்தின் கிழக்குக் கரைக்கும் பூம்புகார் வழியாகத் தொடர்புகள் ஏற்பட்டு இருக்கின்றன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் காணப்படும் ஆதி இரும்புக்காலத் தடயங்களும் இப் பிரதேசத்திலுள்ள கதிரவெளியிற் கிடைத்த தொல் பொருட்களும், இதனை உறுதிப் படுத்துகின்றன.

கதிரவெளியை அண்மித்த, சேருவில, இலங்கைத் துறை, ஈச்சிலம் பத்தை ஆகிய இடங்களில் கண்டெடுக்கப்பட்ட கல்வெட்டுக்களும் தொல்லியற் பொருட்களும் இவை ஆதி இரும்புக் காலப் பண்பாட்டுக் குரியவை என்பதனை மேலும் உறுதி செய்கின்றன.

இதேபோன்று அம்பாறை மாவட்டத்திலும், கும்புக்கன் ஓயா ஆற்றுக்கு வடக்கேயும் இப் பண்பாட்டுத் தடயங்கள் கிடைக்கப் பெற்றிருக்கின்றன. ஆதி இரும்புக் காலச் சவ அடக்கங்கள் காணப்படும் பானமத்துக்கு தெற்கே ஒகந்த என்னும் இடத்திலும் இத் தடயங்கள் இருப்பதாக 1920 களில் தெரிய வந்துள்ளது.

மேலும் மேற்கூறிய இடங்களுக்கு அண்மித்த பகுதிகளில் பிராமிக் கல்வெட்டுகளும் கிடைத்துள்ளன. அம்பாறை மாவட்டத்தில் கண்டெடுக்கப்பட்ட அவ்வாறான ஒரு பிராமிக் கல்வெட்டில், தமிழ்ப் பெண் பற்றிய குறிப்பொன்று உள்ளது.

இக் கல்வெட்டு குடுவில் என்ற இடத்தில் உள்ளது. பிராகிருத மொழியில், 'தமெட' என்றழைக்கப்பட்ட தமிழ் மக்கள் அக்கரைப்பற்றுப் பகுதியில் இற்றைக்கு 2000 ஆண்டு களுக்கு முன் இருந்தமைக்கு இது சான்றாக உள்ளது.

மேற்கூறப்பட்ட வடக்கு, வடமேற்கு, வன்னிப்பெருநிலப்பரப்பு, கிழக்குப் பிரதேசங்களைவிடத் தென்னிலங்கையிலும் இப் பண்பாட்டுத் தடயங்கள் மிகவும் அருகியே காணப்படுகின்றன. ஒரு சில இடங்களிலேயே இப் பண்பாட்டுக்குரிய தடயங்கள் கிடைத்திருக்கின்றன. ஆனால் மத்திய இலங்கையில் வன்னிப் பெருநிலப் பரப்பை அண்மித்ததாக உள்ள அநுராதபுரப் பிரதேசம் ஆதி இரும்புக் காலப் பண்பாட்டை இறுதியாக உள்வாங்கிய ஒரு நிலப்பரப்பாகக் காணப்படுவதை உறுதிப்படுத்தக் கூடியதாக உள்ளது.

பெருங்கற் பண்பாட்டு அம்சத்தின் முக்கிய கூறான தாழி சவ அடக்க முறைகள் இப் பிரதேசத்தில் கண்டெடுக்கப் படாவிட்டாலும், ஏனைய இரும்புக் காலத் தடயங்கள் பல இங்கு அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன என்பது கருத்திற் கொள்ளத்தக்கதாகும்.

பொம்பரிப்பு, ஆதி இரும்புக் காலத்தில் ஒரு முக்கிய குடியிருப்பாக இருந்திருக்கிறது. இங்கு சுமார் 8000 சவ அடக்க இடங்கள் இருப்பதாகவும் அவற்றில் 12,000 உடல்கள் அடக்கம் செய்யப்பட்டு இருப்பதாகவும் மதிப்பிடப்பட்டுள்ளது. எனவே இப்பிரதேசத்தில் இரும்புக்காலத்தில் நகரமயப்படுத்தப்பட்ட ஒரு செறிவான குடியிருப்பு மையம் இருந்திருக்கின்றது என்பதை அறியமுடிகின்றது.

பாளி வரலாற்று நூல்களில் இற்றைக்கு சுமார் 2500 வருடங்களுக்கு முன் இலங்கையின் வடமேற்குக் கரையில் தம்பபண்ணி (சமஸ்கிருத மொழியில் "தாம்ர பர்ணி") என்ற இடம் இருந்தது எனக் குறிப்புகள் உள்ளன. இது பொம்பரிப்பின் அருகாமையில் இருந்திருக்க வேண்டும்.

அக் காலகட்டத்தில் இப் பிரதேசத்தில் குடியிருப்புக்கள் அதிகரிக்க, மக்கள் பரம்பல் இயற்கை வளம் நிறைந்த அநுராதபுரப் பிரதேசத்திற்கு நகர்ந்தது. அங்குள்ள இயற்கை வளங்களைக் கூடுதலாகப் பயன்படுத்துவதன் மூலம் கூடுதலான மக்கள் வாழும் பிரதேசமாக இது கி.மு 900 அளவில் மாறியிருக்க வேண்டுமென வரலாற்று ஆசிரியர்கள் கருதுகின்றனர்.

மன்னாரில் உள்ள மாதோட்டப் பகுதிகளிலும் வடமேற்குக் கரையிலுள்ள பொம்பரிப்பு, தம்பபண்ணி பிரதேசங்களிலும் இவ் ஆதி இரும்புக்காலப் பண்பாட்டுக் குரிய மக்கள் பரவலாக, செறிவாக வாழ்ந்திருக்கின்றார்கள் என்பது நிச்சயமாகின்றது.

மேலும், இப் பிரதேசங்களில் தான் ஆதி இரும்புக்காலத்திலே குறுநில (Chiefdoms) அரசுகள் முதலில் தோற்றம் பெற்றதையும் காணமுடிகின்றது. இப் பிரதேசங்களில் வாழ்ந்த மக்களை அநுராதபுரச் சூழல் ஈர்த்து இழுக்க, இக் குறுநில அரசுகள் குறிப்பிடத்தக்க அளவு வலுவிழந்துபோக, அநுராதபுரம் ஒரு வலுவான அரசாக மாறியதாக கொள்ளப்படுகின்றது.

(தொடரும்)

# பிள்ளைகளுக்கு போதிய தொழிற்பயிற்சி இன்மையே

# சட்டவிரோத செயற்பாடுகள் இடம்பெறக் காரணம்

## பேராசிரியர் கந்தசாமி சுட்டிக்காட்டு

(சாவகச்சேரி)

பெற்றோர்கள் தமது பிள்ளைகளுக்கு எந்தவிதமான தொழில் பயிற்சிகளும் பயிற்றுவிக்காமையாலே எமது சமூகத்தில் சட்டவிரோத செயற்பாடுகள் இடம்பெறக் காரணம் என தென்மராட்சி அபிவிருத்திக்கழகத் தலைவரும் பேராசிரியருமான க.கந்தசாமி தெரிவித்துள்ளார். சாவகச்சேரி பொன்விழா மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்ற தென்மராட்சி விழா நிகழ்வில் தலைமை உரை ஆற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்திருந்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

அன்றைய காலத்தில் வாழ்வதற்கு தேவையான வாழ்வாதாரப் பயிற்சிகள் சிறு வயதில் இருந்தே பெற்றோரால் பயிற்றப்பட்டு வந்தன. அதனால் கல்வியில் சிறந்து விளங்காவிட்டாலும் தொழில் புரிந்து வாழ்க்கையைக் கொண்டு நடத்தக் கூடிய நிலை காணப்பட்டது. ஆனால் இன்று அந்த நிலை சற்றுக்கூட இல்லை. சாதாரணதரம் வரை எந்தவிதமான தொழிற்பயிற்சியும் கற்காதவர்களாக வளருகின்றனர்.

எமது இளம் சமுதாயத்தினரை தொழில் புரிபவர்களாக ஆக்க வேண்டுமாக இருந்தால் அவர்களை நாம் வயலிற்கு அனுப்ப முடியாது. அதற்கு இன்றைய இளைஞர்கள் பயிற்றப்படவில்லை. ஏதாவதொரு தொழிற்சாலைக்கே இளைஞர்களை அழைத்துச் செல்ல வேண்டும். அதன்மூலம் தொழிலாளர் வர்க்கம் என்ற நிலைக்கு எமது இளைஞர்களைத் தள்ள முடியும். அதற்கு எமது பிரதேசத்திற்கு இயந்திர மயமாக்கப்பட்ட தொழிற்சாலைகள் வேண்டும். தொழில் ரீதியாக எமது இளைஞர்களை முன்னேற்ற மாகாண சபை போன்றனவும் எமக்கு உதவ வேண்டும். அத்துடன் எமது பிரதேச வளங்களை நாம் உரிய வகையில் பயன்படுத்தத் தவறி வருகிறோம்.

எங்களிடமுள்ள எத்தனையோ வாழ்வாதாரங்கள் முறையான பராமரிப்பின்றி சிதைந்து கொண்டு போகின்றன. எமது பிரதேசத்தில் விளையும் பழ வகைகளை சந்தைப்படுத்த முடியாத நிலையுள்ளது. அதற்கு சிறந்த உதாரணம் பலாப்பழம். பனை மரத்தில் இருந்து பெறப்படும் பனங்கட்டி ஆகியவற்றிலுள்ள மருத்துவக் குணம் மேலைத்தேய நாடுகளில் பெருமளவில் மதிக்கப்படுகிறது.

எங்களிடம் விளையும் பழ வகைகளுக்கு வெளிநாடுகளில் நல்ல மதிப் புள்ளது. அத்துடன் கற்றா ழையை எமது பிரதேச விவ சாயிகள் தென்னைப் பயிர்க ளுக்கு இடையே ஊடு பயிராக பயிரிடலாம். கற்றாழையின் விலை மற்றும் தேவை ஆகியன அதிகரித்துக் காணப்படுகிறது. அதனைக் கொள்வனவு செய்யவும் தென்னிலங்கை நிறுவனங்கள் முன்வருகின்றன. இப்படியாக எமது வாழ்வாதாரங்களை உருவாக்கவும் அபிவிருத்திகளை மேற்கொள்ளவும் புலம்பெயர் தமிழர்களின் உதவியை நாடி நிற்கின்றோம். இதனை வேண்டுகோளாக புலம்பெயர் தமிழர்கள் மற்றும் மாகாணசபையிடம் கேட்டுக்கொள்கின்றோம். இப்படியான வாழ்வாதாரங்களை எங்கள் இளைஞர்களுக்கு ஏற்படுத்திக் கொடுங்கள். அதுவே எமது சமூகத்தின் பொறுப்பு.

நாங்கள் இளைஞர்களை வீணர்கள் என்று கூறுவது எமக்கு அழகில்லை. அவர்களுக் கான சந்தர்ப்பத்தினை ஏற் படுத்திக் கொடுங்கள். இப்படி யான அபிவிருத்திச் செயற்பாடு களை நடைமுறைப்படுத்த மாகாணசபை மற்றும் புலம்பெயர் உறவுகளின் உதவியினைக் கோரி நிற்கின்றோம்.

அத்தோடு வியாபார புத்தி உள்ள வெளிநாட்டவர்கள் சிலர் வேண்டும். இவர்கள் மூலம் எமது பிரதேச உற்பத்திகள் அனைத்தும் மேலைத்தேய நாடுகளுக்குச் செல்லும்.

மாணவர்களின் கல்வி அபிவிருத்திக்கும் அவர்களுடைய கவனம் சிதறாமல் பண்பாடு விழுமியங்களுடன் செயற்படக்கூடிய செயற்பாடுகளையும் ஊக்குவித்து வருகிறோம். எங்கள் பிரதேச இளம் சிறார்களையும் அவர்களுடைய கல்வி நடவடிக்கைகளையும் ஊக்குவிக்க வேண்டும். மனித பலம் என்பதுகூட எமக்கு இப்போது பற்றாக்குறையாகவே உள்ளது. இளம் சமூகமும் எம்மோடு இணைந்து தொழிற்பட வேண்டும். தென்மராட்சி அபிவிருத்திக் கழகமானது தென்மராட்சி இடப்பெயர்வின் பின்னர் எமது அன்றாடச் செயற்பாடுகளை தொடக்கவும் அத்துடன் பாடசாலை மற்றும் சந்தைப் பகுதிகளின் அபிவிருத்திக்காகவும் அமைக்கப்பட்டது. அதன் பின்னர் தென்மராட்சி மக்களின் ஆர்வம் மற்றும் ஆதரவு காரணமாக இன்று விஸ்வரூபம் எடுத்துள்ளது. எமது பிரதான நோக்கம் எமது பிரதேசத்தை அபிவிருத்தி செய்து பிரதேச மக்களின் வாழ்வாதாரத்தினை உயர்த்துவதே என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-30)

## நீர்த்தாங்கியினுள் விழுந்து பாடசாலை மாணவி பலி!

(கொழும்பு)

தனமல்வில,ஊவா குடா ஓயா பகுதியில் நீர்த்தாங்கியினுள் விழுந்து மாணவி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

ஊவாகுடா ஓயா பகுதியைச் சேர்ந்த தனமல்வில ஆரம்பப் பாடசாலையில் 3 ஆம் தரத்தில் கல்வி கற்ற 8 வயதுடைய அமாஷி விந்தீவரி எனும் சிறுமியே இவ் வாறு உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தனது வீட்டில் நீர் நிறைத்து வைத்திருந்த தாங்கி ஒன்றில் விழுந்து குறித்த சிறுமி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தாங்கியில் விழுந்திருந்த குறித்த சிறுமியை தனமல்வில வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளதுடன் சடலம் தனமல்வில வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.(இ-7)

## facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1482

### இளவரசன்

எட்டிப் பிடிக்கும் தூரத்தில் வெற்றி இல்லை



அதை விட்டுவிடும் எண்ணத்தில் நானும் இல்லை

### இனிதா


மற்றவர்கள் தவறாக நினைப்பார்களே
என செத்து வாழ்வதை விட



தவறாக நினைக்க அவர்கள்
யாரென தெத்தா வாழனும்

### இளவரசி

உயர்ந்த எண்ணமும் நல்ல சிந்தனைகளும்



வாழ்க்கையை இனிதாக்கும்

### ஈசன்

போன்ல நெட்டும் மனசுல லவ்வரும்
இல்லாதவங்க நைட்ல நல்லா தூங்குவாங்க



### ஈஸ்வர்

கடவுள் நமக்கு ரொம்ப ஒரு வஞ்சனை
பண்ணிட்டாருடா... என்னடா சொல்றே



ஒரு குமுக்குக்கூடநாலு மூலை வைச்சவர்
நமக்கு ஒரே மூளைதான் வைச்சிருக்கார்

### ஈஸ்வரி

ஒரு ஆணோட உச்சக்கட்ட பொறுமை
எவ்வளவுன்னு சோதித்துப் பார்க்கவே



படைக்கப்பட்டவங்கதான் அவனோட மனைவி

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

## வடக்கில் சமூகச் சீரழிவுகளுடன்
# மர்ம மனிதர்களின் அச்சமூட்டும் நடமாட்டங்கள் அதிகரிப்பு!

(யாழ்ப்பாணம்)

வடக்கில் சட்டவிரோதமான முறையில் போதைப் பொருட்கள் கடத்தப்படுவதும் அவற்றின் விற்பனையும் பாவனையும் தொடர்ந்தும் அதிகரித்துச் செல்கின்றன. நுண்கடன் நெருக்கடிகள் மக்களை மிகுந்த நெருக்கடிக்குள் தள்ளியுள்ளன.

இவற்றின் காரணமாக குழுச் சண்டைகள், வாள் வெட்டுகள், தற்கொலைகள் அதிகரித்து வருகின்றன. அதேவேளை, கொள்ளைச் சம்பவங்களும் சிறுமிகள் மீதான துஷ்பிரயோகங்களும் கொலைகளும் இடம் பெற்றுவருகின்றமை ஏற்றுக் கொள்ள முடியாத பெருங் கொடுமைகளாக உள்ளன. தற்போது இவற்றுடன் மர்ம மனிதர்கள் என்போரது அச்சமூட்டும் நடமாட்டங்களும் ஆரம்பித்துள்ளன.

இத்தகைய மக்கள் விரோத, சமூகச் சீரழிவு செயற்பாடுகளைக் கட்டுப்படுத்த பொலிஸாரையோ அல்லது சட்ட ஒழுங்கு பற்றி வெறும் கனதீ பேசிவரும் அரசியல்வாதிகளையோ நம்பிப் பயனில்லை. அதற்குப் பதிலாக மக்கள் ஐக்கியப்பட்டுக் கிராமந்தோறும் இளைஞர்கள் முன்வந்து கட்டுப்பாட்டுடனும் விழிப்புடனும் செயற்படுவதன் மூலமே மக்கள் விரோத, சமூகச் சீரழிவுச் சக்திகளைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர முடியும். அதன்மூலமே மக்களின் நிம்மதியான அன்றாட வாழ்வுக்கு வழிசமைக்க முடியும் என புதிய ஜனநாயக மாக்சிச லெனினிச கட்சியின் பொதுச்செயலாளர் சி.கா. செந்திவேல் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் அவ் அறிக்கையில், இன்று குறிப்பாக வடக்கில் உருவாகிப் பரவலாகி வரும் சமூக விரோதச் சீரழிவுச் செயற்பாடுகளுக்குப் பின்னால், சில சக்திகள் செயற்பட்டு வருவதாகவே நம்பப்படுகின்றது. அவை எவ்வாறு இருப்பினும், மக்கள் தமது கிராமத்தையும், மக்களையும்தாமேபாதுகாக்கவேண்டிய நிலையில் ஐக்கியத்துடனும், இளைஞர்கள் ஊக்கத்துடனும் முன்நிற்க வேண்டும்.

இதற்குச் சிறந்த முன்னுதாரணமாக, எமது கட்சியின் வட பிராந்தியக் குழுவின் வழிகாட்டல், ஆலோசனையின் அடிப்படையில் புத்தூர் கலைமதிக் கிராம மக்களின் செயற்பாடுகள் விளங்குகின்றன. இங்கு தினமும் இரவில் 75 வரையான இளைஞர்கள் கிராமம் முழுவதிலும் விழிப்புக் குழுக்களாகக் கண்காணிப்புக் கடமையில் ஈடுபட்டு வருகின்றனர்.

கடந்த இரண்டு வாரங்களுக்கு மேலாகச் செயற்பட்டு வரும் மேற்படி இளைஞர் குழுக்களுக்கு கலைமதிக் கிராம மக்களும், அயற் கிராமங்களைச் சேர்ந்த மக்களும் மிகுந்த ஆதரவும் அனுசரணையும் வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

சிவப்பு - வெள்ளை நிறங்களையுடைய மேலங்கியுடன் கிராமத்தையும் மக்களையும் பாதுகாத்து வரும் இவ் இளைஞர்கள் மிகவும் கட்டுப்பாட்டுடனும், பண்புடனும் இரவில் போக்குவரத்து ஒழுங்கைப் பேணியும் செயற்படுகின்றார்கள். இதே போன்று கலைமதி கிராம மக்கள் சுகாதாரக் குழுக்களையும் உருவாக்கிச் சிரமதானங்களை முன்னெடுப்பதுடன், பார்த்தீனிய ஒழிப்பு, பொலித்தீன், பிளாஸ்ரிக் பயன்பாட்டைக் குறைத்தல் ஆகிய வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர்.

அத்துடன், இக் கிராம மக்கள் கல்விக் குழு, விளையாட்டுக் குழு, கலாசாரக் குழு ஆகிய குழுக்களையும் உருவாக்கி கடந்த பல வருடங்களாக முன்னேற்றகரமான பல்வேறு செயற்பாடுகளையும் முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

எனவே, கலைமதிக் கிராம மக்களுடன் இணைந்து வடக்கின் ஏனைய கிராம மக்களும் வெகுஜனச் செயற்பாட்டினூடாக தம்மை நோக்கி முன்னெடுக்கப்படும் சட்ட விரோத, சீரழிவுச் செயற்பாடுகளின் அரசியல், பொருளாதார, சமூகக் காரணிகளை இனங்கண்டு பாதுகாப்புச் செயற்றிட்டங்களை வகுத்துக்கொள்ளவேண்டும் என எமது கட்சி கேட்டுக் கொள்கின்றது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-101)

# பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கான சிறுவர் உரிமை குறித்து பயிற்சிப்பட்டறை





(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பிரிவு மற்றும் காங்கேசன்துறை பிரிவுகளுக்குட்பட்ட 17 பொலிஸ் நிலையங்களிலுள்ள சிறுவர் மற்றும் மகளிர் பணியகத்தில் பணியாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு சிறுவர் உரிமைகள் மற்றும் சிறுவர் உரிமைகளை ஆய்வு செய்தல் போன்ற விடயங்களை உள்ளடக்கியதாக கடந்த 5,6 ஆம் திகதிகளில் இரண்டு நாள் பயிற்சிப்பட்டறை சி.சி.எச் (CCH) மற்றும் கே.என்.எச் (KNH) நிறுவனங்கள் பொலிஸ் தலைமை அலுவலகத்துடன் இணைந்து யாழ்.பிராந்திய பொலிஸ் தலைமைய மாநாட்டு மண்டபத்தில் நடத்தின.

இதில் யாழ்ப்பாணம், கோப்பாய், மானிப்பாய், சுன்னாகம், வட்டுக்கோட்டை, சாவகச்சேரி, நெடுந்தீவு, கொடிகாமம், ஊர்காவற்றுறை, தெல்லிப்பழை, இளவாலை, அச்சுவேலி, வல்வெட்டித்துறை, பருத்தித்துறை, நெல்லியடி, பலாலி, காங்கேசன்துறை பொலிஸ் நிலையங்களில் சிறுவர் மற்றும் மகளிர் பணியகத்தில் பணியாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்களும், யாழ்.பிராந்திய பெண் உதவி பொலிஸ் பரிசோதகரும் பங்குபற்றினர்.

இந் நிகழ்வில் விருந்தினர்களாக ஹேவா விதான யாழ்.தலைமை பிரதான பொலிஸ் பரிசோதகர், தி.சிந்து பாமினி, பெண்உதவிபொலிஸ் பரிசோதர், சிறுவர் பெண்கள் பிரிவு யாழ்.பிராந்தியம், ரி.ஏ.எஸ். விமலன், கே.என். எச் (KNH) நிறுவன இலங்கைக்கான பிரதிநிதி, ரி.ரி மயூரன், சி.சி.எச் (CCH) நிறுவன பணிப்பாளர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இப் பயிற்சியின் வளவாளர்களாக விமலன்,கே.என்.எச் (KNH) நிறுவன இலங்கைக்கான பிரதிநிதி, மயூரன், சி.சி.எச். நிறுவன பணிப்பாளர், வைத்தியர் கோபித் மற்றும், பங்காளர் நிறுவன உத்தியோகத்தர்களும் பங்குபற்றினர். பயிற்சியை நிறைவு செய்தவர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. (இ-7)



யாழ்.கரவெட்டி பிரதேச செயலக சமூகசேவை பிரிவால் இரண்டு மாற்றுத்திறனாளிகளுக்கு முதற்கட்டமாக 25 ஆயிரம் ரூபாய் பெறுமதியான காசோலையை பிரதேச செயலாளர் ஈ.தயாரூபன், சமூகசேவை உத்தியோகத்தர் சிறிவரதபாஸ்கரன் உள்ளிட்டோர் இணைந்து நேற்று முன்தினம் வழங்கினர். (படங்கள்:-மகாலிங்கம்)

# செய்தித்துளிகள்

## நகர சபை உபதலைவர் கைது

(கொழும்பு)

தலவாக்கலை லிந்துல நகரசபையின் உப தலைவர் லெட்சுமன் பாரதிதாசன் நேற்று முற்பகல் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த நபருக்கெதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள நீதிமன்ற வழக்குகளுக்கு தொடர்ச்சியாக சமுகமளிக்காமையினால் கைது செய்யப்பட்டு ஹற்றன் நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்காக தலவாக்கலை பொலிஸாரால் அழைத்துச் செல்லப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (இ-7)

## தொடர் குடியிருப்பு மீது சரிந்து வீழ்ந்த ஆலமரம்



(இரத்தினபுரி)

இரத்தினபுரி-நிவித்திகலை - நொரகலை கீழ் பிரிவில் ஆலமரம் ஒன்று தொடர் குடியிருப்பு மீது வீழ்ந்ததில், 4 வீடுகள் சேதமடைந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக குறித்த தொடர் குடியிருப்பில் இருந்த 10 குடும்பங்களை சேர்ந்த 25 இற்கும் மேற்பட்டவர்கள் அருகில் உள்ள பாடசாலை ஒன்றில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். (இ-7)

## பெரியம்மையால் ரஜரட்டயில் மூன்று பீடங்களுக்குப் பூட்டு

(கொழும்பு)

ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் மூன்று பீடங்கள் எதிர்வரும் 26ஆம் திகதி வரை மூடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. குறித்த பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கும் மாணவர்களிடையே பெரியம்மை நோய் பரவுவதால், இவ்வாறு மூன்று பீடங்களை மூடுவதற்குத் தீர்மானித்ததாக, ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் உப பீடாதிபதி பேராசிரியர் ரஞ்சித் வியவர்தன தெரிவித்துள்ளார்.

இதுவரை 44 மாணவர்களுக்கு பெரியம்மை நோய் தொற்றியுள்ளதுடன், மேலும் சில மாணவர்களுக்கு வைரஸ் காய்ச்சல், வயிற்றுப்போக்கு போன்ற நோய்கள் காணப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (இ-7)

## 20 ஆண்டுகள் கடூழியச் சிறை

(திருமலை)

திருகோணமலையில் பதினொரு வயது மாணவி ஒருவரை பாலியல் துஷ்பிரயோகம் செய்த நபருக்கு திருகோணமலை மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் 20 ஆண்டுகால கடூழியச் சிறைத் தண்டனையும் 10 ஆயிரம் ரூபா தண்டப் பணமும் அதனை கட்டத் தவறினால் ஒருமாத கடூழியச் சிறையும் 5 இலட்சம் ரூபா நட்ட ஈடும் அதனை கட்டத்தவறினால் மேலும் இரண்டு ஆண்டுகள் கடூழியச் சிறைத் தண்டனையும் விதித்து நேற்று முன்தினம் தீர்ப்பளித்தார். (இ-7)

## புதிய நிர்வாகத்தெரிவு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபை ஆணையாளர் இ.த.ஜெயசீலன் தலைமையில் அரியாலை அருணோதயா சனசமூக நிலையத்தின் புதிய நிர்வாகிகள் தெரிவு அண்மையில் இடம்பெற்றது. இதில் தலைவராக பூ.குகதாசன், செயலாளராக ச.தனபாலசிங்கம், பொருளாளராக திருமதி மோகனகலா, உப தலைவராக நா. பாஸ்கர், உப செயலாளராக திருமதி உதயகலா ஆகி யோர் தெரிவாகினர். (இ)

>>>>>>>>>>>>>>>>>>>>

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி வடக்கு கால்நடைவளர்ப்போர் கூட்டுறவுச் சங்க புதிய நிர்வாகத் தெரிவு கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் ச.சுவர்ணன் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது. இதில் தலைவராக மு.ஜெகதேவன், உப தலைவராக த.கெங்காபதி, செயலாளராக திருமதி வி.மிராஜினி ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (இ)




# குரங்கு அறிஞர்



ஒரு அறிஞர் ஆராய்ச்சி நூல் ஒன்று எழுதுவதற்காக அமைதியான இடத்தைத் தேடிக் கொண்டிருந்தார். அவரையறியாமல், அரக்கர்கள் இருந்த பள்ளத்தாக்கை தன் இடமாகத் தேர்ந்தெடுத்தார். கோபமடைந்த ஒரு அரக்கன் அவரைப் பார்த்துக் கேட்டான்.

"யார் நீ? இந்த அமைதியான பள்ளத்தாக்கை கெடுக்க வந்தாயா?" என்றான். "தயவு செய்து என்னை மன்னித்து விடு. நான் ஒரு அறிஞன். அமைதியான இடத்தைத் தேடிக் கொண்டிருந்தேன். அதனால், இங்கு வந்தேன்!" என்றார்.

"இதற்கு ஒரு விலை நீ கொடுக்க வேண்டும். நான் உன்னைக் குரங்காக மாற்றி விடுவேன். அது தான் உனக்குத் தண்டனை!" என்று அந்த அரக்கன் கூறினான்.

அடுத்த கணம், அந்த அறிஞர் குரங்காக மாறிவிட்டார். அவர் விம்மி விம்மி அழுதார். ஒரு மரத்திலிருந்து மற்றொரு மரத்திற்குத் தாவிக் கொண்டிருந்தார். குரங்குகளைப் போல் பழங்களைத் தின்று வந்தார். அவர் நகரத்தை அடைந்தார். அங்கு ஒரு கப்பல் பக்தாத் பட்டணத்திற்குப் புறப்படவிருந்தது. அவர் அதில் தாவி ஏறினார். அதிலிருந்த பயணிகள் கூச்சலிட ஆரம்பித்தனர். "குரங்கை வெளியே அனுப்புங்கள் கொன்றுவிடுங்கள்!" என்று கத்தினர். கப்பலின் தலைவன் அந்த குரங்கிற்காக வருத்தப்பட்டுச் சொன்னார்.

"வேண்டாம். அதுவும் நம்முடன் வரட்டும். யாருக்கும் அது தொந்தரவு தராதவாறு நான் பார்த்துக் கொள்கிறேன்!"

அந்தக் குரங்கு கப்பல் தலைவனுக்கு நன்றி உடையவனாய் இருந்தது. பக்தாத்தில் ஒரு செய்தி பரவி இருந்தது. அரசருக்கு ஆலோசனை கூறுபவர் இறந்துவிட்டதாகவும் அரசர் அந்த இடத்திற்குத் தகுந்த ஆளைத் தேர்ந்தெடுக்க விரும்புவதாகவும் அறிவித்திருந்தார். இப்பதவியை விரும்புவோர் ஏதேனும் ஒரு செய்தியைத் தகுந்த முறையில் எழுதி அனுப்பலாம். அவற்றுள் எது மிகவும் நன்றாக உள்ளதோ, அதை எழுதியவர் ஆலோசகராகத் தேர்ந்தெடுக்கப்படுவார் என்றும் அறிவிக்கப்பட்டது. அந்தக் குரங்கு அறிஞரும் செய்தியை எழுதினார். அரசருடைய சேவகர்களும் மற்றவர்களும் நகைத்தனர். "இங்கே வேடிக்கையைப் பார். இந்தக் குரங்கு அரசருக்கு ஆலோசகராகப் போகிறதாம்!" என்று கேலி செய்தனர். ஆனால், எல்லாச் செய்திகளும் அரசரிடம் எடுத்துச் செல்லப்பட்டன. அரசர் எல்லாவற்றையும் படித்தார். அந்தக் குரங்கின் செய்தி மிகவும் நன்றாக இருந்தது.

அந்தக் குரங்கை நேர்முகத் தேர்விற்காக அரசர் வரச்சொன்னார். குரங்கு நல்ல கம்பீரமாக உடையணிந்து குதிரைமேல் ஏறி, பக்தாத் தெருக்களில் ஊர்வலமாக வந்து அரசரைச் சந்தித்தது. அரசவையில் அதனிடம் நிறைய கேள்விகள் கேட்கப்பட்டன. அது எல்லாக் கேள்விகளுக்கும் அறிவுபூர்வமான சரியான விடைகளைக் கூறியது. அரசருக்கு அதை மிகவும் பிடித்து விட்டது. ஆனால், அமைச்சர்கள் தடுத்தனர்.

"எப்போதும் அதனால் பேச முடியாது. எப்படி ஒரு குரங்கு தலைமை ஆலோசகராகமுடியும்?" என்றனர்.

அரசர் தீர்மானமாக இருந்ததால் அவர் குரங்கையே தலைமை ஆலோசகராக நியமித்தார். அவருடைய புதல்வி, இளவரசி இந்தக் குரங்கு உண்மையில் குரங்கு அன்று. ஏதோ அரக்கர்களின் மாயத்தால் இவ்வாறு மாற்றப்பட்டுள்ளது என்பதை அறிந்தாள். அரக்கர்கள், அவர்களின் மந்திர வித்தைகள் போன்றவற்றை அவள் படித்துள்ளாள். அந்த மந்திரத்தால் குரங்குத்தன்மை மாறும்படி செய்தாள். அறிஞர் தன் பழைய நிலையை அடைந்தார்.

பல ஆண்டுகள் அங்கு தங்கி நன்றியறிதலோடு அரசருக்குத் தகுந்த ஆலோசனைகளை வழங்கினார்.

# அப்துல்கலாம் பற்றிய சில அரிய தகவல்கள்

இந்தியாவின் 11 ஆவது குடியரசு தலைவரான ஏ.பி.ஜே.அப்துல் கலாம் 2015 ஜூலை 27 ஆம் திகதி மரணமடைந்தார். இந்த பூலோகத்தை விட்டுச்சென்றாலும் மக்கள் மனதில் நீங்கா இடம் பிடித்த தலைவர் அப்துல்கலாம்.

**இவரை பற்றிய சில அரிய தகவல்கள்**

● தாய்மொழியான தமிழ் மொழியில் கல்வி பயின்று, அறிவியல் துறையில் உலக சாதனைகள் செய்தவர் அப்துல்கலாம்.

● இந்திய ஜனாதிபதிகளில் மிக மிக எளிமையாக இருந்தவர் இவர் ஒருவரே. ஜனாதிபதி மாளிகையில் சைவ உணவுகள் மட்டுமே சாப்பிட்ட ஒரே ஜனாதிபதி இவர் தான்.

● "மாணவர்களே கனவு காணுங்கள்" என்று சொல்லி மாணவர்கள் மத்தியில் புரட்சியை ஏற்படுத்தியவர்.

● நாட்டுக்கு சேவை செய்ய வேண்டும் என்பதற்காக பெருந்தலைவர் காமராஜர் திருமணம் செய்துகொள்ள மறுத்தார். அதுபோல திருமணம் செய்தால் அறிவியல் வளர்ச்சிப் பணிகளில் முழுமையாக ஈடுபட முடியாது என்று திருமணம் செய்ய மறுத்தார் அப்துல்கலாம்.

● இவரது வாழ்க்கையின் ஒவ்வொரு விநாடியும் காந்திய கொள்கைகளைப் பிரதிபலித்தது.

● ஜனாதிபதியாக இருப்பவர்கள் இப்படித்தான் இருக்க வேண்டும் என்று எழுதப்படாத சில மரபுகள் இருந்தன. பதவியேற்ற முதல் நாளே அந்த மரபுகளை உடைத்தவர் அப்துல்கலாம்.

● அப்துல்கலாம் தன்னடக்கத்தின் உச்சமாகத் திகழ்ந்தவர். அவரைப் போன்று பணிவான மனிதர்களை காண்பது அரிது என்று உலகத் தலைவர்களே வியந்துள்ளனர்.

● நான் என்ற அகந்தை எண்ணம் அவரிடம் துளி அளவு கூட இருந்ததில்லை. சிறு வயது முதல் வாழ்நாளின் இறுதி வரை அமைதியானவர், அன்பானவர் என்ற பாதையில் இருந்து அவர் விலகாமலே இருந்தார்.

● அப்துல்கலாம் மிகப்பெரிய உறவு, நட்பு வட்டாரத்தைக் கொண்டவர். ஆனால் தனது அதிகாரத்தை தவறாகப் பயன்படுத்தி அவர் யார் ஒருவருக்கும், எதற்கும் சிபாரிசு செய்ததே இல்லை.

● ஜனாதிபதியாக பதவி வகித்த காலத்தில் கூட, அந்த மாதச் சம்பளத்தை வாங்கி அதில் ஒரு பகுதியை தன் குடும்பத்துக்கு அனுப்புவதை அப்துல்கலாம் வழக்கத்தில் வைத்திருந்தார்.

● அப்துல்கலாமின் நெருங்கிய உறவினர்கள் எல்லாம் இன்றும் நடுத்தர வர்க்க வாசிகளாகவே உள்ளனர். அப்துல்கலாமின் கற்றைபடாத நேர்மைக்கு இது ஒன்றே சிறந்த எடுத்துக்காட்டு.

● அனைத்து வளங்களும் நிறைந்த இந்தியா 2020 ஆம் ஆண்டில் உலகின் வளர்ந்த 5 நாடுகளில் ஒன்றாகத் திகழும் என்று பல ஆண்டுகளுக்கு முன்பே சொல்லி இந்தியர்களிடம் உற்சாகத்தை ஏற்படுத்தினார்.

● சிறு வயதில் கிணற்றுக்குள் கலாம் கல்லைத் தூக்கிப் போட்டார். அதில் இருந்து குமிழ், குமிழாக வந்தது. அது ஏன் வருகிறது என்று அப்துல்கலாம் கேட்டார். அவர் கேட்ட முதல் அறிவியல் கேள்வி இதுதான்.

● அப்துல்கலாமுக்கு மிகுந்த இசைஞானம் உண்டு. தியாகராஜ கீர்த்தனைகளில் சில கிருதிகளை அவர் தெரிந்து வைத்திருந்தார்.

● 1998 ஆம் ஆண்டு மே மாதம் 11ஆம் திகதி பொக்ரானில் இந்தியா அணுகுண்டு சோதனை நடத்தி உலக அரங்கில் தன்னை வல்லரசாக அறிவித்தது. இதற்கு அடித்தளம் அமைத்தவர் அப்துல்கலாம் தான்.

● 1958 இல் மத்திய அரசின் பாதுகாப்புத் துறையில் அப்துல்கலாம் வேலைக்குச் சேர்ந்த போது அவருக்கு மாதச் சம்பளமாக ரூ.250 வழங்கப்பட்டது.

● இந்திய இராணுவத்திலுள்ள திரிசூல், அக்னி, பிருத்வி, நாக், ஆகாஷ் ஆகிய ஏவுகணைகள் அப்துல்கலாம் திட்ட இயக்குநராக இருந்த போது வடிவமைக்கப்பட்டு வந்தவையாகும்.

● போலியோ நோயாளிகளுக்கான எடை குறைந்த ஊன்றுகோல் மற்றும் இருதய நோயாளிகளுக்கான எடை குறைந்த ஸ்டெண்ட் கருவி ஆகியவை இவர் கண்டுபிடித்தவையாகும். அந்த ஸ்டெண்டுக்கு "கலாம் ஸ்டெண்டு" என்றே பெயராகும்.

● இந்திய பாதுகாப்புத்துறையின் ஆய்வுக்கு முதலில் வெளிநாட்டு கருவிகள், பொருட்கள் பயன்படுத்தப்பட்டன. அவற்றை நிறுத்தி விட்டு முழுக்க, முழுக்க உள்நாட்டு பொருட்கள் மூலம் ஆய்வுப் பணிகளை அப்துல் கலாம் செய்ய வைத்தார்.

● அப்துல்கலாம் தினமும் திருக்குரான் படிக்கத் தவறியதில்லை. அதில் அவருக்கு பிடித்த வரிகள் எவை தெரியுமா? "இறைவா! உன்னையே நாங்கள் வணங்குகிறோம். உன்னிடமே நாங்கள் உதவியும் தேடுகிறோம்" எனும் வரிகளாகும். இந்த வரிகள், என்னுடைய எல்லா சோதனை நாட்களிலும் என்னை கரை சேர்த்த வைர வரிகள் என்று அப்துல் கலாம் குறிப்பிட்டுள்ளார்.




❖1519 - மகலனின் ஐந்து கப்பல்கள் உலகைச் சுற்றிவர செவில் நகரில் இருந்து புறப்பட்டன.

❖1741 - குளச்சல் போர்: திருவிதாங்கூர் மன்னர் மார்த்தாண்ட வர்மர் டச்சுக் கிழக்கிந்தியக் கம்பனியுடனான போரில் டச்சுத் தளபதி இயுஸ்ட்டாச்சியஸ் டி லனோய் என்பவனைச் சிறைப்பிடித்தார்.

❖1776 - அமெரிக்காவின் விடுதலைப் பிரகடன செய்தி லண்டனைப் போய்ச் சேர்ந்தது.

❖1792 - பிரெஞ்சுப் புரட்சி: பாரிசில் தீவிரவாதிகள் ரிலெரீஸ் அரண்மனையை முற்றுகையிட்டு பதினாறாம் லூயி மன்னனைக் கைது செய்தனர்.

❖1809 - குவிட்டோ (தற்போதைய ஈக்குவாடோரின் தலைநகர்) பிரான்சிடம் இருந்து விடுதலையை அறிவித்தது.

❖1948 - ஜவஹர்லால் நேரு இந்திய அணுசக்திப் பேரவையைத் (Atomic Energy Commission) துவக்கி வைத்தார்.

❖1990 - மகெலன் விண்கலம் வெள்ளிக் கோளை அடைந்தது.

❖2006 - திருகோணமலையில் சேருவிலப் பகுதியில் தொடர்ச்சியான குண்டுவீச்சினால் 50 பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.

**பிறப்புகள்**

❖1860 - விஷ்ணு நாராயண் பாத்கண்டே, இந்துஸ்தானி இசைக்கலைஞர் (இ. 1936)

❖1894 - வி.வி.கிரி, இந்தியாவின் 4 ஆவது குடியரசுத் தலைவர் (இ. 1980)

❖1916 - சாவி, தமிழக எழுத்தாளர், இதழாசிரியர் (இ. 2001)

❖1926 - கண்பத்ராவ் தேஷ்முக், இந்திய அரசியல்வாதி

❖1927 - வைணு பாப்பு, இந்திய வானியலாளர் (இ. 1982)

❖1930 - க. துரைரத்தினம், இலங்கைத் தமிழ் அரசியல்வாதி (இ. 1995)

❖1944 - எம்.ஏ.நுஃமான், ஈழத்து எழுத்தாளர், கல்வியாளர்

❖1963 - பூலான் தேவி, இந்திய அரசியல்வாதி (இ. 2001)

**இறப்புகள்**

❖258 - புனித லாரன்சு, எசுப்பானிய-இத்தாலியப் புனிதர் (பி. 225)

❖1790 - பிலிப்பு தெ மெல்லோ, இலங்கைத் தமிழறிஞர் (பி. 1723)

❖2011 - பி. சி. அலெக்சாண்டர், இந்திய அரசியல்வாதி (பி. 1921)

**சிறப்பு நாள்**

❖விடுதலை நாள் (எக்குவாடோர், 1809)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கொடிகாமம் | கிளிநொச்சி | நெல்லியடி |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 80 | 80 | 80 | 120 | 100 |
| உருளைக்கிழங்கு | 120 | 100 | 90 | 85 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 250 | 220 | 220 | 200 | 300 | 200 |
| தக்காளி | 80 | 100 | 80 | 60 | 100 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 50 | 50 | 40 | 40 | 40 |
| கோவா | 160 | 140 | 160 | 90 | 150 | 160 |
| கரட் | 250 | 340 | 240 | 220 | 400 | 400 |
| பூசணி | 80 | 80 | 80 | 50 | 80 | 100 |
| புடோல் | 80 | 70 | 60 | 60 | 80 | 100 |
| வாழைக்காய் | 100 | 90 | 80 | 70 | 80 | 100 |
| சின்ன வெங்காயம் | 120 | 120 | 120 | 100 | 120 | 160 |
| பெரிய வெங்காயம் | 120 | 110 | 110 | 95 | 120 | 120 |
| பாகற்காய் | 250 | 300 | 200 | 180 | 240 | 200 |
| வெண்டிக்காய் | 80 | 40 | 20 | 60 | 80 | 50 |
| கருணைக் கிழங்கு | 100 | 90 | 100 | 80 | 120 | 100 |
| பயற்றங்காய் | 200 | 200 | 250 | 120 | 140 | 100 |
| லீக்ஸ் | 150 | 140 | 120 | 100 | 120 | 100 |
| பீற்றூட் | 150 | 90 | 100 | 80 | 120 | 120 |
| கறிமிளகாய் | 180 | 200 | 250 | 200 | 200 | 200 |
| முருங்கைக்காய் | 80 | 70 | 60 | 50 | 80 | 30 |
| போஞ்சி | 300 | 250 | 200 | 220 | 240 | 250 |
| கத்தரிதம்புள்ள | 60 | 70 | — | 50 | 100 | 50 |
| கீரை - 1பிடி | 30 | 25 | 40 | 30 | 30 | 10 |
| தேசிக்காய் | 60 | 40 | 50 | 40 | 80 | 20 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 50 | 40 | 50 | 30-50 | 30-60 |
| இராசவள்ளி | 150 | 160 | 160 | 130 | 200 | 200 |
| வெங்காயப்பூ | 150 | 100 | 100 | 90 | 200 | 100 |
| முள்ளங்கி | 30 | 50 | 40 | 30 | 80 | 100 |
| பொன்னாங்காணி | 40 | 30 | 50 | 10 | 30 | 40 |
| வல்லாரை | 15 | 50 | 20 | 10 | 20 | 20 |
| ஈரப்பலா | 40 | 70 | 60 | 130 | 80 | 30 |

மாற்றம் ஒன்றுதான் மாறாதது.

~ யாரோ

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## 20ஆவது திருத்த சட்டமூலம் எங்களுக்காக வருகிறதாம்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கோரிக்கைகளை நிறைவேற்ற இருபதாவது திருத்தச் சட்டமூலத்தை விரைவில் கொண்டுவர இருப்பதாக, அமைச்சரவைப் பேச்சாளர் ராஜித சேனாரத்ன கூறியுள்ளார்.

அமைச்சரவைப் பேச்சாளர் ராஜித சேனாரத்ன ஒரு நல்ல மனிதர். தமிழ் மக்களின் பிரச்சினைகளை உணர்ந்து கொண்ட சிங்கள இனத்தவர் என்பதில் இருவேறு கருத்துக்கிடமில்லை. ஆனால் அவர் இங்கு கூறிய விடயம் பற்றி நாம் ஆழ்ந்து சிந்திப்பதுதான் கட்டாயமானது.

அதாவது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கோரிக்கைகளை நிறைவேற்றும் வகையில், இருபதாவது திருத்த சட்டமூலத்தை விரைவில் கொண்டு வரவுள்ளோம் என்பது அவரின் அறிவிப்பு.

இங்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கோரிக்கை என்ன? என்பதை அமைச்சர் ராஜித தெளிவுபடுத்திக் கூறியபின், 20ஆவது திருத்த சட்டமூலம் வர இருக்கிறது என்று கூறியிருந்தால் விளக்கத்தை அறிய முடிந்திருக்கும்.

மாறாக 20ஆவது திருத்த சட்டமூலத்தைக் கொண்டுவர இருக்கின்றோம். அவ்வாறு அதனைக் கொண்டு வருவது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கோரிக்கையை நிறைவேற்றுவதற்கு என்று கூறுவதற்குள்,

அரசியலமைப்புச் சீர்திருத்தம் அடிபட்டுப் போகிறதா என்ற கேள்வி எழவே செய்கிறது.

ஐ.நா மனித உரிமைகள் பேரவை இலங்கை அரசுக்கு விதித்த நிபந்தனைகள் இன்னமும் நிறைவேற்றப்படவில்லை.

குறித்த நிபந்தனைகளை நிறைவேற்ற காலஅவகாசம் கேட்ட இலங்கை அரசுக்கு அந்தக் காலஅவகாசத்தை வழங்குமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கோரிக்கை விட்டிருந்தது.

அதன்அடிப்படையில் ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் நிபந்தனைகளை நிறைவேற்றுவதற்கு மேலும் இரண்டு வருட கால அவகாசம் இலங்கை அரசுக்கு வழங்கப்பட்டது.

ஆக, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கோரிக்கை என்று பொதுப்படையாக அமைச்சர் ராஜித கூறுவதற்குள்,

இலங்கை அரசாங்கத்துக்கு கால அவகாசம் வழங்க வேண்டும் என்ற கூட்டமைப்பின் கோரிக்கையும் உள்ளடங்குமா? என்ற ஐயம் ஏற்படும்.

எதுஎவ்வாறாயினும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கோரிக்கையை நிறைவேற்றுவதற்காக இருபதாவது திருத்த சட்டமூலம் கொண்டு வரப்படுகிறது என்பதற்குள் தமிழ் மக்களை இன்னொரு தடவை ஏமாற்றுகின்ற நாடகத்தை இலங்கை அரசு அரங்கேற்றப் போகிறது என்பதுதான் உண்மை.

இவ்வாறு 20ஆவது திருத்த சட்டமூலம் தமிழ் மக்களுக்கு ஒரு பெரும் வரப்பிரசாதம் என்பதுபோல காட்டப்பட்டு, அதன்மூலம் தமிழ் மக்களை ஏமாற்றி அரசியலமைப்புச் சீர்திருத்தமும் இல்லை அரசியல் தீர்வுமில்லை என்பது உறுதிபடப் போகிறது.

ஆக, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ் மக்கள் சார்ந்து உரியவாறான உரிமைகளை கேட்கவில்லை என்று தமிழ் மக்கள் குறைபடுகின்ற நேரத்தில் கூட்டமைப்பின் கோரிக்கையை நிறைவேற்ற 20ஆவது திருத்த சட்டமூலம் விரைவில் வரவிருக்கிறது என்பதற்குள் இருதரப்பும் கூட்டுச் சேர்ந்து நடத்தும் திருகுதாளம் தமிழ் மக்களை அதலபாதாளத்தில் விழுத்தப் போகிறது என்பதுதான் நிறுதிட்டமான உண்மை.

# அமைச்சர் விடயம் தொடர்பில் ஆராய்பவர்கள் ஏன் மக்கள் பிரச்சினை தொடர்பில் ஆராயவில்லை

## மாகாண சபை எதிர்க்கட்சி உறுப்பினர் கேள்வி

அமைச்சர் விடயம் தொடர்பில் ஆழமாக சட்ட நுணுக்கங்களை ஆராய்பவர்கள் பொதுமக்களின் பிரச்சினை தொடர்பில் ஏன் இவ்வாறு நுணுக்கமாக ஆராயவில்லை என வடக்கு மாகாண சபை எதிர்க்கட்சி உறுப்பினர் தவநாதன் கேள்விஎழுப்பியுள்ளார்.

வடக்கு மாகாண சபையின் 129ஆவது அமர்வு நேற்று மாகாண சபை சபா மண்டபத்தில் நடைபெற்றது. அதில் வடக்கு அமைச்சர் நியமனம் தொடர்பாக வாக்குவாதம் இடம்பெற்றது. அதன போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்

வடக்கு மாகாண அமைச்சர் நியமன விடயம் முடிவில்லாத விடயமாகப் போகிறது. இதற்கு தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் அல்லது தமிழரசுக் கட்சியின் தலைவர்தான் பொறுப்புகூறவேண்டும்

ஆளும்கட்சியினரே தாம் தெரிவு செய்த முதலமைச்சரை பற்றி குறை கூறுகிறார்கள். நீதிமன்ற விடயங்களை நீதிமன்றில் விட்டுவிட்டு மக்களுக்கான விடயங்களை நாம் பார்க்க வேண்டும். ஆளும கட்சி அமைச்சசபைகள் ஊழல் குற்றச்சாட்டு என குழு நியமித்தபோதே இந்த அவை தார்மீக தகுதியை இழந்து விட்டது. தொடர்ந்து இது தொடர்பாக வாதாடாமல் நீதிமன்ற தீர்ப்பு வரும் வரை இந்த சபையை ஒத்திவையுங்கள். இது மக்களின் பணம் அதையாவது மீதப்படுத்துங்கள்.

வரலாற்றில் இது ஒரு பதிவாக இருக்கும். எமது போராடடத்துக்கும் இழப்புக்களை சந்தித்த மக்களுக்கும் கிடைத்த சொறப வரப்பிரசாதத்தையும் நாமே போட்டுடைத்தோம் என்ற வரலாற்று தவறை நாம் செய்யப்போகிறோம்.

எமகது வெளியில் இருந்து எதிரிகள் வரவில்லை எங்களுக்குள்ளேயே பிரச்சினைகளை உருவாக்க பலர் உள்ளார்கள்.

சட்டம் படித்தவர்களும் சட்டம அறிந்தவர்களும் இந்த அவையில் தொடர்ச்சியாக அமைச்சர் பிரச்சினையை பேசிக் கொண்டு இருக்கிறார்கள். சட்ட நுணுக்கங்களை ஆராயகிறார்கள்.

மக்களின் நலன்களுக்கு இவ்வளவு நுட்பமாக ஏன் பேசவில்லை. மக்களின் பிரச்சினைக்காக எந்த சட்டத்தை எடுத்து நுணுக்கமாக இதுவரை இந்த அவையில் ஆராய்ந்தோம்? எனவே இந்த அவையை தீர்வு வரும வரை ஒத்திவையுங்கள் என தெரிவித்தார். (ம-9)

## எதிர்க்கட்சி தலைவரை சபாநாயகர் தீர்மானிக்க வேண்டும் – மகிந்த

எதிர்க் கட்சித் தலைவர் யார் என்பதை சபாநாயகர் தீர்மானிக்க வேண்டும் எனவும், அதனை இன்னுமொரு கட்சியிடம் கேட்க வேண்டியதில்லையெனவும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

சபாநாயகர் இதற்குத் தீர்வொன்றை வழங்க தெரிந்திருக்க வேண்டும். சபாநாயகருக்கு இதற்கான சக்தி இருக்கும் என நான் நினைகின்றேன் எனவும் மகிந்த ராஜபக்ஷ எம்.பி. மேலும் குறிப்பிட்டார்.

அபே கம வளாகத்தில் நேற்று இடம்பெற்றநிகழ்வொன்றில் கலந்து கொண்டதன் பின்னர் ஊடகங்களிடம் கருதது்த் தெரிவிக்கையில் அவர் இதனைக் கூறினார். (ம)

## 2 மாணவர்களைத் தாக்கிய குற்றச்சாட்டில் ஆசிரியர் கைது

பலாங்கொடை நகரிலுள்ள தனியார் வகுப்பின் உரிமையாளரான ஆசிரியர் ஒருவர் இரண்டு மாணவர்களைத் தாக்கியதன் காரணமாக, கைதுசெய்யப்பட்டுள்ளாரென பலாங்கொடை பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த 7ஆம் திகதி இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

16 வயது மாணவர்கள் இருவரே இவ்வாறு தாக்குதலுக்கு இலக்காகியுள்ளதாகவும், குறித்த தனியார் வகுப்பறை வளாகத்தில் வெற்றிலை எச்சில் காணப்பட்டதாகத் தெரிவித்தே மாணவர்கள் இருவரையும் ஆசிரியர் தாக்கியுள்ளார.

இந்தத் தாக்குதலையடுத்து மாணவர்கள் இருவரும் பலாங்கொடை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும், கைதுசெய்யப்பட்ட ஆசிரியர் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (இ-7)



## ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமியின் சிந்தனையில் இருந்து

### மனதில் இடம்பிடித்தல் மற்றும் தன்னை வெளிப்படுத்தல்

மறறவாகள நினைவில உஙகளைப பதிபபதறகும உஙகள எணணதலதை வெளிபபடுததுவதறகும நஙகள முயற்சி செய்யாதீர்கள்.

உங்கள் எண்ணத்தை வெளிப்படுத்த நீங்கள் எடுககும முயறசி ஒரு தடையே. மறறவாகள உளளததையும் உணர்ச்சியையும் கவர நீங்கள் எடுத்துக் கொள்ளும் முயற்சி வீணாகிறது.

அவ்வாறு கவர நீங்கள் முயற்சி செய்யாத போது உங்கள் எண்ணத்தின் வெளிப்பாடு இயற்கையாக வருகிறது.

நீங்கள் ஆன்மாவிலிருந்து வரும்போது உங்களுடைய வெளிபபடுததும திறன முழுமையாகவும அதனால உண்டாகும் நினைவுப்பதிப்பு காலங்காலத்திற்கும் நிலைக்கிறது.

பல சமயங்களில் உங்களுடைய வெளிப்படுத்தும் திறனின் மேலும் உங்கள் நினைவில் பதித்துக் கொள்வதன் மேலும் நீங்கள் கட்டுப்பாடு கொள்ள முடிவதில்லை. உங்களுடைய வெளிப்பாடுகளையும் நினைவுப் பதிவுகளையும் தேர்ந்தெடுப்பதுதான் புத்திசாலித்தனம். நினைவுப்பதிவுகள் நல்லவையோ கெட்டவையோ அவை நிலையாக இல்லாமலிருக்கும் போதுதான் ஞானம் பிறக்கிறது. கனவுகள், தியானம் மூலமாக நம்முடைய நினைவுப்பதிவுகளை விடுவிக்க, இயற்கை நம்மில் உட்கட்டமைப்பை அமைத்திருக்கிறது.

மனதில் உள்ள பல நினைவுப் பதிவுகள்

குழப்பம், மனதைத் திசை திருப்பும் தன்மை, ஒரு முனைப்பாட்டின் குறைபாடு இவற்றின் விளைவாக மனதின் ஒழுங்கு குலைவு ஆகியவற்றுக்குக் காரணமாகின்றன.

அளவுக்கு மீறிய வெளிப்பாடு, உங்களுடைய ஆழம், உங்களுடைய அறிவு, ஆன்மாவின் அமைதி ஆகியவற்றை இழக்கச் செய்கிறது.

நினைவுப் பதிவுகளை தியானம் அழிக்கிறது. உங்களுடைய வெளிப்பாட்டில் உங்களைத் தேர்ந்தவராக்குகிறது.

## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

### ஏற்றுவதன் பயன்?

இந்து சமயத்தில் தீபம் ஏற்றுதல் என்பது இறை வழிபாட்டில் முக்கியமான பங்கு வகிக்கின்றது.

தீபங்களை நாம் ஏற்றுவதால் தெய்வங்கள் நம் கர்ம வினைகளை நீக்கி கோரிய பலன்களை தருகின்றன.

எட்டு திசைகளில் தீபங்களை ஏற்றுவதனால் என்ன பயன் என்பதை பார்ப்போம்.

**கிழக்கு திசை**

இததிசையை நோககி தபம ஏறறினால வாழவின துன்பங்கள் நீங்கும். கிரக தோசம் நீங்கி லட்சுமி கடாட்சம கிட்டும். வீடு இல்லாதவர்கள் வீடு வாங்குவார்கள்.

**மேற்கு திசை**

இததிசையில தபம ஏறற பணததால வநத பகைமை வளராமல் தீரும். கடன் தொல்லை நீங்கும்.

**வடக்குத் திசை**

இத்திசையில் தீபம் ஏற்றினால் நல்ல காரியங்களில் வெற்றி பெறலாம். மாங்கல்யத்தைப் பேணி மதிக்காத பாவம் நீங்கும். திருமணம் கைகூடும்.

**தெற்கு திசை**

வட்டில இததிசை நோககி தபம ஏறறக கூடாது. மரண பயம் உண்டாக்கும். வீட்டில் யாராவது இறந்து விட்டால் வசதி இல்லதவர்கள் கோவிலில் தெற்கு நோக்கி தீபம் ஏற்றி இறந்தவர்களுக்கு நல்ல அனுக்கிரகத்தைப் பெற்றுத் தரலாம். (தொடரும்)

## இஸ்லாம் ஆன்மீக சிந்தனை

### சாந்தகுணம் வேண்டும்

✦ எவர் ஒருவர் இறைவனிடத்தில் தேவையானதை கேட்கவில்லையோ அவர்மீது இறைவன் கோபம் அடைகினறான.

✦ பிரார்த்தனையைத் தவிர வேறு எந்த செயலாலும் விதியை மாற்றிக் கொள்ள முடியாது.

✦ நற்செயல்களைத் தவிர வேறு எந்தச் செயலாலும் ஆயுளை நீடிக்கச் செய்ய முடியாது.

✦ எவர் தமது குடும்பத்தின் நன்மையைக் கருதி செலவு செய்கின்றாரோ. அவருக்கு அல்லாஹ் தர்மத்தின் நன்மையை அளிக்கின்றான்.

✦ அடிமை, ஏழை ஆகியவர்களுக்கு தானம் அளிப்பதை விட அதிகமான நன்மை, மனைவிக்குச் செலவு செய்வதில் உண்டு.

✦ முதலில முககியமாக நமது குடுமபததினருககு செலவு செய்வது நம் கடமை.

✦ ஆசைகளையும் தம் தேவைகளையும் குறைத்துக் கொண்டவர்களே சுதந்திரமானவர்கள்.

✦ வாங்கும் போதும், விற்கும்போதும் சாந்த குணத்தை கடைபிடிப்பவர் மீது அல்லாஹ்வின் கருணை உணடாகடடும.

# பாடசாலைகளுக்கிடையிலான கிரிக்கெட் கொக்குவில் இந்துக் கல்லூரி வெற்றி



J/Kokuvil Hindu College Cricket - "Under-15"

யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான 15 வயதிற்குட்பட்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் காலிறுதிப் போட்டியில் சென்.பற்றிக்ஸ் அணியை வென்றது கொக்குவில் இந்துக்கல்லூரி அணி.

நேற்று முன்தினம் நடைபெற்ற இப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய சென்.பற்றிக்ஸ் அணி அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 53 ஓட்டங்கள் பெற்றுக் கொண்டது.

துடுப்பாட்டத்தில் அதிகபட்சமாக திவிகரன் 21 ஓட்டங்கள் பெற்றுக் கொடுத்தார்.

பந்து வீச்சில் கௌதமன் 4, தனோஜ் 3, அர்ஜன் 2 விக்கெட்டுகளைக் கைப்பற்றினர். 54 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய கொக்குவில் இந்துக் கல்லூரி அணி நான்கு விக்கெட்டுகள் இழந்து வெற்றி இலக்கை அடைந்து 6 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

துடுப்பாட்டத்தில் கௌதமன் 24 ஓட்டங்கள் பெற்றுக் கொடுத்தார்.

பந்துவீச்சில் டெஸ்வின் 2 விக்கெட்டுகளைக் கைப்பற்றினார். (கு)

# கொக்குவில் பொற்பதியை வீழ்த்தி சம்பியனானது கல்வியங்காடு ஜி.பி.எஸ்



அராலி களுவாத்துறை விளையாட்டுக்கழகம் வட மாகாண ரீதியாக நடத்திய அணிக்கு ஆறுபேர் ஐந்து ஓவர்கள் கொண்ட துடுப் பாட்டத்தொடரின் சம்பியனாக ஜி.பி.எஸ். அணி வெற்றி வாகை சூடியது. கடந்த ஞாயிற்றுக்கிழமை களுவாத்துறை மைதானத்தில் இடம் பெற்ற இறுதிப் போட்டியில் கொக்குவில் பொற்பதி மற்றும் கல்வியங்காடு ஜி.பி. எஸ்.அணிகள் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பொற்பதி முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாட களமிறங்கிய ஜி.பி.எஸ். அணி ஆட்டத்தின் முதல் ஓவரிலேயே முதலாவது விக்கெட்டை பறிகொடுத்தது.

எனினும் பின்னர் தாருகாஷ் மற்றும் கண் ணாவின் அதிரடியான துடுப் ப்ாட்டம் மூலம் வேகமாக ஓட்டங்களை குவித்தது. தாரு காஷ் தனது அணிக்காக அதிகபட்சமாக 20 ஓட்டங் களை குவித்து ஆட்டமிழந் தார். 5 ஓவர்கள் நிறைவில் ஜி.பி. எஸ். அணி 3 இலக்கு களை இழந்து 51 ஓட்டங் களைப் பெற்றுக் கொண்டது. 52 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய பொற்பதி ஆரம்பம் முதலேஜி.பி.எஸ். அணியின் பந்துவீச்சை சமாளிக்க முடியாமல் ஓட்டங்களைப்பெற திணறினார்கள்.

இறுதியாக பொற்பதி அணி அனைத்து இலக்குகளையும் இழந்து 31 ஓட்டங்களை மாத்திரம் பெற்று 20 ஓட்டங்களால் தோல்வி அடைந்தது. ஜி.பி.எஸ். அணி சார்பாக தாருகாஷ் மற்றும் கிருபாகரன் தலா 2 விக்கெட்டுளை வீழ்த்தினர். இறுதிப் போட்டியின் நாயகனாக அணிக்காக துடுப்பாட்டத்தில் 20 ஓட்டங்களையும் பந்து வீச்சில் எதுவித ஓட்டமும் விட்டுக் கொடுக்காமல் 2 இலக்குகளையும் வீழ்த்திய தாருகாஷ் தெரிவு செய்யப்பட்டார்.

இவரே இத் தொடரின் தொடர் நாயகனாகவும் தெரிவு செய்யப்பட்டார். இறுதிப் போட்டியில் பாராளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் கலந்து சிறப்பித்தது டன் வெற்றிக் கேடயங்களையும் வழங்கி வைத்தார். (கு)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

# ஜொலிஸ்ரார் வெற்றிக் கிண்ணம் ஏ.பி. அணி காலிறுதிக்குத் தெரிவு



ஜொலிஸ்ரார் வெற்றிக் கிண்ணத்திற்காக ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழகம் வருடாவருடம் நடத்தும் மட்டுப்படுத்தப்பட்ட 30 ஓவர்களைக் கொண்ட துடுப்பாட்ட சுற்றுப் போட்டியின் 2 ஆவது சுற்றில் 17 ஆவது போட்டி கடந்த வாரம் கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற போது ஏ.பி. அணி டிறைற்றோன் அணியை 96 ஓட்டங்களால் வெற்றி பெற்று கால் இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றுள்ளது. முதலில் துடுப்பெடுத்தாடிய ஏ.பி. அணி 29.1 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 179 ஓட்டங்களைப் பெற்றது. லிங்கநாதன்-10, ஞானநந்தன்-44, ராகுலன்-20, உத்தமன்-15, சிலோஜன்-29, தனுலக்ஸன்-14 ஓட்டங்களைப் பெற்றனர். களத்தடுப்பில் டிறைற்றோன் அணியைச் சேர்ந்த நந்தகுமார்-2, ரவிராஜ்-3, உதயசாந்-1, டெஸ்மன்-1, உமாசுதன்-1 இலக்கினை கைப்பற்றினர். பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய டிறைற்றோன் அணி 18.5 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 83 ஓட்டங்களைப் பெற்றது. ரவிராஜ்-16, உதயசாந்-10 ஓட்டங்களைப் பெற்றனர். களத்தடுப்பில் ஏ.பி.அணி சார்பாக சிலோஜன்-5, பார்த்தீபன்-1, உத்தமன்-1, லிங்கம்-2, டிலூயன் 1 இலக்கினை கைப்பற்றினர். இப்போட்டி யின் மூலம் யாழ்.சென்றல் விளையாட்டுக்கழகம் 2010 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து 9 வருடங்களாக நடத்தி வரும் யாழ்.நகரில் சிறந்த கழக அணித்தெரிவு நிகழ்விற்கு (Rating) ஏ.பி. அணி 6.75 புள்ளிகளையும் டிறைற்றோன் அணி 1.83 புள்ளிகளையும் பெற்றுக் கொண்டன. (க)


**அன்பு வாசகர்களே!**

உங்கள் பிரதேச விளையாட்டுச் செய்திகளை
Valampurisp@gmail.com அல்லது 076 636 3378
என்னும் Viber இலக்கத்துக்கு அனுப்பி வையுங்கள்.

உங்களை உலகறியச் செய்ய நாம் தயார்




இலங்கை கராத்தே சம்மேளனத்தினால் நடத்தப்பட்ட வடமாகாணத்திற்கான கராத்தே சுற்றுப்போட்டி கடந்த 14,15 ஆம் திகதிகளில் யாழ்.மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது. இதில் பங்கு கொண்ட சாவகச்சேரி இந்துக்கல்லூரி மாணவர்கள் 9 தங்கம், 7 வெள்ளி, 16 வெண்கலம் பெற்று சாதனை படைத்துள்ளார்கள். வெற்றியீட்டிய மாணவர்களுடன் அதிபர், பொறுப்பாசிரியர்கள் மற்றும் கராத்தேபயிற்சி ஆசிரியர் ஆகியோரையும் படத்தில் காணலாம். (கு)

# 17 வயது கால்பந்தாட்டம் மகுடம் சூடியது றேஞ்சர்ஸ்



பொலிகை பாரதி விளையாட்டுக்கழகத்தால் நடத்தப்பட்ட 17 வயதுக்குட்பட்ட அணிகளுக்கு இடையிலானகால் பந்தாட்டத் தொடரில் கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் அணி கிண்ணம் வென்றது.

பாரதி விளையாட்டுக் கழக மைதானத்தில் இறுதியாட்டம் நடைபெற்றது.

சுஜாஸ் தலைமையிலான றேஞ்சர்ஸ் அணியை எதிர்த்து திசாந் தலைமையிலான நவிண்டில் கலைமதி அணி மோதியது.

ஆரம்பம் முதல் விறுவிறுப்பாக இடம்பெற்ற இறுதி ஆட்டத்தில் இரு அணி வீரர்களும் சிறப்பான ஆட்டத்தினை வெளிப்படுத்தினர்.

கோல்கள் இல்லாமல் முடிவடைந்தது முதல் பாதி ஆட்டம்.

இரண்டாம் பாதி ஆரம்பித்த 10 ஆவது நிமிடத்தில் றேஞ்சர்ஸின் சார்பில் லக்சிகன் முதலாவது கோலைப் பதிவு செய்தார்.

அடுத்த சில நிமிடங்களில் அதாவது ஆட்டத்தின் 13 ஆவது நிமிடத்தில் மற்றொரு கோலையும் பதிவு செய்து 2:0 என்ற கோல் கணக்கில் சம்பியனானது. றேஞ்சர்ஸ் ஆட்ட நாயகனாக லக்சிகன் தெரிவு செய்யப்பட்டார். (க)

## வேலை நிறுத்த போராட்டம்...

யில் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் அனைத்து மக்களும் சரிசமமான அளவில் வினைத்திறனான வைத்திய சேவையை வழங்க ஒவ்வொரு வருடமும் நடைமுறையில் உள்ள வைத்தியர்களின் இடமாற்றத்தினை சுகாதார அமைச்சுடன் இணைந்து அமுல்படுத்தி வருகின்றது.

இவ்வாறு வழங்கப்படும் தரமான சுகாதார சேவைக்கு குந்தகமாக பகிரங்க சேவை ஆணைக்குழுவினால் வழங்கப்படும் இடமாற்றங்களை உரிய முறையில் நடைமுறைப்படுத்தாமல் முட்டுக்கட்டையாக இருந்ததோடு மட்டுமல்லாமல் உயர் அதிகாரிகளின் உத்தரவுகளை உதாசீனம் செய்தமைக்கு எதிராக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை மருத்துவ அத்தியட்சகருக்கு எதிரான ஒழுக்காற்று நடவடிக்கைகளை துரிதப்படுத்த வேண்டும் எனவும் வடமாகாண சுகாதார அமைச்சரிடமும் சுகாதார அமைச்சின் செயலாளரிடமும் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கமானது கோரியிருந்தமை யாவரும் அறிந்த ஓர் விடயமாகும்.

வடமாகாண சுகாதார அமைச்சரின் நேரடி தலையீட்டின் மூலம் தெல்லிப்பளை புற்றுநோய் வைத்தியசாலைக்கு பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் இருந்து 2015 ஆண்டு இடமாற்றம் வழங்கப்பட்டும் நடைமுறைப்படுத்தாமல் கடந்த மூன்று வருடமாக இழுத்தடிக்கப்பட்ட இடமாற்றம் இன்று (நேற்று) உடனடியாக அமுலாக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் முன்னெடுக்கும் வைத்தியர்களின் இடமாற்றத்திற்கு ஒத்துழைப்பு வழங்காமல் சங்கத்திற்கு களங்கம் விளைவிக்கும் நோக்குடன் மக்களை பிழையான வழியில் திசை திருப்பும் அதிகாரிகள் மீது கடும் ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

2015-ம் ஆண்டு போன்று மற்றைய ஆண்டு இடமாற்றம் ஆனது அடுத்தடுத்த மாதங்களில் செயற்படுத்த எல்லோரும் இணைந்து செயற்படவேண்டும் என்று கேட்டுகொள்கின்றோம். எமது கோரிக்கைகளில் ஒன்றான பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை மருத்துவ அத்தியட்சகர் மீதான விசாரணை குறுகிய காலத்தில் நடைபெற வேண்டும் எனவும் இல்லை எனில் மீண்டும் நாம் வேலை நிறுத்த போராட்டம் மேற்கொள்ள வேண்டி வரும் என்றும் தெரிவிக்கின்றோம்.

இன்றைய தினம் (நேற்று) மட்டும் யாழ் மாவட்டத்தில் 4 வைத்தியர்களின் இடமாற்றங்கள் நடைபெற்றுள்ளன. இதனால் புற்றுநோய் வைத்தியசாலை மட்டுமன்றி பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையின் இரத்த வங்கிக்கும் வைத்தியர்கள் இன்று (நேற்று) அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். இன்று (நேற்று) விடுவிக்கப்பட்ட வைத்தியர்கள் நாளை (இன்று) புற்றுநோய் வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்படுவர் என யாழ்.பிராந்திய சுகாதார சேவை பணிப்பாளர் வைத்திய கலாநிதி நந்தகுமரன் தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து எமது வேலை நிறுத்தப போராட்டம் தற்காலிகமாக ஒத்திவைக்கப்படுகின்றது. பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை மருத்துவ அத்தியட்சகர் வைத்திய கலாநிதி குகதாசன் மீதான ஒழுக்காற்று விசாரணை துரிதப்படாதவிடுத்து வேலை நிறுத்தப் போராட்டத்தில் நாம் மீண்டும் குதிக்க நேரிடும் என வடமாகாண அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் அறிவித்துள்ளது. (ம-9)

## வெள்ளை வானில்...

வெள்ளை வான்களில் தூக்கிச் சென்று கொலை செய்ய மாட்டோம் எனவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் நேற்றைய தினம் உரையாற்றிய போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் கூறுகையில்,

இந்தக் காலத்தில் எந்தவொரு நபருக்கும் எந்தவொரு காலத்திலும் வேலை நிறுத்தப் போராட்டங்களை நடத்த முடியும். நாடாளுமன்றிற்கு எதிரில் வந்தும் போராட்டங்களை நடத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறு போராட்டம் நடத்துவோரை வெள்ளை வான்களில் தூக்கிச் சென்று நாம் கொலை செய்வதில்லை என்றார். (ம)

## வவுனியாவிலிருந்து...

வாகன விபத்துக்களில் பல நூற்றுக்கணக்கானவர்கள் அநியாயமாக உயிரிழந்துள்ளனர்.

இறந்தவர்களில் பெரும்பாலானவர்கள் வெளிநாடுகளில் இருந்து வந்தவர்கள். மிகப் பெரும்பான்மையான விபத்துக்கள் ஏ9 வீதியோரங்களில் இரவு நேரங்களில் நிறுத்தி வைக்கப்பட்ட வாகனங்களுடன் மோதியதனாலேயே ஏற்பட்டது. கடந்த 2018.08.06 ஆம் திகதி இயக்கச்சியில் இடம்பெற்ற விபத்து.இதற்கான அண்மைய உதாரணம் ஆகும்.

எனவே வவுனியாவிலிருந்து யாழ்ப்பாணம் வரையான ஏ9 வீதியின் இருமருங்கிலும் வாகனங்கள் தரித்து நிற்பதைத் தடுத்து நிறுத்துவதற்கான தீவிர நடவடிக்கைகளை பொலிஸ் உத்தியோகத்தர்கள் மேற்கொள்ள வேண்டும் என பொலிஸ்மா அதிபரையும், வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் யாழ்ப்பாண பிரதி பொலிஸ்மா அதிபர்களுக்கு தெரியப்படுத்துவதோடு.

ஏ9 வீதியில் பொருத்தமான இடங்களில் வீதிக்கு அப்பால் வாகனத் தரிப்பிடங்களை ஏற்பாடு செய்வதற்கு வட மாகாண வீதி அதிகாரசபை மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் நடவடிக்கை எடுப்பதற்கான பணிப்புரைகளை முதலமைச்சர் வழங்க வேண்டும் எனவும் தற்செயலாக இயந்திரக் கோளாறு ஏற்பட்டால் சம்பந்தப்பட்ட வாகனத்திற்கு 30 மீற்றருக்கு அப்பால் பின்புறமாக சிவப்பு ஒளி வீசும் முக்கோண ஒளிர்திகளை வைப்பதற்கான ஏற்பாடுகள் சகல வாகனங்களிலும் இருப்பதற்கான ஏற்பாடுகளை உறுதி செய்வதற்கான விதிகளை உருவாக்குவதற்கான நடவடிக்கைகளை வட மாகாண போக்குவரத்து அதிகாரசபை மேற்கொள்ள வேண்டும் எனவும் முன்மொழியப்பட்டது.

குறித்த பிரேரணைக்கு சார்பாக பல உறுப்பினர்கள் தமது கருத்துக்களை முன்வைத்திருந்தனர். இந்த பிரேரணை அனைத்து உறுப்பினர்களாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டு தீர்மானமாக நிறைவேற்றப்பட்டது. (ம-9)

## திலீபனின் நினைவிடத்தை...

நல்லூரில் அமைந்துள்ள தியாக தீபம் திலீபனின் நினைவிடத்தை சூழ பாதுகாப்பு வேலிகள் யாழ்.மாநகர சபையினரால் அமைக்கப்பட்டுள்ளது. இவ் நினைவுத் தூபியானது போர்க் காலப் பகுதியில் இராணுவத்தினரால் உடைக்கப்பட்டு தற்போது தூபியின் அடிப்பாகங்களே மிஞ்சியுள்ளன.

நல்லூர் ஆலய மகோற்சவ காலங்களில் அப்பகுதிகளில் வியாபார நடவடிக்கைகள் மேற்கொள்ளுவோராலும் ஆலயத்திற்கு வருவோர்களாலும் அதன் புனிதத் தன்மை பாதிக்கபடுகின்றது என்றும் அதனைச் சூழ பாதுகாப்பு வேலி அமைக்க வேண்டும் எனவும் யாழ்.மாநகர சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இதன் அடிப்படையில் நேற்று தூபியைச் சூழ பாதுகாப்பு வேலி அமைக்கப்பட்டது. எதிர்வரும் 16ம் திகதி நல்லூர் ஆலய மகோற்சவம் ஆரம்பமாகவுள்ளமை குறிப்பிடதக்கதாகும். (ம-9)

## கடமைகளை நிறை...

ஆணைக்குழுவின் பணிகளையும் தமது நாடு உறுதி செய்யும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளதாக இந்த இணையம் கூறியுள்ளது. (ம)

## அரசும் பாதுகாப்பு...

மன்ற உறுப்பினர் எஸ்.சிறீதரன் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று சுயாதீன ஆணைக்குழுக்களின் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்களின் சம்பள மற்றும் ஏனைய கொடுப்பனவு குறித்த பிரேரணை சேர் பெறுமதி வரி (திருத்த) சட்டமூலத்தின் இரண்டாம் மதிப்பீடு மீதான விவாதத்தில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில்,

வடக்கில் எமது மக்களின் சுயதொழில் பறிக்கப்பட்டு வருகின்றது. விவசாயம் செய்ய முயற்சித்தால் அதில் இராணுவத்தின் ஆக்கிரமிப்பு உள்ளது. மீன்பிடிக்கு சென்றால் அங்கும் தென்பகுதி சிங்கள மீனவர் ஆக்கிரமிப்பு உள்ளது. சுனாமியாலும் யுத்தத்தாலும் பாதிக்கப்பட்ட எமது மக்கல் இன்றும் வாழ்வாதார நிலைமைகளை முன்னெடுக்க முடியாது போராட வேண்டியுள்ளது.

கடன்களில் எமது மக்கள் நெருக்கப்பட்டு அன்றாடம் போராடி வருகின்றனர். சுய தொழிலில் ஈடுபட முடியாத நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது இவை அனைத்துமே அரசாங்கதின் திட்டமிட்ட செயலாகவே கருத வேண்டும். இராணுவத்தையும் கடற்படையையும் வைத்து கொண்டு எமது பிரதான தொழில் பறிக்கப்படும் நிலைமை ஏற்பட்டுள்ளது. ஆகவே எமது மக்கள் எதிர்பார்க்கும் சாதாரண வாழ்க்கையை வாழ அரசாங்கம் இடமளிக்க வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார். (ம)

## சகல உரிமைகளும்...

மனிதாபிமான செயற்பாடுகளை முன்னெடுப்பதற்காக இலங்கைக்கு வருகை தந்துள்ள ஹரே மேயர் கரீமா மரிக்கார் வழங்கிய விசேட செவ்வியிலேயே இதனைத் தெரிவித்துள்ளார்.

இதன்போது தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர்,

இலங்கையில் வசிக்கின்ற அனைத்து மக்களும் சரி சமமான முறையில் பார்க்கப்பட வேண்டும். இதன் ஊடாகவே மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வினை பெற்றுக்கொள்ள முடியும்.

அத்துடன், யாழ்ப்பாணத்தினை அபிவிருத்தி செய்வதன் ஊடாக தமிழ் மக்களின் பிரச்சினைக்கு தீர்வினை காண முடியும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ம)

## மாகாண சபை தேர்தலை...

இருப்பதாகவும், தேர்தலினை நடத்தக் கோரி ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்படுவதாகவும், அவை அடக்குமுறைகளுக்கு உள்ளாக்கப்படுவதில்லை எனவும், ஊடக சுதந்திரம் உறுதி படுத்தப்பட்டுள்ளதாகவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இதன்போது குறிப்பிட்டார்.(ம)

## காணாமல் ஆக்கப்பட்...

அமைச்சின் அலுவலகத்தில் நேற்று வியாழக்கிழமை மாலை இடம்பெற்றது.

காணாமல் ஆக்கப்பட்டோரின் விடயங்கள் தொடர்பில் வவுனியா மாவட்ட உண்மை மற்றும் சமூக நல்லிணக்க மன்றம் வட மாகாண அமைச்சர் அனந்தி சசிதரனை சந்தித்து கலந்துரையாடியிருந்தது.

இச்சந்திப்பில் வடக்கில் உள்ள காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளை ஒன்றிணைத்து ஒரு கட்டமைப்புக்குள் செயற்பட வைப்பது தொடர்பாகவும் காணாமல் ஆக்கப்பட்டோரின் விபரங்களை அமைச்சின் ஊடாக திரட்டி அவற்றை ஆவணப்படுத்தும் பொறி முறையை உருவாக்குவது தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது. (ம)

## பெறுமதிசேர்...

காரணத்தினால், விவாதம் பாதியிலேயே முடிக்கப்பட்டு நேற்று காலை 10 மணி வரை சபை ஒத்திவைக்கப்பட்டது.

இந்தநிலையிலேயே நேற்று பெறுமதி சேர்க்கப்பட்டவரி திருத்தச்சட்டமூலம் தொடர்பிலான இரண்டாம் வாசிப்பின் மீதான விவாதம் இடம்பெற்று, திருத்தங்களுடன் நிறைவேற்றப்பட்டுள்ளது.

மேலும் நாடாளுமன்றில் கூட்ட மதிப்பெண்ணுக்கான உறுப்பினர்களின் எண்ணிக்கை இல்லாதமையினால் நாளை காலை 10 மணி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

## ஆளுநர்-முதலமைச்சர்...

ர்பாக அவசர கோரிக்கை ஒன்றை எதிர்க்கட்சி தலைவர் தவராசா நேற்று சபையில் கொண்டு வந்தார். மாகாண சபையில் தற்போது உள்ள அமைச்சார்கள் யார் என அறிவிக்க வேண்டும். இல்லை என்றால் முதலமைச்சர் மற்றும் டெனீஸ்வரன் மாத்திரம் தான் வகைகூற முடியும் ஏனையவர்கள் பதில் கூற முடியாது. தொடர்ந்தும் மாகாண சபையை அர்த்தமற்ற வகையில் நடத்திச் செல்ல முடியாது என தெரிவித்தார்.

அதற்கு பதிலளித்த அவைத்தலைவர், அமைச்சரவை நியமனம் தனியாக செய்ய முடியாது ஆளுநர் முதலமைச்சர் இருவரும் சேர்ந்து தான் வழங்க முடியும். ஆலோசனை முதலமைச்சராலும் நியமனம் ஆளுநராலும் வழங்க முடியும்.

தற்போதுள்ள அமைச்சர் சபை மேல் முறையட்டு நீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில் எண்ணிக்கைக்கு மீறியது. நியமன அதிகாரிகளான அவர்கள் அதை முறைப்படுத்த வேண்டும்.

அதாவது நீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில் அமைச்சரவை எண்ணிக்கையில் பொருத்தமான நடவடிக்கை எடுக்கும் பொறுப்பு ஆளுநருக்கும் முதலமைச்சருக்கும் உண்டு. அதை அவர்கள் செய்ய வேண்டும் என சபை தீர்மானித்துள்ளதாக தெரிவித்தார். குறித்த தீர்மானத்தை முதலமைச்சர் மற்றும் ஆளுநருக்கு அனுப்பிவைப்பதாகவும் தெரிவித்தார். (ம-9)

## எதிர்க்கட்சியினர்...

அமர்வு நேற்று இடம்பெற்றது. அதில் அமைச்சரவை தொடர்பான விவாதம் ஆரம்பித்தது. அப்போது ஆளும் கட்சி உறுப்பினர்களிடையே வாக்குவாதம் ஏற்பட்ட போது எதிர்க்கட்சியினர் தமது எதிர்ப்பை வெளியிட்டனர்.

குறித்த விடயத்தை நிறுத்துமாறு கோரினார்கள்.. ஆனால் தொடர்ந்து வாக்குவாதம் இடம்பெற்றபோது, இந்த அவையில் ஆளும் கட்சிக்குள்ளேயே எதிர்க்கட்சி உருவாகியுள்ளது. எனவே எதிர்க்கட்சியாகிய எமக்கு இங்கு வேலை இல்லை. அதனால் வெளி நடப்பு செய்கிறோம் என தெரிவித்து வெளியே சென்றார்கள். (ம-9)

## சட்டமா அதிபரிடம்...

ள்ளது.

குறித்த சர்ச்சைக்குரிய விடயம் தொடர்பாக இதுவரை 70 க்கும் அதிகமானவர்களிடம் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளதாக திட்டமிடப்பட்ட குற்றங்கள் குறித்த விசாரணை பிரிவு அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

## மேன்முறையீடு மீள்பரி...

மனுவை பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ள உச்ச நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

இதுதொடர்பிலான மனு ஈவா வனசுந்தர, நலின் பெரேரா, பிரசன்ன ஜயவர்தன ஆகிய நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் நேற்று வியாழக்கிழமை பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போதே குறித்த மேன்முறையீட்டு மனுவை எதிர்வரும் டிசம்பர் மாதம் 13ஆம் திகதி மீள்பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ள நீதியரசர்கள் குழாம் தீர்மானித்துள்ளது.(ம)

## நாடாளுமன்றில் கருணாநிதி...

வில் நாடாளுமன்ற உறுப்பினர் திலகராஜ் இவ்வாறு அஞ்சலி செலுத்தி, அவர் தொடர்பான உரையொன்றையும் ஆற்றியுள்ளார்.

சுயாதீன ஆணைக்குழுக்களின் தலைவர்களுக்கான சம்பளத்தை அதிகரிப்பது தொடர்பான பிரேரணை மீதான விவாதத்தின் போது, இவ்வாறு கருணாநிதிக்கு அஞ்சலி செலுத்தி உரையாற்றினார்.

இலங்கை பொருளாதாரத்தில் பெரும் பங்களிப்பு செய்த மலையக மக்கள் சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தம் ஊடாக திருப்பி அனுப்பப்பட்ட போது, அவர்களை வரவேற்று இந்தியாவில் மறுவாழ்வளித்த விடயத்தில் கலைஞருக்கு பெரும் பங்கு உண்டு என்று இதன்போது குறிப்பிட்டார். (ம)

## நாடாளுமன்றில்...

ப்படையில் பெரும்பான்மை வாக்குகளுடன் சட்டமூலம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

உள்நாட்டு விசாரணைகளில் வெளிநாடுகள் தலையிடும் வகையில் குறித்த சட்ட மூலம் கொண்டுவரப்பட்டதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஒன்றிணைந்த எதிரணியினர் எதிர்ப்பு தெரிவித்து வந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

### நீரோகா

திகதி 2018/08/09

சீட்டிழுப்பு இலக்கம் 431

| லக்கினம் | வெற்றி இலக்கங்கள் | | | | போனஸ் இலக்கம் |
|---|---|---|---|---|---|
| சிம்மம் | 23 | 28 | 38 | 53 | 69 |

தேசிய லொத்தர் சபை

### மஹஜன சம்பத

திகதி 2018/08/09

சீட்டிழுப்பு இலக்கம் 3720

ஆங்கில எழுத்து U — வெல்லப்பட்ட இலக்கங்கள் 8 2 0 3 0 1

தேசிய லொத்தர் சபை

### கொவிசெத

திகதி 2018.08.09

சீட்டிழுப்பு இலக்கம் 1846

ஆங்கில எழுத்து V — வெல்லப்பட்ட இலக்கங்கள் 04 44 52 55

தேசிய லொத்தர் சபை

### வாசனா சம்பத

சீட்டிழுப்பு இலக்கம் 1504 திகதி 2018/08/09

T K G

வெற்றி இலக்கங்கள் 21 30 58 73 — போனஸ் இலக்கம் 25

தேசிய லொத்தர் சபை

நடமாடும் மிருக வைத்திய சேவை
குரும்பசிட்டி தெல்லிப்பழைக்கு அண்மை யில் மிருக வைத்திய தேவைகளுக்கு.
தொடர்பு Dr.K. கிருபாகரன்
077 973 8802
குரும்பசிட்டி, தெல்லிப்பழை.

## விரைவு பொதிகள் சேவை
### விசேட விலை குறைப்பு



UK - 550 /=Kg
கனடா - 900 /=Kg
ஜேர்மனி - 700 /=Kg
நெதர்லாந்து - 700 /=Kg

DELIVERY IN 3 - 5 DAYS

0768226240

● மானிப்பாய் ● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை

V2 TRAVELS

## Wanted Clerk

Able to handle accounts.
Fluency in English.
Experience will be considered.
Forward your application along with your CV, photograph and contact number.

**154, Brown Road, Jaffna.**
**Or send E-mail to :-**
**aerolankajaf@ gmail.com**
**Contact No-0212226242**

(C-3475)

## விற்பனைக்கு

யன்மார் 2 சிலிண்டர் வள்ள எஞ்சின் ஸ்டாண்டட் கிறாங், யப்பான் கெட், பெயரிங், தரமான போர் இயங்கு நிலையில் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 0773573055
வேம்படி, வல்வெட்டித்துறை

## வெளிநாடுகளுக்கான பொதிகள் சேவை

11 kg மேற்பட்ட பொதிகளுக்கு 1 kg க்கான கட்டணம்

UK-550/-
France - 700/-
Germany - 650/-
Swiss - 750/-
Canada - 1100/-

ஏனைய நாடுகளுக்கும் விசேட விலைக் கழிவு பொதிகள் அனுப்பி வைக்கப்படும்

சகல நாடுகளுக்குமான விசா விண்ணப்ப ஏற்பாடுகள் நிபுணத்துவம் வாய்ந்தவர்களுடாக செய்து கொடுக்கப்படும்

திருமுருகன் கொம் நெற் (பிறைவெட்) லிமிடெட்

077 755 4528

3-5 Working Days

DHL aramex SKYNET

## கணனி திருத்தம்

**IPhone, IPad, ICloud Unlock**

☞ உங்கள் கணனிகள், Laptop பழுதடைந்து விட்டதா? உங்கள் வீடுகளுக்கே வந்து திருத்தித் தருகின்றோம்.

மற்றும் கணனிகள் விற்றல், வாங்குதல்.

தொடர்புகளுக்கு:- ALM Computer System
077 243 8537

(5395)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

A.Dilshan ஆகிய என்னை மிகக்குறுகிய காலத்தில் இரண்டு மாதங்களில் ஜேர்மன் நாட்டு மொழி DEUTSCH இனை எனக்கு கற்பித்து Deutsch A1 பரீட்சையில் சிறந்த புள்ளியை பெறவைத்த வடமராட்சியின் பிரபல ஆசிரியர் T.Nanthan அவர்களை மனதார பாராட்டுகின்றோம். நீங்களும் சிறந்த புள்ளிகளை பெற எமது ஆசிரியரை தொடர்பு கொள்ளவும்.

**J.V. Language Center**
மந்திகை
தொடர்பு: 077 078 2022

(C-3473)

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

## பருத்தித்துறையில் வேலைவாய்ப்பு
## Sun Spicy Family Restaurant

பருத்தித்துறையில் இயங்கிவரும் எமது ரெஸ்ரோரண்டுக்கு கீழ்வரும் வேலைகளுக்கு அனுபவமுள்ள மற்றும் பழக விரும்புவர்களும் உடனடியாக தேவைப்படுகின்றனர்.

- **உணவு பரிமாறுபவர்கள் / Steward**
  45 வயதுக்குட்பட்ட ஆண்/பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
- **சமையலறை உதவியாளர்கள் / Kitchen Helpers**
  45 வயதுக்குட்பட்ட ஆண்/ பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

**சம்பளம்** : ஊழியர் சேமலாப, நம்பிக்கை நிதிய பங்களிப்புடன் தகுதிக்கேற்ப கவர்ச்சியான சம்பளம் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு:
**சூரிய மஹால் Sun Digital (Pvt) Ltd,**
பிரதான வீதி, பருத்தித்துறை.
தொ.பே: 077 315 1654

(சி-3478)


# மரண அறிவித்தல்



## ஆறுமுகம் சண்முகம் (புறோக்கர்)

நெடுந்திவு கிழக்கை பிறப்பிடமாகவும், இல.642,7-ம் யூனிற், இராமநாதபுரம், கிளிநொச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் சண்முகம் (புறோக்கர்) அவர்கள் நேற்று (09.08.2018) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - சேதுப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும், தம்பிஜயா - காலஞ்சென்ற கனகம்மா தம்பதியினரின் மருமகனும், சுந்தராம்பாள் அவர்களின் அன்புக் கணவரும், சசிகலா (பிரான்ஸ்), யோககலா (விசி -கல்மடு), நவநீதன் (லண்டன்), ஜெயகலா (திருநகர்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சண்முகராசா (ஈசன் - பிரான்ஸ்), விக்கினராசா (கல்மடுநகர்), றஜீவி (லண்டன்), அமிர்தமந்திரன் (திருநகர், link மட்டக்களப்பு) ஆகியோரின் மாமனாரும், தங்கம்மா (ஓய்வுநிலை அதிபர்- இராமநாதபுரம் கிழக்கு அ.த.க.பா), காலஞ்சென்றவர்களான திருநாவுக்கரசு, பூரணம் (பூபதி) மற்றும் நவரத்தினம் (10ஏக்கர், கல்மடுநகர்) ஆகியோரின் சகோதரனும், வினுஷா, சானுஜா, ஜதுர்ஷன், பானுஜா, சதுர்சன், பிரஜித், தனுத்திரா, பிரம்மியா, சுதர்சியா, தர்மியா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.08.2018) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அன்னாரின் தற்காலிக வசிப்பிடமான இல.1038A, திருநகர் தெற்கு, கிளிநொச்சியில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் திருநகர் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்
076 672 0474 (ஜெயா),
077 739 5242 (அமுதன்),
077 948 1537 (விஜி)

7-ம் யூனிற்,
இராமநாதபுரம்,
கிளிநொச்சி.

(சி-3477)


## மாபெரும் மாட்டுவண்டி சவாரி போட்டி - 2018

புளியங்கூடல் மகாமாரி விளையாட்டுக் கழகமும் புளியங்கூடல் மகாமாரி சனசமூக நிலையமும் இணைந்து நடத்தும் மாபெரும் மாட்டுவண்டி சவாரிப் போட்டி.

**இடம் : புதுவெளி சவாரித் திடல், புளியங்கூடல்**
**காலம் : 12.08.2018 ஞாயிற்றுக்கிழமை**
**நேரம் : பிற்பகல் 1.00 மணி**

அ, ஆ, இ, ஈ பிரிவுகளில்

1-ம் இடம் பெறும் காளைகளுக்கு தங்கப்பதக்கங்கள்.
2-ம் இடம் பெறும் காளைகளுக்கு 24” LED தொலைக்காட்சிகள்.
3-ம் இடம் பெறும் காளைகளுக்கு மிக்ஷிகள் (Blander/mixi)
4-ம் இடம் பெறும் காளைகளுக்கு மின்விசிறிகள்.
என்பவற்றுடன் மேலும் பல ஆறுதல் பரிசுகள்.

வடக்கு மாகாணத்தின் முன்னணி காளைகளின் ஆக்ரோஷ போட்டியைக் காண புதுவெளி சவாரித்திடலுக்கு அணிதிரள்வீர். தமிழரின் பாரம்பரிய விளையாட்டுக்களை மேம்படுத்தும் எமது முயற்சிக்கு கரம் கொடுப்பீர்





தொடர்பு:
077 236 5642,
077 732 2488

(5300)

மகாமாரி விளையாட்டுக்கழகமும் சனசமூக நிலையமும் புளியங்கூடல்

CSE COLOMBO STOCK EXCHANGE

## பங்குச்சந்தை முதலீட்டு ஆர்வலர்களுக்கான
## Seminar on Fundamental Analysis

எதிர்வரும் 11 ஆம் திகதி (சனிக்கிழமை) காலை 9.30 – 11.30 வரை. முன்பதிவுகளுக்கு

021 222 1455 / 077 782 2014
Type stock & send sms

பதிவுக்கட்டணம் 500/=
வாருங்கள் முதலீடுகள் பற்றிய அறிவை வளர்ப்போம்

147-2/3, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

(C-3461)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 10.08.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.